விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 தை 05 வெள்ளிக்கிழமை (18.01.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 030

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## ஷிராணி பதவி நீக்கம் அமெரிக்கா அதிருப்தி!

(வாஷிங்டன்) இலங்கையின் தலைமை நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை பதவி இறக்குவதற்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான நிபந்தனைகளின் அடிப்படையில் திருப்திகரமானவையல்ல என்று அமெரிக்கா அரசுதுறையின் பேச்சாளரான விக்டோரியா நூலண்ட் தெரிவித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)



## இலங்கைக்கு ஊடக சுதந்திரத்தில் 163 வது இடம்

ஊடகவியலாளர்களுக்கான எல்லையற்ற அமைப்பு 2011-2012 ஆம் ஆண்டுகளை அடிப்படையாகக் வைத்து ஊடக சுதந்திரம் தொடர்பாக மேற்கொண்ட தரவரிசையில் இலங்கை 163ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது.

குறித்த தரவரிசைப் பட்டியலில் 179 நாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதன்படி உலகில் சிறப்பான ஊடக சுதந்திரம் நிலவும் நாடாக பின்லாந்து இனம்காணப்பட்டுள்ளது.

இதனைத் (19ஆம் பக்கம் பார்க்க)

## தப்பியது ஈரானிய கப்பல்

உயர்நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் இலங்கை கடற்படையினால் பல வாரங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஈரானிய சரக்குக் கப்பல் ஒன்று தப்பிச் சென்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் எந்தக் குற்றத்திலும் ஈடுபடாததால் கரையில் இருந்து 12 கடல் மைலுக்கு அப்பால் தப்பிச் சென்று விட்ட ஈரானியக் கப்பலை ஐ.நா. சட்டங்களின்படி தம்மால் ஒன்றும் செய்ய முடியாது போய் விட்டதாக கடற்படைப் பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய கைவிரித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## வர்த்தக கண்காட்சி இன்று ஆரம்பம்

JITF 2013 JAFFNA INTERNATIONAL TRADE FAIR 4th Edition

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக கண்காட்சி இன்று முதல் 3 தினங்கள் யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

உள்நாடு மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த பல (19ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா மௌனம்

(கொழும்பு)

புதிய பிரதம நீதியரசர் நியமனம் குறித்து தற்போதைக்கு கருத்து எதனையும் வெளியிடப் போவதில்லை என ஐக்கிய நாடுகள் அமைப்பு அறிவித்துள்ளது. நீதிமன்றக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து தெரியும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை நிலைமைகள் குறித்து ஊடகங்கள் மூலம் அறிந்து கொண்டதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச்செயலாளர் பான் கீ மூனின் பேச்சாளர் மார்டீன் நெசர்கீ தெரிவித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## 58 ஆயிரம் மிதிவெடிகள் கிளிநொச்சியில் மீட்பு!

கிளிநொச்சி மாவட்டத்தில் போர் முடிவுக்கு வந்த பின்னர் 58 ஆயிரத்து 586 தனிநபர் மிதிவெடிகளும் 148 தாங்கி எதிர்ப்பு மிதிவெடிகளும் மீட்கப்பட்டதாக வடபிராந்திய மிதிவெடி செயற்பாட்டு அலுவலக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 2009ஆம் வருடம் முதல் 2012 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியிலேயே பல்வேறு மிதிவெடி அகற்றும் நிறுவனங்களால் இவை மீட்கப்பட்டுள்ளன.

இதன்படி இதுவரை கிளிநொச்சி மாவட்டத்தில் மொத்தமாக 356 வேலைப் பகுதிகளில் 9 கோடி 47 இலட்சத்து 82 ஆயிரத்து 450 சதுர மீற்றர் பகுதி அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதில் 195 வேலைப் பகுதியில் 7 கோடி 52 இலட்சத்து 10 ஆயிரத்து 87 சதுர மீற்றர் பகுதியானது முழுமையாக கண்ணிவெடி அகற்றப்பட்டுள்ளது. 161 வேலைப் பகுதியில் ஒரு கோடி 95 லட்சத்து 72 ஆயிரத்து 363 சதுர மீற்றர் பகுதியில் (19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் முன்னேற்றத்திற்கு உதவத் தயார்- இந்தோனேசியா

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு தேவையான சகல ஒத்துழைப்புகளையும் வழங்க இந்தோனேசியா அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது.

ஏற்றுமதி, முதலீடு மற்றும் சுற்றுலா அபிவிருத்தி ஆகிய துறைகளில் இலங்கையை முன்னேற்றம் அடையச் செய்வதற்கான சகல ஒத்துழைப்பையும் இந்தோனேசிய அரசாங்கம் வழங்கும் என இலங்கைக்கான இந்தோனேசியப் புதிய தூதுவர் ஹரிமவான் சுயிட்னோ உறுதியளித்துள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவை இந்தோனேசியத் தூதுவர் நேற்றுமுன்தினம் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இச்சந்திப்பின்போது, இலங்கையின் மீன்பிடித்துறைய்ய அபிவிருத்தி செய்வதற்கு இந்தோனேசியா அரசு உதவி வழங்க வேண்டும் என அமைச்சர் கோரிக்கை விடுத்தார்.

குறிப்பாக, இலங்கை மீனவர்களுக்கு அத்துறையில் விசேட பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும் எனவும் (19ஆம் பக்கம் பார்க்க)

## நீதவான்கள், சட்டத்தரணிகளுக்கு மரண அச்சுறுத்தல் - மங்கள

நீதிவான்கள் மற்றும் சட்டத்தரணிகளுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு எதிராக செயற்பட்ட சட்டத்தரணிகள் மற்றும் நீதிவான்களுக்கு எதிராக இவ்வாறு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறைத்தண்டனை அனுபவித்து வந்த பிரபல பாதாள உலகக் கோஷ்டி உறுப்பினரான பொல்பின் சந்தன எனப்படும் வத்தே சந்தன அண்மையில் விடுவிக்கப்பட்டுள் ளார்.

சிரேஷ்ட சட்டத்தரணி ஜே.சீ.வெலியமுன மீது தாக்குதல் நடத்தும் நோக்கிலேயே இவ் விடுதலை இடம்பெற்றுள்ளது.

வீதி விபத்தைப் (19ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றைப் பலப்படுத்தி அரசியலமைப்பு திருத்தப்படும்!

### அரசாங்கம் அறிவிப்பு

1987ஆம் ஆண்டு தமிழர் பிரச்சினைக்காக 13-வது திருத்தம் மேற்கொள்ளப்பட்டதைப் போன்று தற்போதைய பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் அரசியல் அமைப்பில் திருத்தம் மேற்கொள்ளப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இவ்வாறு தெரிவித்தார்.

புதிய பிரதம நீதியரசரின் பதவிக் காலம் 5 வருடங்களாக மாற்றியமைக்கும் வகையில் இந்த நாட்டிலே அரசியல் யாப்பில் திருத்தங்கள் கொண்டுவரப்படவுள்ளதாக செய்திகள் வெளியாகும் நிலையில், அரசியல் யாப்பில் திருத்தங்கள் (19ஆம் பக்கம் பார்க்க)

யாழ்.சர்வதேச வர்த்தகக் கண்காட்சி

18.19.20 ஆம் திகதிகளில், துரையப்பா விளையாட்டரங்கில் அமைந்துள்ள எமது நியூ நெல்சன் லேணர்ஸ்
'A' தரமுதன்மைச் சாரதிப் பயிற்சிப் பாடசாலை அலுவலகத்தில் சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு
பதிவு செய்யும் அனைவருக்கும் மருத்துவச் சான்றிதழ் இலவசம்.



NEW NELSON LEANERS
NNL DS 590

நியூ நெல்சன் லேணர்ஸ்

இல. 89. கண்டி வீதி. சுண்டுக்குளி. யாழ்ப்பாணம்.
021 222 4527. 0773581916. 0777906064.

பஸ்நிலையம். சுன்னாகம்
021 492 3732

இராமலிங்கம் வீதி.
சாவகச்சேரி. 0214923114

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# WEDDING GREETINGS

(18th Jan 2013)

Selvan Thanalojan — Selvi Thanushya

Congratulations

Wish your Happy Married Life

God Bless You Always

With Love.
Sellathurai Bavani (Sithi)
(Instructor)

(C-2149)


# நடத்துநர்களிடையே முரண்பாடு நான்கு பேர் கைதாகினர்

(குருமன்காடு)

தனியார் பஸ் சேவையைச் சேர்ந்த நால்வர் வவுனியா பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற தனியார் பஸ் நடத்துநருக்கும் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லத்தயாராக இருந்த தனியார் பஸ் நடத்துநருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டையடுத்தே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து வந்த பஸ் நடத்துநர் தமது 5 ஆயிரம் ரூபாய் பணத்தினையும் சிட்டைப் புத்தகத்தையும் வவுனியா தனியார் பஸ் நடத்துநர் பறித்ததாக பொலிஸில் முறையிட்டதைத் தொடர்ந்தே வவுனியாவைச் சேர்ந்த பஸ் சாரதி, நடத்துநர்கள் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக வவுனியா தனியார் பஸ் சங்க தலைவர் இராஜேஸ்வரனை தொடர்பு கொண்டபோது, கொழும்பில் இருந்து யாழ். நோக்கி வந்த பஸ்ஸை சாரதி தமது தரிப்பிடத்தில் யாழ்.நோக்கி செல்வதற்கு தயாராக இருந்த பஸ்ஸுக்கு முன்னால் நேற்று அதிகாலை 3.30க்கு நிறுத்தியுள்ளார்.

அத்தோடு விதிமுறையை மீறி பயணிகளை ஏற்றியும் உள்ளார்.

இம்முரண்பாடு காரணமாகவே அந் நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பணத்தையும் சிட்டைப் புத்தகத் தையும் பறிக்கவில்லை, இவ்விடயத்தில் பொலிஸார் பக்கச் சார்பாக செயற்படுகின்றனர்.

அவர் களை உடனடியாக விடுதலை செய்யாது விடின் தனியார் பஸ் சேவை பணிப் புறக்கணிப்பில் ஈடுபடும் எனவும் இராஜேஸ்வரன் தெரிவித்தார். (செ-250)

# நல்லூர் பிரதேச சபை

## அகலம் குறைந்த வீதி வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் -2013

கீழ்வரும் வேலைகளிற்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் கோரப்படுகின்றன. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்திப் படிவத்தைப்பெற்றுக் கொள்ளலாம்.

01. கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி 18.01.2012 தொடக்கம் 31.01.2013 பி.ப 4.00 மணிவரை
02. கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி: 01.02.2013 மு.ப.10.00 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி: 01.02.2013 மு.ப 10.30 மணிக்கு (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
04. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு உரிமை உண்டு.
05. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கல்வியாற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.
06. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தக்காரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப்புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
07. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை 'தலைவர்/செயலாளர், நல்லூர் பிரதேச சபை, கருவப்புலம் வீதி, கொக்குவில்' என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியிலோ இட வேண்டும். மறு பிரதியை, 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்' என்ற விலாசத்திற்கு 2-ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
08. பின்வரும் வீதிகள் அகலம் குறைந்த வீதிகள் ஆகையால் 5 தொன்னுக்கு மேற்பட்ட உருளை (Vibrating Roller)பயன்படுத்த வேண்டும் என்பது கட்டாயமானது. மேலதிக விபரங்களை நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| தொ. இல | வேலைவிபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் (VAT, NBT நீங்கலாக) | இருக்க வேண்டிய ஆகக்குறைந்த ICTAD தரம் |
|---|---|---|---|---|
| 01 | செம்பாட்டு ஒழுங்கை -கொக்குவில் கல்லிட்டுத் தாரிடல் | 2060.00 | 500.00 | M10/C10 |
| 02 | புதுக்கோட்டை ஒழுங்கை-கோண்டாவில் கல்லிட்டுத் தாரிடல் | 4760.00 | 500.00 | M10/C10 |
| 03 | ஆலடி 1ம் ஒழுங்கை-கோண்டாவில் கல்லிட்டுத் தாரிடல் | 2360.00 | 500.00 | M10/C10 |
| 04 | ஆலடி 2-ம் ஒழுங்கை-கோண்டாவில் கல்லிட்டுத் தாரிடல் | 1940.00 | 500.00 | M10/C10 |
| 05 | செங்குந்தா 1-ம் ஒழுங்கை-கல்வியங்காடு கல்லிட்டுத் தாரிடல் | 1720.00 | 500.00 | M10/C10 |
| 06 | நீதிராஜா குறுக்கு ஒழுங்கை-கொக்குவில் கல்லிட்டுத் தாரிடல் | 2840.00 | 500.00 | M10/C10 |
| 07 | சிவகாமி அம்மன் 1-ம் ஒழுங்கை-கோண்டாவில் கல்லிட்டுத் தாரிடல் | 1570.00 | 500.00 | M10/C10 |
| 08 | பத்திரகாளி அம்மன் வீதி, கோண்டாவில் கல்லிட்டுத் தாரிடல் | 2760.00 | 500.00 | M10/C10 |
| 09 | முத்துமாரி அம்மன் வீதி-கோண்டாவில் கல்லிட்டுத் தாரிடல் | 1600.00 | 500.00 | M10/C10 |
| 10 | அம்மன் வீதி 1-ம் ஒழுங்கை-கோண்டாவில் கல்லிட்டுத் தாரிடல் | 1640.00 | 500.00 | M10/C10 |
| 11 | மஞ்சவனப்பதி பின் 1-ம் ஒழுங்கை-கொக்குவில் கல்லிட்டுத் தாரிடல் | 2950.00 | 500.00 | M10/C10 |
| 12 | நாராயணா 1-ம் குறுக்கு ஒழுங்கை-கோண்டாவில் கல்லிட்டுத் தாரிடல் | 4320.00 | 500.00 | M10/C10 |
| 13 | அம்மன் வீதி 2-ம் ஒழுங்கை-கோண்டாவில் கல்லிட்டுத் தாரிடல் | 1840.00 | 500.00 | M10/C10 |
| 14 | வைரவர் கோயில் வீதி-கொக்குவில் கல்லிட்டுத் தாரிடல் | 2280.00 | 500.00 | M10/C10 |
| 15 | சின்னப்பர் வீதி- கொக்குவில் கல்லிட்டுத் தாரிடல் | 1230.00 | 500.00 | M10/C10 |
| 16 | வராகி அம்மன் வீதி- கொக்குவில் கல்லிட்டுத் தாரிடல் | 1340.00 | 500.00 | M10/C10 |
| 17 | வைத்தியசாலை குறுக்கு ஒழுங்கை-கோண்டாவில் கல்லிட்டுத் தாரிடல் | 1680.00 | 500.00 | M10/C10 |

நல்லூர் பிரதேச சபை
கொக்குவில்

(சி-2152)

திரு.ப.வசந்தகுமார்
தவிசாளர்

# கால்கோள் விழா

(சுதுமலை)

யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய தரம்1 மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா இன்று காலை 9.30 மணிக்கு பாடசாலை அதிபர் த.சண்முகசுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய தமிழ் பாட சேவைக்கால ஆலோசகர் திருமதி புவனேஸ்வரியும் கலந்து கொள்ளவுள்ளார்.(செ)

◆ ◆ ◆ ◆ ◆ ◆

(ஏழாலை)

யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் கால்கோள் விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு பாடசாலை கேட்போர் கூடத்தில் மாணவி யோ.தனுஷா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வுக்கு சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர் ப.பார்த்தீபன், ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் ரி.தயாபரராஜா, வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி சி.பாரதி ஆகியோர்கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (செ-2)





பிள்ளையார் இன்

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன்
தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில்
நிறைவான சேவையுடன் மாலையில் வழங்கப்படும்.

25% கழிவு

இன்றைய விசேட உணவு :-

பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

இலவசமாக இஞ்சி சோடா வழங்கப்படும். (இங்கு உணவருந்துபவர்களுக்கு மட்டும்)

(C-1660) தொடர்புகளுக்கு: இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பொதுப்பட்டமளிப்பு விழா

எதிர்வரும் 6.02.2013 அன்று நடைபெறவிருந்த மேற்படி பட்டமளிப்பு விழா தவிர்க்க முடியாத காரணத்தால் 28.02.2013 திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகிறோம். இதனால் தங்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகிறோம்.

பதிவாளர்

(C-2151)

ஓம் விராட் விஸ்வ் பிரமனே நமஹ

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் : 1923.02.14
மறைவு : 2012.12.18



அமரர்
சபாரத்தினம் கந்தையா
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அன்பின் குலவிளக்காய் அறிவின் ஆசானாய்
பண்பின் சிகரமாய் பாசத்தின் திருவுருவாய்
உண்மை நேர்மை உணர்த்திடும் உத்தமரே
கண்ணின் மணியாக எம்மைக் காத்திடும் தெய்வமே

நந்தன வருடம் இன்று 18.01.2013 வெள்ளிக்கிழமை வீட்டுக்கிருத்திய நிகழ்வு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அன்றைய புனித தினத்தில் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்தித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் தங்கள் குடும்ப சகிதம் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

தில்லைச் சிவனார் திருவடி சரணம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!

அன்னாரின் ஆத்மசாந்தி
வேண்டி நிற்கும் பிள்ளைகள்
108 / 1, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

(1475)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிலிபைன்ஸைச் சேர்ந்த ஹன்னா பாசர், ரொபேர்டா மென்சினோ என்ற மொடல் அழகிகள் இருவர் ஆழ்கடலில் சுறாவுடன் நின்று புகைப்படங்களுக்கு போஸ்கொடுத்துள்ள காட்சியானது பலரை வியப்படைய செய்துள்ளது. இவர்கள் மிகப்பெரிய சுறா ஒன்றை சுற்றி சுற்றி நீந்தி வலம்வந்துள்ளனர்.
கடலில் மீன் வேட்டை தொடர்பிலான விழிப்புணர்வுக்காக இவர்கள் இப் புகைப்படங்களை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.
இவர்கள் இருவரும் கடலின் ஆழம்கூடிய பகுதிக்கு சென்று சுமார் 30 அடி நீளமான சுறாவைச் சுற்றி நீந்தியுள்ளனர்.
புகைப்படக் கலைஞரான கிறிஸ்டினா ச்மிட் என்பவர் இவர்களை புகைப்படம் பிடித்துள்ளார். இது நான்கு மாத திட்டமெனா அவர்கள் தெரிவித்துள்ளனர்.

**விளம்பரம் செய்யுங்கள், வியாபாரத்தை பெருக்குங்கள்**
**வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு: T.P - 021 321 0815, 021 567 1540**



மழலைகளுக்கான
விளையாட்டுப் பொருட்களுக்கு 10%
விலைக்கழிவு மற்றும் மழலைகள்
ஆண், பெண்களுக்கான உடைகள்,
100% (Cotton) உடைகள்
சகலவிதமான மழலைகளுக்கான
பொருட்களையும் ஒரே கூரையின்
கீழ்பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்.

**API Baby Mart**
267, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0750519482
& Show Room






சீனாவின் Tianmen மலையில் Heaven's Gate அல்லது சொர்க்கவாசல் எனும் பகுதி நிலத்திலிருந்து 1518 மீற்றர்கள் உயரத்தில் காணப்படுகிறது. இந்த மர்ம வாசலுக்கு செல்வதற்கு படிக்கட்டுகளும் அமைக்கப்பட்டுள்ளன.
இந்த மர்ம வாசலில் 131.5 உயரமும் 57 அகலமும் கொண்ட பாரிய துளை காணப்படுகிறது. இரண்டு சூப்பர் சொனிக் விமானங்கள் இதனுள் சமாந்தரமாக சென்று வரலாம். துளையின் மறுபுறம் பெரிய மலைகளும் திறந்த வெளிகளுமே காணப்படுகின்றன.

**மைக்ரோ கார் யாழ் நகரிற்கு**




**micro**

2013 ஜனவரி மாதம் 18,19,20 திகதிகளில் யாழ். துரையப்பா மைதானத்தில் நடைபெறும் JITF 2013 கண்காட்சிக் கூடத்திற்கு வருகை தந்து ரூபா. 25,000 ஐ செலுத்தி உங்கள் பெறுமதிமிக்க மைக்ரோ காரை பதிவு செய்து கொள்ளுங்கள்.
அன்றைய தினம் யாழ். மக்களுக்கு மைக்ரோ கார் மூலம்

ரூபா. 20,000/=

விசேட விலைக்கழிவு
லீசிங் வசதிகள் மைக்ரோ விற்பனைக்கூடத்தில்

லீசிங் வசதியும் அன்றைய தினத்திலேயே
சதீஸ் 077 5342294
ஷெரீப் 0773523308

* Conditions Apply



இந்தியாவிலே ஜல்லிக்கட்டு பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்று. அன்று முதல் இன்று வரை அழியாமல் கொண்டாப்பட்டு வரும் விளையாட்டு என்றால் அது ஜல்லிக்கட்டுதான்.
இதில் காளைகளை நன்கு வளர்த்து, அந்த காளையின் கொம்புகளில் பணம், பொன் என்பவற்றை கட்டிவிட்டு, காளையை அடக்கி, அவற்றை எடுக்கவேண்டும். இது மிகவும் ஆபத்தான விளையாட்டு. இன்றும் இந்த விளையாட்டைத்தான் பெரும்பாலான இளம் தலைமுறையினர் விரும்பி விளையாடுவார்கள். பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தமிழ்நாட்டின் அலங்கா நல்லூரில் இடம்பெற்ற ஜல்லிக் கட்டின் ஒரு காட்சியே இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## தப்பிக்கும் தாவரங்கள்

ஒரு ஆபத்தில் இருந்து தப்பிக்கொள்ள வேண்டுமென்றால் நாம் என்ன செய்கிறோம். உடனே அவ்விடத்தை விட்டு ஓடிப்போகிறோம். இதேபோல்தான் மிருகங்களும் செய்கிறது. மனிதனுக்கு கால் உள்ளது. அதனால் தப்பித்துக் கொள்கிறான்.

ஆனால், மரம், செடி, கொடிகளுக்கு ஒரு ஆபத்து நேர்ந்தால் உடனே அந்த இடத்தில் இருந்து தப்பி ஓட முடியுமா?

ஆனால்...தாவரங்களுக்கு ஆபத்து நேர்ந்தால் அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு சில வேலைகளைச் செய்வதாக கண்டு பிடித்துள்ளார்கள்.

தென்னாபிரிக்காவிலே பிரிட்டோரியா என்ற இடம் உள்ளது. அங்கே உள்ள தாவரங்களுக்கு ஆராய்ச்சியாளர்களால் ஆராய்வு இடம் பெற்றது. அந்த ஆரர்ய்வில் அவைகள் ஒன்று பேசுவதாகத் தெரியவந்தது.

மொழியில்லாமலே அவையெல்லாம் செய்திகளைப் பரிமாறிக் கொள்கிறது.

இது மிகவும் ஆச்சரியமான ஒரு விடயம் தான்!

தென்னாபிரிக்காவில் கடுமையாக வரட்சி முன்னொரு காலத்தில் ஏற்பட்டது. மேய்வதற்கு புல் கூட கிடைக்காத நிலைமை. மான்கள் கூட்டம் கூட்டமாக இறக்க ஆரம்பித்தது.

இவையெல்லாம் இறந்து போவதற்கான காரணங்கள் ஏன்? என்பது பற்றி ஆராய்ச்சிகள் நடைபெற்றன.

மான் தமது உணவாக அக்கேஷியத் தாவரத்தினை உட்கொண்டுள்ளது. அத்தாவரத்தில் " டானின் " என்ற நச்சுப்பொருள் உள்ளது. இருந்தாலும் விலங்குகளைக் கொல்வதற்குரிய சக்தி அதற்குக் கிடையாது. ஆனால், குறிப்பிட்ட அந்த சமயத்திலே திடீரென விஷப்பொருள் அந்தத் தாவரத்திலே அதிகரித்துள்ளது. அதனால்தான் மான்கள் இறந்து விட்டதாக கண்டுபிடித்தார்கள். அந்த தாவரத்திலேயே திடீரென விஷப்பொருள் அதிகமாக போவதற்கு காரணம் என்ன? இதுதான் ஆராய்ச்சியாளர்களுக்கு ஏற்பட்ட சந்தேகம்.

" எதிரி வருகிறான்; எச்சரிக்கையாக இருக்க வேண்டும்" என்பதை புரிந்து கொள்கிறது. உடனே தனக்குள்ளே இருக்கும் நச்சு உற்பத்தியை அதிகரிக்கிறது. விஷம் அதிகரிக்கும் போது அதைக் கடிக்கும் மிருகங்கள் உயிரிழந்து விடுகின்றன.

ஆகக் கூடி " எதிலீன்" என்ற வாயு ஏன் உற்பத்தியாக்கிறது என்று பார்த்தால் " எதிரிகள் ஜாக்கிரதை" என்ற செய்தியை மற்ற மரங்களுக்குத் தெரிவிக்கிறதாக அறியப்பட்டுள்ளது.

இவையெல்லாம் நாம் கேள்விப்படும் போது " இனிமேல் மரங்களுக்கு அருகில் செல்லும் போது ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்"

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# 19 நன்னீர் மீன்பிடியாளர்களுக்கு வள்ளங்கள் வழங்கப்பட்டன

யு.என்.எச்.சி. ஆர். நிறுவனத்தின் நிதியுதவியுடனும் சேவாலங்கா நிறுவனத்தின் ஒத்துழைப்புடனும் கரைச்சி அழகாபுரி நன்னீர் மீன்பிடித் தொழிலாளர் சங்கத்தினைச் சேர்ந்த 19 மீனவர்களுக்கு தலா 72 ஆயிரம் ரூபா பெறுமதியான வள்ளங்கள் மற்றும் மீன்படி உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்று கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட கரைச்சி அழகாபுரி முன்பள்ளி வளாகத்தில் இடம்பெற்றது.

சுமார் 14 இலட்சம் ரூபா செலவில் இருந்த 19 மீனவர்களுக்கும் தலா 72 ஆயிரம் ரூபா பெறுமதியான கடற்தொழில் உபகாரணங்கள் வழங்கப்பட்டதோடு எதிர் காலத்தில் உதவிகள் வழங்கப்படும் எனவும் ஏற்பாட்டாளர்களினால் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு யு.என்.எச்.சி. ஆர். நிறுவனத்தின் வதிவிடப் பிரதிநிதி விக்டோரியா, சேவாலங்கா நிறுவன பிரதிநிதி முகுந்தன் கரைச்சி கிழக்கு நன்னீர் மீன்பிடிச் சங்கத்தலைவர் இராசேந்திரம், ஈ.பி.டி.பி. கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ-6)

# ஞாயிற்றுக்கிழமைகளில் வர்த்தக நிலையங்களை பூட்டி வைத்திருங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வர்த்தக நிலையங்களில் பணியாற்றும் எமது ஊழியர்களின் நலனை பேணவும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஏனைய தரப்பினரது நலன் பேணவும் தொழில் திணைக்களத்தின் தொடர்ச்சியான அவுறுத்தலுக்கமைவாகவும் வாரத்தில் ஒரு நாளான ஞாயிற்றுக்கிழமை மட்டும் தங்களது வர்த்தக ஸ்தாபனங்களை பூட்டி அனைத்து தரப்பினருக்கும் முற்று முழுதான விடுமுறையாக கணித்து செயற்படுமாறு அனைத்து வர்த்தகர்களையும் யாழ். வணிகர் கழகம் கேட்டுள்ளது.

இதனை மீறி எச்சந்தர்ப்பத்திலும் செயல்பட வேண்டாமெனவும் மருந்தகங்கள் உணவகங்கள் இதற்கு விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளது.

இவ்வறிவித்தல்கள் யாவும் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் நடைமுறைக்கு வருகிறது என்பதையும் வர்த்தகளிற்கும் தெரிவித்துள்ளனர். (அ-2)

# தரம்-6 அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2012 இற்கு தோற்றிய தமிழ்மொழி மூல மாணவர்களுக்கான வெட்டுப்புள்ளியை பாடசாலைகள் ரீதியாக கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

இதற்கமைய அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள தமிழ் மூல பிரபல பாடசாலைகளுக்கான வெட்டுப்புள்ளிகள் வருமாறு,

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி-150, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி-150, யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை 155, கொக்குவில் இந்து கல்லூரி-150. (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 320 | 350 | 320 | 220 |
| உருளைக்கிழங்கு | 75 | 60-80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 150 | 170 | 250 | 200 |
| தக்காளி | 50 | 120 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30-35 | 30 | 40 | 40 |
| கோவா | 50 | 80 | 80 | 90 |
| கரட் | 110-120 | 120 | 140 | 160 |
| பூசணி | 40 | 30 | 60 | 50 |
| புடோல் | 80 | 120 | 80 | 80 |
| வாழைக்காய் | 60-70 | 70 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 80-140 | 150 | 160 | 160 |
| பெரிய வெங்காயம் | 80 | 60-80 | 100 | 90 |
| பாகற்காய் | 240 | 190 | 200 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 50 | 70 | 80 | 80 |
| பயற்றங்காய் | 240 | 280 | 200 | 160 |
| லீக்ஸ் | 120 | 130 | 120 | 160 |
| பீற்றூட் | 100 | 80 | 160 | 160 |
| கறிமிளகாய் | 200 | 350 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 400 | 400 | -- | 500 |
| போஞ்சி | 140 | 180 | 160 | 140 |
| கத்தரிதம்புள்ள | -- | 300 | 300 | -- |
| கீரை - 1 பிடி | 15 | 40 | 30 | 40 |
| தேசிக்காய் | 40 | 90 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 20-45 | 40 | 40 | 35-40 |
| இராசவள்ளி | 120 | 120 | 140 | 130 |
| வெங்காயப்பூ | 150 | 250 | 80 | 100 |

# இராசி பலன்

18.01.2013
(தை 05, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.28 மணிக்கு
சப்தமி முன்னிரவு 9.01 மணிவரை
ரேவதி முன்னிரவு 11.44 மணிவரை
இராகுகாலம் 11.05-12.35 மணிவரை
சுபநேரம் 6.35-8.05 மணிவரை

**மேடம்** காரிய அலைச்சல்கள் அதிகரிக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், தொழிலில் புதிய திருப்பங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு.

**இடபம்** உறவினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தெய்வீக சிந்தனை மேலோங்கும், பொருளாதார நிலையில் முன்னேற் றம் காண்பீர்கள், எடுத்த கருமங்கள் எளிதில் கைகூடும்.

**மிதுனம்** சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, தூரதேச செய்திகள் மகிழ்ச்சிதரும், தேகநலனில் புத்துணர்வு ஏற்படும், தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், அந்நியர் உதவியுண்டு.

**கடகம்** மனதில் தேவையற்ற பய உணர்வு தென்படலாம், எதிர்பாராத பயணங்களால் அனுபவமுண்டு, தந்தைவழி உறவினர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், ஆன்றோர்களின் சந்திப்புண்டு.

**சிங்கம்** குடும்பத்தில் சில கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், உடல் நலனில் அக்கறை கொள்ள வேண் டிய நாள், பயணங்களின் போது பொருட்களில் அதிக கவனம் தேவை, கௌரவக் குறைவான சில சம்பவங்கள் ஏற்படலாம்.

**கன்னி** ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், அபூர்வ சந்திப்புண்டு, எடுத்த காரியங்கள் கைகூடும், போசன நன்மையுண்டு, பாராட்டும் புகழும் அதிகரிக்கும் நாள்.

**துலாம்** செய்தொழில் மேன்மையுண்டு, பகைவர்களும் நண்பர்களாக மாறும் வாய்ப்புண்டு, மனதில் புதிய உற்சாகம் பிறக்கும், முயற்சிகள் கைகூடும், நோய்கள் குணமடையும்.

**விருச்சிகம்** எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் ஏற்படலாம், அதிகாரிகள் அனுகூல[illegible] நடந்து கொள்வர், வியாபார விருத்தியுண்டு, பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு** பயந்த சுபாவமுண்டு, கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும், பெற்றோர் மீது பிரியம் கூடும், சுப செலவுகள் அதிகரிக்கும், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், கூட்டு முயற்சி வெற்றியளிக்கும், வாக்கு மேன்மையுண்டு, அந்நியர் சந்திப்புண்டு, உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு.

**கும்பம்** உங்கள் வார்த்தைக்கு நல்ல வாய்ப்புண்டு, வழிபாட்டில் ஈடுபாடு அதிகரிக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், மாதர் நட்புண்டு.

**மீனம்** புதிய பொருட் சேர்க்கையுண்டு, சயன சுகமுண்டு, அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், தொழில் விருத்தியுண்டு, ஆழ்ந்த சிந்தையுண்டு, போசன நன்மையுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டம் இல்லாத எமது நாட்டில் நீதித்துறை அமைச்சராக ஹக்கீம்

## அசாத் சாலி கிண்டல்

(கொழும்பு)

மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட ரிஸானாவை மீட்கும் பொறுப்பை என்னிடம் வழங்கியிருந்தால் சவுதியில் மிகவும் செல்வாக்குடன் இருக்கின்ற இலங்கையரான சாதிக் ஹாஜியாரைக் கொண்டு ரிஸானாவை பாதுகாத்திருப்பேன். ஆனால் அதற்கான உத்தியோகபூர்வ கடிதத்தை வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் வழங்கவில்லை என முன்னாள் பிரதி மேயர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் எதிர்க்கட்சிகளின் கூட்டு நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சட்டம் இல்லாத நாட்டில் நீதித்துறை அமைச்சராக ரவூப் ஹக்கீம் செயற்படுகின்றார். வரலாற்றில் முஸ்லிம் மக்களுக்கு ஒன்றுமே செய்யாத அமைச்சர் என்ற பெயரை ரவூப் ஹக்கீம் பெற்றுவிடுவார்.

ரிஸானாவை பாதுகாப்பதற்காக இலங்கை அரசாங்கம் உரிய முறையில் எதனையும் செய்யவில்லை. சரிஆ சட்டம் என்பது மன்னராலும் மன்னிப்பு வழங்க முடியாத ஏற்பாடுகளைக் கொண்டிருக்கின்றது. அதனை விமர்சிக்க முடியாது.

ஆனால் பாதிக்கப்பட்ட அந்த சவுதி குடும்பத்துடன் இலங்கைப் பிரதிநிதிகள் பேச்சு நடத்தவில்லை. ரிஸானாவுக்கு மரண தண்டனை விதிக்கும் குறித்த சந்தர்ப்பத்திலும் அது தொடர்பான அதிகாரி இறந்த குழந்தையின் தாயைப் பார்த்து மன்னிப்பு வழங்க முடியுமா என்று வினவியதுடன் மன்னிப்பு என்பது சிறந்த பண்பாகும் என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் அந்தத் தாய் எக்காரணத்தைக் கொண்டும் முடியாது என்று கூறியுள்ளார்.

ஆனால் எமது நாட்டின் பிரதிநிதிகள் சவுதிக்கு சென்றபோது குழந்தையின் பெற்றோருடன் பேச்சு நடத்தவில்லை. மேலும் இந்தப் பொறுப்பை என்னிடம் விட்டிருந்தால் நான் ரிஸானாவை விடுதலை செய்திருப்பேன்.

இலங்கையில் பிறந்த சாதிக் ஹாஜியார் என்பவர் சவுதியில் பிரஜையாக இருக்கின்றார். அவர் அங்கு மிகவும் செல்வாக்கு மிக்கவர்.

கடிதமொன்றை அவரிடம் வழங்குமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரிடம் நான் கேட்டபோது முடியாது என்று கூறி விட்டார். அன்று கடிதம் வழங்கப்பட்டிருந்தால் ரிஸானாவின் விடுதலை உறுதியாயிருக்கும்.

சவுதி மன்னரே மில்லியன் கணக்கான ரியாத்களை தருவதாகக் கூறி விடுதலை கோரியுள்ளார். ஆனால் அந்தத் தாய் மறுத்து விட்டார். (அ-2)

## தட்டுவன் கொட்டி கூ.சங்கக் கட்டடம் இதுவரையில் புனரமைக்கப்படவில்லை

கண்டாவளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட தட்டுவன் கொட்டிகிராம கூட்டுறவுச் சங்க கட்டடம் யுத்தத்தினால்பலத்த சேதமடைந்துஇடப்பெயர்வின் பின் இதுவரையிலும் புனரமைக்கப்படாமல் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்நிலையில் இக்கூட்டுறவு சங்கம் தனியார் கட்டடம்ஒன்றில் இயங்கி வருவதாகவும் அதற்கான வாடகையும் கூட்டுறவுச் சங்கத்தினாலேயே வழங்கப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக கடந்த மாதம் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் கிராம அபிவிருத்திசங்கத்தினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கேற்ப குறித்த பலநோக்கு கூட்டுறவு சங்க கட்டடத்தை புனரமைக்க பிரதேச ஒருங்கிணைப்பு குழுத் தலைவரால் பணிப்புரை விடுக்கப்பட்டது.

எனினும் இதுவரையிலும் புனரமைப்பு குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில் பல நெருக்கடிகள் மத்தியில் தற்போது தனியார் கட்டடத்திலேயே குறித்த கூட்டுறவு சங்கம் இயங்கி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே உரியவர்கள் இவ்விடயம் தொடர்பில் கவனமெடுத்து இக்கட்டடத்தை புனரமைக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ-5-264)

## மனித பாவனைக்கு உதவாத 3 கிலோ ரின்மீன்கள் சிக்கின

மனித பாவனைக்கு உதவாத 50 ஆயிரம் மீன் ரின்கள் பேலிய கொடையில் நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்டுள்ளன.

50 இலட்சம் ரூபாவிற்கு அதிக பெறுமதி கொண்ட இந்த மீன் ரின்கள் 155 கிராம், 230 கிராம், 425 கிராம், 850 கிராம், 3 கிலோ கிராம் நிறைகளைக் கொண்டவையென கூட்டுறவு மற்றும் உள்ளூர் வர்த்தக அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவை சிலி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவையாகும். சந்தைக்கு விநியோகிப்பதற்கென தயாராக வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே மேற்படி ரின் மீன்களை நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

மீன் ரின்னினது உட்புறமும் வெளிப்புறமும் நசிந்தும் படுதடைந்துமுள்ளன. இதன் காரணமாக வளி உட்புகுந்துள்ளதால் இரசாயன தாக்கத்துக்கு உள்ளாகியதன் மூலம் சுகாதாரத்துக்கு கேடு விளைவிக்கக் கூடிய ஒக்சைட் உருவாக்கம் ஏற்பட்டிருப்பதால் சுற்றிவளைப்பில் ஈடுபட்ட அதிகாரி குறிப்பிட்டார்.

மனித பாவனைக்கு சிறிதும் ஏற்புடையதல்லாத மேற்படி ரின் மீன்கள் நுகர்வோர் அதிகார சபைக்கு எடுத்து வரப்பட்டதுடன் சம்பந்தப்பட்ட விற்பனை நிலைய உரிமையாளருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும் அமைச்சின் அதிகாரி கூறினார்.

கூட்டுறவு மற்றும் உள்ளூர் வர்த்தக அமைச்சர் ஜோன் ஸ்டன் பெர்னாண்டோவின் பணிப்புரையின் பேரில் நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் இந்த திடீர் சுற்றிவளைப் பினை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## விசுவமடு ம. வித்தியாலயத்தில் இன்று மரதன் ஓட்டம்

(விசுவமடு)

மு/விசுவமடுமகாவித்தியாலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு மரதன் ஓட்டப் போட்டி பாடசாலை அதிபர் பெ.பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும்.

இதன் போது ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி கண்டாவளை சந்திக்கருகாமையில் உள்ள வெலி கண்டல் சந்தியிலிருந்து ஆரம்பமாகி விசுவமடு மகா வித்தியாலயத்தில் நிறைவு பெறவுள்ளது.

பெண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டி புளியம் பொக்கணை சந்தியிலிருந்து ஆரம்பித்து விசுவமடு மகா வித்தியாலயத்தில் நிறைவு பெறவுள்ளது. (அ-2)

## இராணுவ ஒத்துழைப்புடன் 3200 குளங்கள் புனரமைப்பு

வடமத்திய மாகாணத்தில் 3 ஆயிரத்து 200 குளங்கள் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

வடமத்திய முதலமைச்சர் எஸ்.எம். ரஞ்ஜித் சமரக்கோன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடமும் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடமும் விடுத்த வேண்டுகோளின் பேரிலேயே இக்குளங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

ஒப்பந்த அடிப்படைக்கு அப்பால் மாகாண சபைக்குச் சொந்தமான உபகரணங்களை பயன்படுத்தி இராணுவத்தினரின் உதவியோடு இக்குளங்கள் அபிவிருத்தி செய்யப்படும் என முதலமைச்சர் எஸ்.எம்.ரஞ்ஜித் கூறியுள்ளார். (அ-2)

## மஹோற்சவம்

காரைநகர் பயிரிக் கூடல் சுப்பிரமணிய சுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை சப்பறத் திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளதாக திருவிழா உபயகாரர்கள் அறிவித்துள்ளனர்.

தினமும் பகல் திருவிழா காலை 8.30 மணிக்கும் இரவுத் திருவிழா மாலை 6 மணிக்கும் ஆரம்பமாகும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-5)


நத்தார், புதுவருடம், தைப்பொங்கல் பண்டிகைகளை முன்னிட்டு விசேட கட்டணக் கழிவுகள்

3 நாள்களில் உங்கள் கைகளில் பொதிகள் கிடைக்கக்கூடியவாறு துரித சேவை....

| கட்டணங்கள் | (1Kg) இற்கு |
|---|---|
| லண்டன் | 1500/- |
| கனடா | 2600/- |
| சுவிஸ் | 1200/- |
| அவுஸ்திரேலியா | 1000/- |
| ஜேர்மனி | 1000/- |



சாதாரண சேவை 1 kg க்கு : கனடா 700/- லண்டன் 600/-
(பொதிகள் நிறை 5 Kg க்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.)

குறிப்பு: ஆவணங்கள், கடிதங்கள் அனுப்புவதற்கு விசேட கட்டணம்
லண்டன், இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மனி, கனடா, சுவிஸ் ஆகிய நாடுகளுக்கு
500 கிராமுக்கு 2000 ரூபா மட்டுமே...!
3 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

எமது வாடிக்கையாளர்களின் நன்மை கருதி உங்கள் பிரதேசங்களில் உள்ள பின்வரும் வியாபார ஸ்தாபனங்களில் பொதிகளை ஒப்படைக்க ஏற்பாடு செய்துள்ளோம்.

நெல்லியடி மருதம் கொமினிகேசன் 021 226 3210
வல்வெட்டித்துறை: V2 Travels and Tours 021 2055044 (சி-2148)

மேலதிக தொடர்புகளுக்கு:
Rain Bow Travels
இல.30/2, 3 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 021 221 9596



கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1976 இந்து (விஸ்வகுலம்)
நட்சத்திரம்: பரணி 2
உயரம்: 5'
கி.பா: 29.75
தகைமை/தொழில்: A/L, வியாபாரம் (அமெரிக்க PR)
தொ.இ: B -996

பிறப்பு: 1985 இந்து வேளாளர்
நட்சத்திரம்: திருவோணம் 1
உயரம்: 5'6"
கி.பா:71
தகைமை/தொழில்: B.Bm AAT (அரச உத்தியோகத்தர்)
தொ.இ: B -997

பிறப்பு: 1984 இந்து வேளாளர்
நட்சத்திரம்: ரேவதி 4
உயரம்: 5'5"
கி.பா: 50.75
தகைமை/தொழில்: A/L, விற்பனைப் பகுதிப் பொறுப்பாளர் (தனியார் துறை)
தொ.இ: B -999

பிறப்பு: 1983 இந்து வேளாளர்
நட்சத்திரம்: சுவாதி 4
உயரம்: 5'8"
கி.பா: 31
தகைமை/தொழில்: Dip in. teach (Maths) ஆசிரியர்
தொ.இ: B -1000

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1977 இந்து (வேளாளர்)
நட்சத்திரம்: கேட்டை 2
உயரம்: 5'3"
கி.பா: 36
தகைமை/ தொழில்: BA ஆசிரியை
எ.பா: சைவபோசனம் விரும்பத்தக்கது
தொ.இ: G -1034

பிறப்பு: 1975 இந்து (குருகுலம்)
நட்சத்திரம்: பூசம் 2
உயரம்: 5'
கி.பா: 41.75, 7இல் செவ்
தகைமை/ தொழில்: BA அரச ஆசிரியை
தொ.இ: G-1038

பிறப்பு: 1975 இந்து வேளாளர்
நட்சத்திரம்:உத்தராடம் 4
உயரம்: 5'1"
கி.பா: 47, 7 இல் செவ்.
தகைமை/ தொழில்: A/L, BA 1st Year
தொ.இ: G -1042

பிறப்பு: 1973 இந்து வேளாளர்
நட்சத்திரம்: உத்தரம் 3
உயரம்: 5'4"
கி.பா: 40.5, 1 இல் செவ்
தகைமை/ தொழில்: BBA (fm) உதவித் திட்டமிடல் பணிப்பாளர்
தொ.இ: G -1043

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்த வேண்டியிருப்பதாலும் 24 மெகாவோட்ஸ் புதிய மின் திட்டத்தை மின்வலையமைப்புடன் இணைப்பதற்காகவும் பின்வரும் பிரதேசங்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை மின்விநியோகம் தடைப்பட்டிருக்குமென யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இன்று வெள்ளிக்கிழமை குஞ்சர்கடையின் ஒரு பகுதி, நவிண்டில், பொலிகண்டி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு, உடுப்பிட்டி, நெல்லண்டை, கற்கோவளம், புனித நகர், சிவன் கோயில் முதல் சிவப்பிரகாச வித்தியாசாலை வரையான பிரதேசம் ஆகிய இடங்களிலும் நாளை சனிக்கிழமை கரணவாய் அண்ணா சிலையடிப் பிரதேசம்,ஸ்ரான்லி வீதி, யாழ். மாநகர சபை பிரதேசம், பாசையூர், யாழ். மாநகர சபைப்பகுதி, உரும்பராய், கோண்டாவில், மருத்துவப் பீடப்பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப்பகுதி, மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், புன்னாலைக்கட்டுவன், அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர், நிலாவரை, வல்லை முதல் மந்திகை வரையான வடமராட்சிப் பிரதேசத்திலும் அன்றைய தினம் நண்பகல் 12 மணியிலிருந்து பிற்பகல் 2 மணி வரை யாழ்.குடாநாடு முழுவதும் மற்றும் பளைப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (அ-9)


நன்றி: ஐலன்ட்

# பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்படும் தைப்பொங்கல் விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பன்னாலை சிவபூதவராயர் ஆலயத்தில் இந்து சமய கலாசார உத்தியோகத்தர் எஸ்.உதயபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு ஆசியுரையை சிவஸ்ரீ அருளானந்த சர்மா சர்மாஜி ஐயா, சிவஸ்ரீ மகேஸ்வர சர்மா மகேந்திர சர்மா ஆகியோர் ஆற்றவுள்ளனர். தைப்பொங்கல் திருநாள் எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவினை கந்த சத்தியதாசன் ஆற்றவுள்ளார். தொடர்ந்து பன்னாலை கணேசா அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளதாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ-9)

# போட்டிப்பரீட்சை நேர மாற்றம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் எதிர்வரும் 20 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நடத்தப்படவிருந்த இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் குடியேற்ற உத்தியோகத்தர் பதவியின் வகுப்பு III மற்றும் பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை அன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் என வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர் க.தெய்வேந்திரம் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்ட அனுமதி அட்டையுடன் இப் பரீட்சைக்குத் தோற்றலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# ஆண்டு விழாவும் நாட்காட்டி வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தின் 125 ஆவது ஆண்டின் ஆரம்ப விழாவும் நாட்காட்டி வெளியீடும் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு வித்தியாலய சயம்பு மண்டபத்தில் ஆசிரியர் நட்புறவு மன்ற தலைவர் வே.சிவநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக தீவக வலயக கல்வி பணிப்பாளர் ஜோன்குயின்ரன்ஸ் மற்றும் தொழிலதிபர் ஈ.எஸ்.பி.நாகரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-5)

# திருநெல்வேலி கிழக்கில் மின் இணைப்பு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி கிழக்கு பிள்ளையார் வீதியில் வசிக்கும் 20 குடும்பங்களின் வேண்டுகோளுக்கு அமைவாக மின்சார சபையினால் மின்னிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக குறித்த பகுதியில் வசிக்கும் குடும்பங்கள் மின்சார வசதியின்றி அவதிப்பட்டனர். இந்நிலையில் இலங்கை மின்சார சபையினால் மின்னிணைப்புக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு மின்கம்பங்களும் நாட்டப்பட்டுள்ளன.

இந்த மின் கம்பங்கள் நாட்டும் நடவடிக்கையின் போது இலங்கை மின்சார சபையின் கொக்குவில் குளப்பிட்டி பகுதியில் உள்ள கிளையின் அதிகாரி குமாரலிங்கம் மற்றும் நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் இரவீந்திரதாசன் உள்ளிட்டவர்களும் சமுகமளித்திருந்தனர். (அ-6)

# இணைப்பாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை

(சாவகச்சேரி)

அகில இலங்கை பொது ஊழியர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள யாழ். மாவட்ட இணைப்பாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லூர் செட்டித்தெரு வீதியில் அமைந்துள்ள இல. 50/14 இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் அனைத்து யாழ்.மாவட்ட இணைப்பாளர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட மேலதிக இணைப்பாளர் எஸ்.பொன்னம்பலம் கேட்டுள்ளார்.

இதேவேளை, புதிதாக இணைய விரும்பும் ஊழியர்கள் அன்றைய தினம் பதிவு செய்து இணைந்து கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-5-29)

# பழைய மாணவர் சங்க கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யா/நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையின் பழைய மாணவர் சங்க கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் முக்கிய பல விடயங்கள் ஆராயப்படவுள்ளதோடு புதிய அங்கத்தவர்களும் பழைய மாணவர் சங்க உறுப்புரிமை விண்ணப்பத்தைப் பெற்று பூரணப்படுத்திக் கொடுப்பதுடன் சந்தாப் பணத்தைச் செலுத்தி இணைந்து கொள்ளுமாறு பழைய மாணவர் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (அ-9)

# எம்.ஜி.ஆரின் பிறந்த தினத்தில் உடு புடைவைகள் வழங்கப்பட்டன



புரட்சித் தலைவர் எம்.ஜி. இராமச்சந்திரனின் 96 ஆவது பிறந்த நாள் தினத்தை முன்னிட்டு வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்வோருக்கு உடு புடைவைகள் வழங்கப்பட்டன.

யாழ்.திருநெல்வேலி சந்தைக்கு அருகாமையில் நேற்று காலை 9 மணியளவில் எம்.ஜி.ஆர். ரசிகர் சுந்தரலிங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச சபை தலைவர் ப.வசந்தகுமார், சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச சபையின் எதிர்க்கட்சி தலைவர் வி.ரவீந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் தெரிவு செய்யப்பட்ட 50 பேருக்கு உடு புடைவைகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்வின் ஏற்பாட்டாளர் நல்லூர் பிரதேச சபை தலைவரிடம் எம்.ஜி.ஆருக்கு சிலை அமைக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார். அதற்கு பதிலளித்த பிரதேச சபை தலைவர் சிலை அமைப்பது தொடர்பாக சபையில் தான் தீர்மானம் கொண்டு வருவதாகவும் அதனை சபை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் சிலை அமைக்கப்படும் எனவும் தெரிவித்தார். (அ-6)




# விசேட பொதுக்கூட்டம்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு உணவத்தை கண்ணகை அம்மன் ஆலயத்தின் விசேட பொதுக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பிரதம விருந்தினராக வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் ந.திருலிங்கநாதன் கலந்து கொள்ளவுள்ளார். அன்றைய தினம் ஆலய புனரமைப்பின் அடிக்கல் நாட்டும் நிகழ்வு பற்றி ஆராயவுள்ளதால் ஆலய பக்தர்கள் அனைவரையும் இவ் ஒன்று கூடலில் கலந்து கொள்ளுமாறு ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (அ-5-64)

# புதிய யோகாசன வகுப்புக்கள் ஆரம்பம்

யாழ். யோக அரங்கம் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய (நாச்சிமார் கோயில்) திருமண மண்டபத்தில் புதிய யோகாசன வகுப்புக்களுக்கான அறிமுக உரை நாளை சனிக்கிழமை காலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 6 மணி தொடக்கம் 7 மணிவரை யோகாசன வகுப்புக்கள் நடைபெறவுள்ளன. ஆர்வமுள்ள அனைவரும் இணைந்து பயன்பெற முடியும் என்று யாழ்.யோக அரங்கத்தினர் அறிவித்துள்ளனர். (அ)

# கைத்தொழிற்றுறை குறித்த கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றம் இலங்கை வர்த்தக தொழிற்றுறை சம்மேளனத்துடன் இணைந்து யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறிய, நடுத்தர மற்றும் பாரம்பரிய கைத்தொழிற்றுறையின் தற்போதைய நிலை தொடர்பாகவும் எதிர்காலத்தில் அவற்றினை எவ்வாறு மேம்படுத்த வேண்டும் என்பது தொடர்பாகவும் கலந்துரையாடல் ஒன்றினை இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் பொதுநூலக கேட்போர் கூடத்தில் பிற்பகல் ஒரு மணிக்கு நடத்தவுள்ளது.

இதில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்ளவுள்ளார்.

அத்தோடு இந்தக் கலந்துரையாடலில் பங்குச் சந்தையில் எவ்வாறு முதலீடுகளை மேற்கொள்வது என்பது தொடர்பாகவும் கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தால் விளக்கவுரைகளும் நிகழ்த்தப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 48 மணி நேரம் தடுத்து வைப்பதை அங்கீகாரமாக்க தயாராகிறது அரசு

(கொழும்பு)

பிடியாணை இல்லாது பொலிஸாரால் கைது செய்யப்படும் ஒருவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும் முன்னர் 48 மணித்தியாலங்கள் தடுத்து வைத்து விசாரணை செய்யும் அதிகாரம் வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பில் எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையன்று நாடாளுமன்றத்தில் சட்டமூலம் ஒன்று கொண்டு வரப்பட்டு அது நிறைவேற்றப்படவுள்ளது.

தற்போது நீதிமன்றில் ஆஜர்படுத்தும் முன்னர் 24 மணித்தியாலமே கைது செய்யப்பட்ட ஒருவரை பொலிஸாரால் தடுத்து வைத்திருக்கக் கூடிய சட்டமுள்ளது.

இதனை 48 மணித்தியாலங்களாக்கும் முகமாகவே புதிய சட்ட மூலம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

கடந்த 2005 ஆம் ஆண்டு இதேபோன்ற சட்டம் கொண்டு வரப்பட்ட போதும் அது 2007 ஆம் ஆண்டு வரையில் மாத்திரம் நடைமுறையில் இருந்தது.

இதன்பின்னர் அது 2009 ஆம் ஆண்டு வரை நீடிக்கப்பட்டது. ஏற்கனவே இந்த சட்ட மூலத்துக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# நீதியரசர் விவகாரம்; யூரிகள் ஆணையகம் கண்டனம்

(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்கவை மீண்டும் பதவியில் அமர்த்துமாறு கேட்டுள்ள சர்வதேச யூரிகள் ஆணையகம் முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸை பிரதம நீதியரசராக நியமித்தமைக்கு கண்டனத்தையும் வெளியிட்டுள்ளது.

இந் நியமனம் நீதித்துறை சுயாதீனத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட இன்னொரு தாக்குதல் எனவும் கண்டித்துள்ள மேற்படி ஆணையகம், முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு மீண்டும் பதவி வழங்கப்பட வேண்டுமெனவும் இலங்கை அரசாங்கத்திடம் கேட்டுள்ளது. (அ-2)

# வெள்ள நிவாரணத்தில் சிலருக்கு பழுதடைந்த அரிசி

(றெட்பானா)

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட 3 கிராம சேவகர் பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள தைப் பொங்கலை முன்னிட்டான வெள்ள நிவாரணம் தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

மேற்படி வெள்ளப் பாதிப்பிற்கு உட்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணத்தின் போது கூட்டுறவு சங்கங்களில் தேங்கிக் கிடந்த பழைய பொருட்கள் சிலருக்கு வழங்கப்பட்டமை தொடர்பிலேயே மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வள்ளுவர்புரம், மாணிக்கபுரம், தேராவில் ஆகிய மூன்று கிராம சேவகர் பிரிவுகளிலும் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தைப்பொங்கலை முன்னிட்டு, கடந்த 13, 14 ஆம் திகதிகளில் விசுவமடு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினால் வெள்ள நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

அரிசி, சீனி, தேயிலை போன்ற பொருட்கள் பிரதானமாக வழங்கப்பட்டுள்ள அதேவேளை சில குடும்பங்களுக்கு கூட்டுறவு சங்கங்களில் தேங்கி கிடந்த பழைய அரிசிகளும் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சராசரியாக ஒரு குடும்பத்திற்கு 500 ரூபாவிற்கு மேற்பட்ட பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பழைய அரிசிகளை பெற்றுக் கொண்ட மக்கள் அதிருப்தி அடைந்துள்ளதோடு தாம் ஏமாற்றப்பட்டுள்ளதாகவும் கவலை தெரிவித்துள்ளனர். (அ-5-260)

# ஊடகவியலாளர்களை எச்சரித்து துண்டுப்பிரசுரம்

## தனக்கு தொடர்பில்லை என்கிறார் றிசாத்

(மன்னார்)

மன்னாரில் உள்ள உள்ளூர் செய்தியாளர்கள் மூவருக்கு கடிதம் மூலமாக கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது குறித்து அமைச்சர் றிசாத் பதியுதீனை தொடர்புபடுத்தி இந்த எச்சரிக்கை விடுக்கப்படுவதாக அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தச் சம்பவத்திற்கு தனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று அமைச்சர் றிசாத் பதியுதீன் மறுத்துள்ளார்.

சியாத் இயக்கம் என்ற பெயரில் இவ்வாறு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டிருக்கின்றது.

பலமுறை எச்சரிக்கை விடுத்தும் அதை பொருட்படுத்தாமலும் இறைவனை மதியாமலும் செயற்படுவதனால் இறுதி எச்சரிக்கை என அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மன்னார் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றனர். இவ்விடயம் தொடர்பில் அமைச்சர் றிசாத் பதியுதீன் பிபிசிக்கு கருத்து வெளியிடுகையில்,

இந்தச் சம்பவத்திற்கும் தனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் மூவரும் தமக்கு நன்கு பரீட்சயமானவர்கள் என்றும் தம்மை இத்துடன் தொடர்புபடுத்தியுள்ளமை திட்டமிட்டு தமிழ் முஸ்லிம் உறவுகளை சீரழிக்கும் ஒரு செயல் எனவும் தெரிவித்தார்.

இந்த மூன்று ஊடகவியலாளர்களில் இருவர் அரச ஊடக நிறுவனத்தில் பணிபுரிபவர்கள். இது குறித்து முழுமையான ஒரு விசாரணையை நடத்தி உண்மையை கண்டறியுமாறு நாட்டின் தலைமை பொலிஸ் அதிகாரிக்கு நான் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளேன்.

தமிழ் மக்களுடைய மீள்குடியேற்றத்தை தான் செய்தபோது தம்மை ஆதரித்தவர்கள் இன்று முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம் செய்யப்படும் போது ஏன் எதிர்க்கிறார்கள் எனவும் அவர் கேள்வி எழுப்பினார். (அ-2)




★ 1520- அசுண்டே ஆற்றுக்கருகில் இடம் பெற்ற போரில் டென்மார்க் மற்றும் நோர்வேயின் இரண்டாம் கிறிஸ்டியன் சுவீடனை வென்றான்.

★ 1535- லீமா நகரம் நிறுவப்பட்டது.

★ 1591- சியாம் மன்னன் நரெசுவான் பர்மாவின் இளவரசன் மின்சிட் சிராவுடன் மோதி அவனைக் கொன்றான்.

★ 1670- ஹென்றி மோர்கன் பனாமாவைக் கைப்பற்றினான்.

★ 1701- பிரஷ்யாவின் மன்னனாக முதலாம் பிரெடெரிக் முடிசூடினான்.

★ 1778- ஹவாய் தீவுகளைக் கண்டறிந்த முதலாவது ஐரோப்பியன் கப்டன் ஜேம்ஸ் குக். இதற்கு சான்ட்விச் தீவுகள் எனப் பெயரிட்டான்.

★ 1788- லண்டனில் இருந்து 736 கைதிகளைக் கொண்ட முதலாவது தொகுதி அவுஸ்திரேலியாவின் பொட்டனி விரிகுடாவைச் சென்றடைந்தது.

★ 1824- இலங்கையின் ஆளுநராக சேர் எட்வர்ட் பார்ன்ஸ் நியமிக்கப்பட்டார்.

★ 1871- வடக்கு ஜேர்மனி கூட்டமைப்பு மற்றும் தெற்கு ஜேர்மன் மாநிலங்கள் ஆகியன ஜேர்மன் பேரரசு என்ற பெயரில் இணைந்தன. முதலாம் வில்ஹெல்ம் அதன் முதலாவது மன்னனான்.

★ 1896- எக்ஸ்ரே இயந்திரம் முதற் தடவையாகக் காட்சிப்படுத்தப்பட்டது.

★ 1911- யூஜின் எலி என்பவர் தனது விமானத்தை சான் பிரான்சிஸ்கோ துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த USS பென்சில்வேனியா என்ற கப்பலின் மீது இறக்கினார்.

★ 1919- முதலாம் உலகப் போர்: பாரிஸ் அமைதி உச்சி மாநாடு பிரான்சில் வேர்சாயி நகரில் ஆரம்பமானது.

★ 1929- லியோன் ட்றொட்ஸ்கி சோவியத் ஒன்றியத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

★ 1944- இரண்டாம் உலகப் போர்: மூன்று ஆண்டுகளாக நாசிகளால் முற்றுகையிடப்பட்டிருந்த லெனின்கிராட் நகரை சோவியத் படைகள் மீட்டெடுத்தன.

★ 1960- கொங்கோவின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் முக்கிய வட்ட மேசை மாநாடு பெல்ஜியத்தில் நடைபெற்றது.

★ 1995- 17 ஆயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்த குகை ஓவியங்கள் தெற்கு பிரான்சில் கண்டுபிடிக்கப்பட்டது.

★ 1997- போர்ஜ் அவுஸ்லாண்ட் என்பவர் அண்டார்க்டிக்காவை துணை எதுவுமின்றி முதன்முதலில் கடந்து சாதனை படைத்தார்.

★ 2002- சியேரா லியோனியில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்ததாக அறிவிக்கப்பட்டது.

### பிறப்புகள்

★ 1854- சுன்னாகம் குமாரசாமிப்புலவர், ஈழத்துப் புலவர் (இ.1922)

★ 1921- நாம்பு ஓச்சிரோ, இயற்பியல் அறிஞர்

★ 1937- ஜோஷ்ஹியூம், நோபல் பரிசு பெற்றவர்.

★ 1955- எரிக் சொல்ஹெய்ம், நோர்வே அமைச்சர்

### இறப்புகள்


★ 1862- ஜான்டைலர், ஐக்கிய அமெரிக்காவின் 10 ஆவது குடியரசுத் தலைவர் (பி.1790)

★ 1873- எட்வர்ட் பல்வர்-லிட்டன், ஆங்கில எழுத்தாளர் (பி.1803)

★ 1936- றூடியார்ட் கிப்லிங், நோபல் பரிசு பெற்ற பிரித்தானிய எழுத்தாளர் (பி.1865)

★ 1963- ப.ஜீவானந்தம், தமிழகப் பொதுவுடைமைக் கட்சித் தலைவர் (பி.1906)

**அ.குமாரசாமிப்புலவர்**



சுன்னாகம் அ.குமாரசாமிப்புலவர் இலங்கையைச் சேர்ந்த புலவர் ஆவார். காலனித்துவ ஆட்சிக்காலத்தில் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்தவர்களில் இவரும் ஒருவராவர்.

**பிறப்பு**

யாழ்ப்பாணத்தில் சுன்னாகத்தில் பிறந்த அம்பலவாணருக்கும் தென்கோவை குமாருடையார் மகள் சிதம்பராம்மையாருக்கும் 1854 ஆம் ஆண்டு தை 18 ஆம் திகதி பிறந்த பிள்ளைதான் குமாரசாமி. இவருக்கு சிவகா மிப்பிள்ளை, காமாட்சிப்பிள்ளை என இரு சகோதரர்கள் இருந்தனர். குமாரசுவாமி பிறந்தார்.

**யாழ்ப்பாண தமிழ்ச் சங்கம்**

யாழ்ப்பாணத் தமிழரசர் காலத்தில் சிங்கைப்பரராசசேகரனும் சிங்கை செகராசசேகரனும் யாழ்ப்பாணத்தில் தமிழ்ச்சங்கம் நிறுவி தமிழை வளர்த்தும் தமிழ்க் கல்வியைப் பரப்பியும் வந்தனர். யாழ்ப்பாணத்தில் ஒரு தமிழ் சங்கம் 1900 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

**இறுதி நாட்கள்**

10.03.1922 இல் புலவரை சுரமும் வயிற்றுளைவு நோயும் வருத்தத் தொடங்கின. மருத்துவத்தால் நோய் தணியாது. 23.03.1922 இல் அதிகாலை மூன்றரை மணியளவில் புலவர் உயிர் துறந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை மாத இராசி பலன்

# 14.01.2013-12.02.2013




சித்திரை 3,4 ஆம் பாதங்கள் சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்

## செலவு நடை அதிகரிக்கிறதே என்று கவலைப்படவேண்டாம் முதல் நாளே வரவு வந்து பெட்டிக்குள் பத்திரமாக இருக்கும்

செவ்வாய் பெயர்ச்சிக்கு பின் செல்வ நிலை உயரும். வியக்கும் குணமும் விசால மனமும் படைத்த துலாம் இராசி நேயர்களே!

நினைத்ததை சாதிக்க வேண்டும் என்ற துடிப்போடு இருக்கும் உங்களுக்கு தை மாத கிரக நிலைகள் தகுந்த விதத்தில் சஞ்சரித்தாலும் ஜென்ம இராகுவும் சப்தம கேதுவும் சில சில பிரச்சினைகளை உருவாக்கலாம். ஜென்ம இராகுவுடன் சனியும் அல்லவா கூடியிருக்கிறார். எனவே சில தகவல்களை வெளிப்படையாக பேசுவ தால் மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாக நேரிடும். உணவு உண்ணவும் உட்காரவும் நேரமில்லாமல் பணியாற்றிக் கொண்டே இருப்பீர்கள் உழைப்பு அதிகம் இருந்தாலும் ஊதியம் போதுமான அளவு இருக்காது.களைப்பை மீறி செயற்பட்டால் தான் கைநிறைய காசு, பணம் குவிக்க இயலும். காரணம் அஷ்டமத்து குருவின் சஞ்சாரம்தான்.

ஒருவர் ஜாதகத்தில் 6,8,12 ஆகிய இடங்களில் வலுப்பெற்று அதிலுள்ள கிரகத்தின் ஆதிக்க தெசாபுத்தி செயற்பட்டால் எதையும் யோசித்துத்தான் செய்ய வேண்டும். இந்த நிலைதான் இந்த மாதத்தின் தொடக்கத்தில் இருக்கிறது. ஆயினும் 8 இல் உள்ள குரு வக்ரம் பெற்றிருப்பது ஒரு வழிக்கு யோகம்தான்.

செலவு நடை அதிகரிக்கிறதே என்று கவலைப்பட வேண்டாம். முதல் நாளே வரவு வந்து பெட்டிக்குள் பத்திரமாக இருக்கும். ஜென்ம சனிக்கும் அஷ்டமத்து குருவிற்கும் ஜென்ம இராகுவிற்கும் அஷ்டம கேதுவிற்கும் சிறப்பான வழிபாடுகளை நீங்கள் செய்தால் நன்மைகளை மட்டுமே நாளும் சந்திக்க இயலும். அப்படி என்ன வழிபாடு செய்ய வேண்டும் என்று நீங்கள் நினைக்கலாம்.

சர்ப்ப கிரகத்தின் ஆதிக்கம் இருக்கும் பொழுது ஏற்ற -இறக்கம் வந்து கொண்டேயிருக்கும். எனவே சர்ப்ப ஸ்தலங்களுக்கு சென்று சர்ப்ப சாந்தியை செய்து கொள்வது நல்லது. அது மட்டுமல்லாமல் ஒவ்வொரு சனிக்கிழமையும் அனுமனுக்கு அர்ச்சனை செய்து வழிபாடு செய்வது நல்ல பலன்களை அள்ளி வழங்கும். வியாழனில் விரதமும் குரு, தட்சணாமூர்த்தி வழிபாடும் இடையூறுகளை அகற்றும்.

### கும்ப செவ்வாய் கொடுக்கும் பலன்கள்

ஜனவரி 23 ஆம் திகதி கும்ப இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். 2,7 இற்கு அதிபதி 5 இல் சஞ்சரிக்கும் பொழுது பூர்வீகச் சொத்துப் பிரச்சினைகள் அகலும். அதில் ஏற்பட்ட தகராறுகளுக்காக வைக்கப்பட்ட பஞ்சாயத்துக்களில் எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும். உடன்பிறப்புக்கள் உங்கள் குணம் அறிந்து நடந்து கொள்வர். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளிலும் வெற்றி கிட்டும்.

### கும்ப புதனின் சஞ்சாரம்

ஜனவரி 28 ஆம் திகதி கும்ப இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 9, 12 இற்கு அதிபதியான புதன் குடும்பத்தில் சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புகள் கைகூடி வரும். சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

### சுக்ர பெயர்ச்சியும் குருவின் வக்ர நிவர்த்தியும்

முக்கிய திருப்பங்கள் ஏற்படும் காலம் இது. முன்னேற்ற பாதையை நோக்கி செல்லும் விதத்தில் சுக்ரன் மகர இராசியில் ஜனவரி 29 முதல் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். வங்கி சேமிப்பு உயரும். வாழ்க்கை தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள பிற இனத்தாரின் ஒத்துழைப்பு குருவின் வக்ர நிவர்த்திக்கு பிறகு கிடைக்கும். பெப்ரவரி 6 இற்கு மேல் பெண் வழி பிரச்சினைகள் அகலும். நவக்கிரக வழிபாடு இம்மாதம் நன்மையை வழங்கும் .

### பெண்களுக்கான சிறப்பு பலன்கள்

இம்மாதம் நிதானத்துடன் செயற்பட வேண்டிய மாதமாகும். நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்ய இயலுமா என்பது சந்தேகம்தான். அருகில் இருப்பவர்களை அனுசரித்து செல்ல வேண்டிய மாதமாகவே இம்மாதத்தை கருத வேண்டும். விட்டுக் கொடுத்து சென்றால் குடும்ப ஒற்றுமை பலப்படும். குலதெய்வ பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். குழந்தைகளின் போக்கை கண்காணித்துக் கொள்வது நல்லது. இரு மடங்கு செலவாகும் இம்மாதத்தில் இராகு வழிபாடு யோகம் சேர்க்கும்.

## சிவல்புரி சிங்காரம்




விசாகம் 4 ஆம் பாதம், அனுசம், கேட்டை

## இலாபம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதலாகவே கிடைக்கும் தேக நலனில் மட்டும் அக்கறை காட்ட வேண்டிய நேரமிது

### உச்ச செவ்வாய் உன்னத வாழ்க்கையை வழங்கும்

பெரிய மனிதர்களின் பிரியத்திற்கு பாத்திரமாக விளங்கும் விருச்சிக இராசி நேயர்களே!

தை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கமே உங்களுக்கு மகிழ்ச்சி தரும் விதத்தில் இருக்கிறது. சாதனையை நிகழ்த்தவிருக்கும் செவ்வாய் உச்சம் பெறுகிறார். சந்திரனும் சூரியனும் அதனோடு இணைந்திருக்கிறார்கள். இலாப ஸ்தானத்திற்கு அதிபதியான புதனும் அதனோடு இணைந்திருப்பதுதான் மிகுந்த யோகம்.

தொட்டகாரியம் துலங்கும். தொகை வந்து கொண்டேயிருக்கும். சிக்கல்கள் விலகும். சிறுசிறு பிரச்சினைகளை கொடுத்த சனிபகவான் இராகுவோடு இணைந்து செயற்படுவதால் தக்க விதத்தில் நல்ல பலன்களை அள்ளி வழங்குவார். தடைகள் விலகும்.

தொழில் ஸ்தானம் வலுவடையும் மாதமிது. இலாபம் எதிர்பார்த்ததை காட்டிலும் கூடுதலாகவே கிடைக்கும். தேக நலனில் மட்டும் அக்கறை காட்ட வேண்டிய நேரமிது.

ஏழரை சனியின் ஆதிக்கம் விரயங்களும் உடனுக்குடன் உருவாகும் என்பது பொது நியதி. உங்களைப் பொறுத்தவரை உங்கள் இராசிக்கு 3, 4 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக சனி விளங்குகிறார்.

சகோதர சகாய ஸ்தானத்திற்கு அதிபதியாகவும் தாய் ஸ்தானம் மற்றும் இடம், பூமி, வாகன சுகம் ஆகியவற்றை குறிக்கும் இடங்களுக்கு அதிபதியாகவும் சனி விளங்குவதால் அந்த இடங்களுக்குரிய ஆதிபத்யங்கள் எல்லாம் வளர்ச்சியடையும் வாய்ப்புக்கள் வந்து சேரும். இடம் வாங்குவீர்கள். மனை கட்டுவீர்கள். இனி சுப காரியங்கள் பலவும் செய்ய முன்வருவீர்கள். தனிமையில் இருப்பவர்கள் வாழ்க்கை துணையை அமைத்துக் கொண்டு வசந்த காலத்தை உருவாக்கிக் கொள்வர். குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் ஒவ்வொன்றாக கைகூடும். கூட்டு முயற்சிகளில் கொஞ்சம் விழிப்புணர்ச்சியோடு இருப்பது நல்லது.

### கும்பச் செவ்வாய் கொடுக்கும் பலன்கள்!

ஜனவரி 23 ஆம் திகதி கும்ப இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இது மிகுந்த யோகம் தரும். அரசியலில் ஈடுபாடு கொண்டவர்களுக்கு புதிய தலைமை பொறுப்பு வந்து சேரும். பொருளாதார நிலை உயரும். கட்டிய வீட்டில் கிரகப்பிரவேசம் நடத்த முன்வருவீர்கள்.

### கும்ப புதனின் சஞ்சாரம்!

ஜனவரி 28 ஆம் திகதி கும்ப இராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். அந்நிய தேசத்திலிருந்து அனுகூலச் செய்தி வந்து சேரும். கடல் தாண்டும் முயற்சி ஒரு சிலருக்கு கைகூடும். கல்விக்காக எடுத்த முயற்சியில் அனுகூலம் உண்டு. கனிந்த தகவலை கடிதம் தரும்.


### மகர சுக்ரனும் குருவின் வக்ர நிவர்த்தியும்!

ஜனவரி 29 ஆம் திகதி மகர இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். 7,12 இற்கு அதிபதி 4 இல் சஞ்சரிக்கும் பொழுது வாகனம் வாங்கும் எண்ணம் மேலோங்கும். பழைய வாகனங்களை கொடுத்து விட்டு புதிய வாகனங்களை வாங்க முன்வருவீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி கல்யாண சூழ்நிலையை முன்னிட்டு நகை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். குருவின் வக்ர நிவர்த்திக்கு பின்னால் குதூகலமான வாழ்க்கை அமையும். அதன் பார்வை பலத்தால் பண வரவு திருப்தி தரும். இந்த மாதம் சர்ப்ப கிரக வழிபாடு சந்தோசம் தரும்.

### பெண்களுக்கான சிறப்பு பலன்கள்

தைரியமும் தன்னம்பிக்கையும் கூடும் மாதமிது. தக்கவிதத்தில் செவ்வாய் பலம் பெற்று சஞ்சரிப்பதால் பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும். கணவன்- மனைவிக்குள் பாசம் பொங்கும். நேசம் அதிகரிக்கும். புதிய சொத்துக்கள் உங்கள் பெயரிலேயே வாங்குவதற்கான அறிகுறிகள் தோன்றும். குழந்தைகளின் கல்யாண வாய்ப்புக்கள் கைகூடும். அவர்களுக்கு வேண்டிய ஆபரணங்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். இனிக்கும் வாழ்க்கை எப்போதும் அமையும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மூன்றாம் உலகப்போர்

18

## மானுடத்திற்கான திடக்கண்ணீர்!

அட்டணம் பட்டியில எறங்கி வீடு வந்து சேர்றதுக்குள்ள சேதியெல்லாம் தெரிஞ்சுபோச்சு சின்னப்பாண்டிக்கு.

வயித்துக்கும் நெஞ்சுக்குமா ஒரு வருத்தம் போயிட்டுப் போயிட்டு வருது.

மாட்டுச் சாணிய மிதிச்சும் மிதிக்காம வீட்டுக்குள்குள்ள நுழைஞ்சான்.

திண்ணையில கெடந்த ஒரு கெழடு, சாயம் போனாலும் அழுக்குப் போகாத போர்வைய லேசா விலக்கி ஒம் பங்குக்கு நீயும் வந்துட்டியான்னு சின்னப்பாண்டிய ஒரு பார்வை பாத்துட்டு மறுபடியும் பொத்திப் படுத்திருச்சு பொசுக்குன்னு.

சல்லிக்கட்டு முடிஞ்சவாடிவாசல் மாதிரி அலங்கோலமாகக் கெடக்கு வீடு.

கோமியமும் சகதியும் குப்பையும் கூளமுமாக் கெடக்கிற வாசல்ல வௌக்கமாரும் கெடக்கு ஒரு பெருக்காத பொருளா.

உடம்பெல்லாம் தழும்பு விழுந்து கெடக்கு ஒரு பித்தளைச் சொம்பு.

அந்த வீட்டுல மூணு தலமுறையா இடிதாங்கி அந்தப் பித்தளச் செம்பு ஒண்ணுதான். யாருக்குக் கோவம் வந்தாலும் எடுத்து எறிஞ்சுக்கிரலாம். அது ஒண்ணும் பண்ணாது. உள்காயத்தோட கெடக்கிற சொம்பை எடுத்துத் துலக்கி உள்ள போயி வச்சிக்கிரலாம்- இன்னொரு தடவை எறியறதுக்கு. பரம்பரைக்கே 'பெருஞ்சேவை' பண்ணிருக்கு அந்தச் சொம்பு. தவிச்ச வாய்க்கு தாகம் தணிக்கிறதும் அதுதான்; சண்டை சத்தம் வந்தாக் கோபம் தணிக்கிறதும் அதுதான்.

காலையிலயிருந்து பாலுக்குக் கழத்திவிடாத கன்னுக்குட்டி 'உங்க வம்பு முடியாம என்னத் தும்பு திரிச்சு விடமாட்டீங்களா?'ன்னு கலங்கிப் பாக்குது கண்டுல தண்ணிகட்டி.

கத்திக்கித்தித் தொலச்சிட்டாக் கழுத்தக் கிழுத்த நசுக்கிருவாகளோன்னு சத்தம் வராம வாய மட்டும் தொறந்து தொறந்து மூடுதுக காடிக்குள்ள ஓடி ஒளிஞ்சு நிக்கிற கோழிக.

கோவிந்த நாயக்கரு, இப்ராகிம் ராவுத்தரு, வீரணத் தேவரு, கண்ணப்பக் கோனாரு, ஒத்த வீட்டு மூளி எல்லாம் ஒண்ணுக்குள்ள ஒண்ணு பேசாம அங்கங்க ஒக்காருந்திருக்காக. விலக்கிவிட வந்தவக பாதி; வேடிக்கை பாக்க வந்தவக பாதி.

தொடைக்கு மேல சுருட்டுன வேட்டிய உள்கூட்டுல சொருகி, விட்டத்த வெறிச்சுப் பாத்து ஒக்காந்திருக்காரு கருத்தமாயி.

உள்வீட்டுல உக்காந்திருக்கா சிட்டம்மா மூக்கைச் சிந்தி முனகிக்கிட்டே.

## வயித்துக்கும் நெஞ்சுக்குமா ஒரு வருத்தம் போயிட்டுப் போயிட்டு வருது

சல்லிக்கட்டு மாடு முட்டுனவன் குடல் மாதிரி, கயிறு சரிஞ்சு கெடக்கிற கட்டில்ல உக்காந்து சண்டைப் பாம்பு மாதிரி 'தஸ்ஸுபுஸ்ஸு'ன்னு மூச்சு விட்டுக்கிட்டிருக்கான் முத்துமணி.

நாலுபக்கமும் கண்ண ஓடவிட்டு, நடந்த கூத்து கொடுமையெல்லாம் நெஞ்சுக்கூட்டுல வாங்கி நிறுத்திக்கிட்டு, அண்ணன் சாஞ்சிருந்த கட்டில் சட்டத்துல போய் ஒக்காந்தான் சின்னப்பாண்டி.

கொஞ்ச நேரம் ஒண்ணும் பேசல அண்ணன்தம்பி ரெண்டு பேரும்.

ஒரு சைசா ஆரம்பிச்சான் சின்னப்பாண்டி:

"சாப்பிட்டியாண்ணே?"

"ஆமடா...உங்கப்பன் கெடா வெட்டி வச்சிருக்கான். நீ வாழை எல வாங்கிட்டு வந்திருக்கியாக்கும்..."

"அப்பன் கெடா வெட்டலையேன்னுதான் அப்பனையே வெட்டப் போனையாக்கும். அதுக்கு என்னையே வெட்டியிருக்கலாமேண்ணே."

"இருந்தா வெட்டியிருப்பேன். இப்பத்தான வர்ற..."

"இப்பக்கூட வெட்டுண்ணே. எம் மேல என்னண்ணே கோவம் ஒனக்கு?"

"ஒரு வார்த்த சொல்லியிருப்பியாடா. அண்ணன் கடனத் திருப்பிக் கொடுத்திரணும். பிள்ளைகுட்டியோட கஷ்டப்படுறான்னு"

"அப்பனும்தான புள்ளகுட்டியோட கஷ்டப்படுது? உனக்காச்சும் ரெண்டு புள்ள; ஒன்னச்சேத்து மூணு புள்ளன்னே அப்பனுக்கு"

"நெனச்சானாடா? நானும் அவன் புள்ளதான்னு என்னைக்காச்சும் நெனச்சானா ஒங்கப்பன்? கடன ஒடன வாங்கித்தான கல்யாணம் பண்ணி வச்சேன் தங்கச்சிக்கு? வாங்குன கடனுக்கு வட்டி கட்டியே எஞ் சம்பளம் போச்சு. எப்பத் தரப் போறான் உங்கப்பன்? எழுதிக் கொடுக்கச் சொல்லு"



"எழுதப் படிக்கத் தெரியாதவர்கிட்டப் போயி எழுதிக் கொடுங்கறியே. ஒரு வெள்ளாமைக்குப் பொறுத்துக் கண்ணே"

"எத்தன வெள்ளாமைக்குப் பொறுக்கறது? வாழைல வந்துரும்னாக; கரும்புல கழியும்னாக; நெல்லுன்னாக; கத்திரின்னாக. வெள்ளாமை வீடு வந்துருக்கு; என் கையில காசு வந்திருக்கா?"

அதுவரைக்கும் சும்மாயிருந்த இப்ராகிம் ராவுத்தர் எந்திரிச்சுட்டாரு.

"தம்பி முத்துமணி! நானும் சம்சாரிதான்; நீயும் சம்சாரி வீட்டுப் பிள்ளைதான். நீயாச் சொல்லு. இந்த அஞ்சு வருசத்துல எந்த வெள்ளாமையாச்சும் எச்சா மிச்சா வெளஞ்சிருக்கா? அப்படி வெளஞ்ச பொருளுக்கு வெல கெடச்சிருக்கா? மூணு தலைமுறையா நல்ல பொழப்புப் பொழைச்ச பொன்னுச்சாமி நேத்து பருத்திக்கு வச்சிருந்த மருந்தைக் குடிச்சிட்டுப் படுத்துட்டான். வத்தலக்குண்டு ஆசுபத்திரிக்குத் தூக்கிட்டுப் போயிருக்காங்க வாயில நுரையோட. சாகிறானா பொழைக்கிறானா தெரியல. அவன் குடிச்சிட்டான்; உங்கப்பன் குடிக்கல. தருமம் நீதிக்குக் கட்டுப்பட்டவரப்பா உன் தகப்பனாரு. கடவுள் கண் தெறக்கட்டும். உனக்குக் குடுக்காம யாருக்குக் குடுக்கப் போறாரு."

அதுவரைக்கும் குழிஞ்ச கட்டில்ல சரிஞ்சு கெடந்த முத்துமணி தவ்வி எந்திரிச்சுட்டான்.

"ராவுத்தரய்யா... எனக்குக் குடுக்காம யாருக்குக் குடுப்பாகன்னா கேட்டீங்க? பொட்டச்சிக்குப் போகுதய்யா பொறந்த வீட்லயிருந்து. அவ ஒருத்திதான் இந்த வீட்டுல பெறந்தவளா? நாங்க பெறக்கலையா? களத்துல நெல்லடிக்கறாகளா? அஞ்சு மூட்டை அவுளுக்கு. கத்தரிக்கா காய்க்குதா? மொதச் சாக்கு அவுளுக்கு. வாழை தாரு போட்டுச்சா? மொதச் சீப்பு அவுளுக்கு. பசுமாடு கன்னு போட்டுச்சா? மொதச் சீம்பா அவுளுக்கு. கன்னுக்குட்டி சாணி போட்டுச்சா? எருவெல்லாம் அவுளுக்கு. எங்களுக்கு என்னா இருக்கு மிச்சம்? எல்லாமே பொட்டச்சிக்குன்னு எழுதிவச்சிருங்களேன்."

மேலயும் கீழயும் கத்திவீசற மாதிரி கையையும் காலையும் ஆட்டி ஆட்டிப் பேசிக்கிட்டிருந்த அண்ணங்காரனைத் தோள்ல கைவச்சு ஒரு அழுத்து அழுத்தி உக்கார வைக்கிறான் தம்பி.

"ஏன்னே! கூடப் பெறந்தவதானா? குடுத்தா என்னண்ணே தப்பு? பொட்டப்புள்ளைக்குச் சொத்துல பங்கு இருக்குன்னாலும் அது கேக்கப் போறதுமில்ல; நீ குடுக்கப் போறதுமில்ல. என் படிப்பு முடிஞ்சு நான் ஒரு வேலை வாங்கிக்கிர்றேன். தாய், தகப்பன் காலத்துக்குப் பெறகு எல்லாச் சொத்தையும் நீயே எடுத்துக்க."

"வாடா என் வள்ளலுக்குப் பொறந்தவனே... இருந்தாத்தான எடுக்க முடியும்? இருக்குமா சொத்து? நம்ம அப்பன் நம்ம சொத்தக் கடங்காரன் கையில கொடுப்பானோ இல்ல தங்கச்சிக்குத் தாரை வாக்கப் போறானோ யாருக்கும் தெரியும்?"

ஒண்ணும் பேசல கருத்தமாயி.

ஓரமாக் கெடந்த வௌக்கமாத்துல ஒரு குச்சி எடுத்து ஒடிச்சுக் கடவாப் பல்லுல மாட்டிக்கிட்ட கீரை நாரைக் குத்திக்கிட்டு ஒண்ணும் கேக்காதது மாதிரி தூண்ல சாஞ்சு ஒக்காந்திருக்காரு எச்சி துப்ப ஏதுவா.

உள்வீட்டுல உக்காந்திருந்த சிட்டம்மா மூஞ்சி காமிக்கல; சத்தம் மட்டும் வருது.

"ஏலே அய்யா முத்துமணி! என்னத்தக் கொண்டு வந்தோம். என்னத்தக் கொண்டு போகப் போறம்? நம்ம கையில' என்ன இருக்கு? சொத்து இருந்தா இருந்ததுதான்; வித்தா வித்ததுதான்."

"விப்ப கெழவி விப்ப. முத்துமாணிக்கம் வீட்ல இருந்து மூக்குத்திகூட இல்லாம வந்தவதான நீயி. யார் சொத்தை யார் விக்கிறது? இது ஒண்ணும் கருத்தமாயி சுயசம்பாத்தியம் கெடையாது. எங்க பாட்டன் சீனிச்சாமி தேடி வச்ச சொத்து. சும்மா விட்டுருவமா? விக்கிற ஆள வீட்டுல பாப்போம்; வாங்கற ஆள ரோட்டுல பாப்போம்."

"ஏப்பா! படிச்சவன் பேசற பேச்சா இது? உளுத்து உள்கூடு தேஞ்சு உக்காந்திருக்காரு ஒங்கப்பன். கடனைக் குடு கடனைக் குடுங்கறியே! பெத்த கடனை எப்பிடித் தீப்ப? ஊட்டி வளத்தாளே ஒங்க ஆத்தா. அவ குடுத்த தாய்ப்பால எப்படித் திருப்பிக் கொடுப்ப?"

தோள்ல கெடந்த துண்டை உதறிக் கடுஞ்சு பேசிட்டாரு வீரணத் தேவரு.

"வாருமய்யா வெட்டிப் பேச்சு வீரணத்தேவரே! நீரு உங்கப்பன் சொத்துல மஞ்சக்குளிக்கிற ஆளு. பொட்டக் கோழிக்கில்ல தெரியும் பொச்சு வலி? தாய்ப்பால வாயில வெரல விட்டு வாந்தியெடுக்கச் சொல்றீகளாக்கும்; அது முடியாது. ஆனா பொறுங்க. எப்பிடியும் எம் பொண்டாட்டி மூணாம்பிள்ளைக்கு முழுகாம இருக்கப் போறதில்ல. பெறக்கட்டும் புள்ள. சங்குல பீச்சியாச்சும் கொண்டாந்து குடுத்திர்றேன் தாய்ப்பால. நீங்க ஒரு ஓரமாக் காச்சி உறை ஊத்தி வச்சாலும் வச்சுக்குங்க. பேச வந்துட்டாக பேச்சு... தாய்ப்பாலு கொடுக்க வக்கு இல்லாமலா பிள்ள ஒருத்தி பெறுவா பிள்ள?"

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகமும் மானிப்பாய் பரிஷ் லியோக் கழகமும் இணைந்து முல்லைத்தீவு பகுதியில் அண்மையில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவுப்பொருட்களை கையளித்ததை படத்தில் காணலாம். (படம் :-மானிப்பாய் செய்தியாளர்)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு கூரைத்தகடுகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 17 குடும்பங்களுக்கு கூரைத்தகரங்களை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் வழங்கி வைத்துள்ளார்.

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் பிரதேச செயலர் ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தற்காலிக வீடு அமைப்பதற்கான உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (அ-2)

# கொள்ளையுடன் தொடர்புடைய இராணுவத்தினர் கைதாகினர்

(கொழும்பு)

பொலிஸ் வேடத்தில் வீடுகளில் நுழைந்து கொள்ளைச் சம்பவங்களை மேற்கொண்ட இராணுவத்தினர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் என்ற போர்வையில் குறித்த கொள்ளைக் கும்பல் வீடுகளில் புகுந்து கொள்ளையிட்டுள்ளது. தற்போது கடமையாற்றி வரும் மூன்று இராணுவ வீரர்களும் இந்தக் கும்பலில் அங்கம் வகிக்கின்றனர். இந்தக் கும்பலில் மொத்தமாக 12 பேர் அங்கம் வகிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

பனாகொடை இராணுவ முகாமில் கடமையாற்றி வந்த இராணுவ உத்தியோகத்தர்கள் நீண்ட காலமாக பொலிஸ் வேடத்தில் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளனர்.

கொழும்பு மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களில் கொள்ளைச் சம்பவங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒருகோடி ரூபா பணம், தங்க ஆபரணங்கள், வீட்டு உபகரணப் பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன. (அ-2)

# சட்டத்தரணிகளின் போராட்டம் குறித்து பொலிஸில் முறைப்பாடு

(கொழும்பு)

இலங்கையின் 44 ஆவது பிரதம நீதியரசராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸை வரவேற்கும் நிகழ்வில் பங்கேற்கப் போவதில்லை என இலங்கை சட்டத்தரணிகள் சங்க செயலாளர் சஞ்சய கமகே தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் ,

கடந்த டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்திற்கு அமைய வரவேற்பு நிகழ்வுகளில் தமது சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் பங்கேற்கப் போவதில்லை.

வழமையாக பிரதம நீதியரசர் நியமிக்கப்பட்டால் வரவேற்பு நிகழ்வு ஒன்று நடத்தப்படும். இதில் சட்டமா அதிபரும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவரும் விசேட உரையாற்றுவது வழமையாகும்.

சட்டத்தரணிகள் போராட்டம் தொடர்பில் விசாரணை நடத்துமாறு பொலிஸ்மா அதிபர் என்.கே. இளங்கக்கோனிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த 10 ஆம் திகதி கொழும்பு நீதவான் நீதிமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற போராட்டங்களின் பின்னணியில் இயங்கியோர் பற்றி விசாரணை நடத்தப்பட வேண்டுமென முறைப்பாட்டில் கோரப்பட்டுள்ளது.

சட்டத்தரணி உணவட்டுன கே.அருணலக்சிறி என்பவரினால் குறித்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆம் திகதி நடைபெற்ற போராட்டத்தினால் தமக்கும் தமது சேவை பெறுநர்களுக்கும் பாரியளவில் பாதிப்பு ஏற்பட்டதாக முறைப்பாட்டில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அடிப்படை உரிமை மீறலாகக் கருதி இது தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென கோரியுள்ளார். (அ-2)

# புலிகளுக்கு உதவிய வர்த்தகருக்கு சிறை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு உதவிகளை வழங்கிய தமிழ் வர்த்தகர் ஒருவருக்கு ஒன்றரை ஆண்டு கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

புலிகளுக்காக வாகனங்கள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன என்பதனை அறிந்தும் அதுபற்றி தகவல்களை வழங்காத வர்த்தகர் ஒருவரே இவ்வாறு தண்டிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு நீதிமன்ற நீதவான் பத்மன் சூரசேன இந்தத் தண்டனையை விதித்துள்ளார்.

இரண்டு குற்றச்சாட்டுக்களுக்கு தலா ஒன்றரை ஆண்டு கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு தண்டனைக் காலத்தையும் ஒரே தடவையில் கழிக்கும் வகையில் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# மொஹான் பீரிஸ் நியமிக்கப்பட்டமை எதிர்த்தரப்பை வலுவடைய வைக்கும்

## சிரேஷ்ட சட்டத்தரணி கோமின் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

பிரதம நீதியரசர் பதவிக்கு மொஹான் பீரிஸ் நியமிக்கப்பட்டமை எதிர்த்தரப்பை வலுப்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாக சிரேஷ்ட சட்டத்தரணி கோமின் தயாசிறி தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலின் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

உச்ச நீதிமன்ற நீதியரசர்களின் பக்கச்சார்பு தன்மை குறித்து எவ்வித சர்ச்சையும் இல்லாத காரணத்தினால் உச்ச நீதிமன்ற நீதியரசர் ஒருவரை நியமித்திருக்கலாம்.

ஜனாதிபதிக்கு மிகவும் நெருக்கமான அமைச்சரவை சட்ட ஆலோசகரை நியமிப்பது பொருத்தமற்றது. இவ்வாறான நியமனங்கள் அரசியல் ரீதியானவை என எதிர்த்தரப்பினர் குற்றம் சுமத்த வாய்ப்புள்ளது.

முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸை புதிய பிரதம நீதியரசராக நியமித்தமை எதிர்த்தரப்பினரை மேலும் வலுப்படுத்துவதற்கு சமனானது என்றார். (அ-2)

# கைப்பேசி எமி இலக்கங்களை இனம்காண புதிய நடைமுறை

(கொழும்பு)

கையடக்க தொலைபேசிகளின் எமி இலக்கங்களை இனங்காண்பதற்கான புதிய இலத்திரனியல் முறைமையொன்றை அறிமுகப்படுத்த தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய பதிவு செய்யப்படாத கையடக்க தொலைபேசிகளை புதிய திட்டத்தின் கீழ் தன்னியக்கமாக செயலிழக்கச் செய்ய முடியும் என ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுச பெல்பிட்ட தெரிவித்தார்.

எமி இலக்கங்களை கணனி மயப்படுத்தும் முறைமையை அறிமுகப்படுத்துவதற்காக ஏற்கனவே விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. EIR என்றழைக்கப்படுகின்ற புதிய நடை முறை அறிமுகப்படுத்தப்பட்டு சிறிது கால த்தில் பதிவு செய்யப்படாத எமி இலக்கங்களுடைய கையடக்க தொலைபேசிகளை துண்டிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தற்போது வருடாந்தம் சுமார் ஐந்து தொடக்கம் ஆறு மில்லியன் கையடக்க தொலைபேசிகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்றன.

இதில் சுமார் 50 வீதமானவை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்படாத தரம் குறைந்த கையடக்க தொலைபேசிகள் என்பது தெரியவந்துள்ளது.

இலங்கைக்கு கொண்டு வரப்படுகின்ற அனைத்து கையடக்க தொலைபேசிகளினதும் எமி இலக்கங்கள் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# பொன்சேகாவின் ஓய்வூதியத்தை இல்லாமல் செய்தது மக்கள் விடுதலை முன்னணியே

## அமைச்சர் மஹிந்த அமரவீர

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவினதும் முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவினதும் ஓய்வூதியத்தை இல்லாமல் செய்தவர்கள் மக்கள் விடுதலை முன்னணியினரே என்று அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமர வீர தெரிவித்துள்ளார்.

அம்பலாந்தோட்டை பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அங்கு அவர் மேலும் கூறுகையில்,

இந்நிலையில் மக்கள் விடுதலை முன்னணியினர் இனி யாருடைய ஓய்வூதியத்தை இல்லாமல் செய்ய திட்டமிட்டுள்ளார்கள் என்றும் அமைச்சர் கேள்வி எழுப்பியுள்ளார்.

வீரர் ஒருவராகக் காணப்பட்ட பொன்சேகாவை அரசியலுக்கு இழுத்து அவரை அந்தரத்தில் விட்டுள்ளனர். இதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் பொறுப்புக்கூற வேண்டும். மக்கள் விடுதலை முன்னணியின் கயிற்றில் சிக்கிய பொன்சேகா இன்று தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

அதேபோன்று முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் ஓய்வூதியத்துக்கும் அக்கட்சியினர் தங்களது வேலையைக் காட்டியுள்ளனர்.

நாட்டின் முக்கியஸ்தர்களாக இருந்த இருவரை பள்ளத்தில் தள்ளிவிட்டு முன்னோக்கி வரவே மக்கள் விடுதலை முன்னணியினர் திட்டமிட்டிருந்தனர். அரசியல் நோக்கம் கருதி யாரையேனும் பலிக்கடாவாக்குவதே அக்கட்சியினரின் வழமை என்று அமைச்சர் மேலும் கூறினார். (அ-2)

# எல்லை தாண்டி மீன்பிடிப்போருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை

## அரசாங்கம் அறிவிப்பு

இலங்கைக்கடற்பரப்பிற்கு வெளியே அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களுக்கு கடுமையான தண்டனை விதிக்கப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களுக்கு கடுமையான தண்டனை விதிக்கப்படக் கூடிய வகையில் சட்டத் திருத்தங்கள் செய்யப்படவுள்ளன.

இது தொடர்பான யோசனைத் திட்டமொன்று அமைச்சரவையிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. அத்துமீறும் மீனவர்களின் வள்ளங்களை பறிமுதல் செய்தல், 15 இலட்சம் ரூபா அபராதம் விதித்தல் போன்ற தண்டனைகள் விதிக்கப்படவுள்ளன.

இலங்கைக் கடற்பரப்பிற்கு வெளியே மீன்பிடியில் ஈடுபடுவதனால் பல்வேறு சிக்கல்கள் ஏற்படுவதாக மீன்பிடித்துறை வள அமைச்சு அறிவித்துள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2012 இல் புதிய பரிணாமத்தை அடைந்த கைபேசி தொழில்நுட்பம்



சென்ற ஆண்டில் பல வியத்தகு மாற்றங்களைக் கண்டது கைத்தொலைபேசி. அன்ரொய்ட் இயக்கமும் சாம்சங் நிறுவனமும் மக்களிடையே பிரபலமாயின. அன்ரொய்டஇயக்க முறைமையும்,அதற்கான சாதனங்களைத் தயாரித்த கூட்டாளியான சாம்சங் நிறுவனமும், அப்பிள் மற்றும் ஐபோனை, அடுத்த நிலைக்குத் தள்ளின. மொபைல் உலகில், மைக்ரோசொப்ட்,நொக்கியா மற்றும் ரிசர்ச் இன் மோஷன் ஆகிய நிறுவனங்கள் கூகுள் மற்றும் அப்பிள் நிறுவனத்தின் உறுதியான விற்பனைச் சந்தையில் எந்த பாதிப்பையும் ஏற்படுத்த இயலவில்லை.

இந்நிலையில் கடந்த ஆண்டில் கைபேசி தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட சில மாற்றங்கள் வருமாறு :

### 1. ஐ.ஓ.எஸ். சிஸ்டத்தை முழுமையாக வென்ற அன்ரொய்ட் :

ஸ்மார்ட் போன் இயக்கத்தில், எந்த ஒப்பரேட்டிங் சிஸ்டம் நிலையான இடம் பிடிக்கும் என்ற சந்தேகம், 2012 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்தது. இந்த சந்தேகங்களை உடைத்தெறிந்து, அன்ரொய்ட தன்னை முதல் இடத்தில் மட்டுமில்லாமல், பெரும்பான்மையான ஸ்மார்ட் போன் பயன்பாட்டில் இடம் பிடித்தது. 2012 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில், உலக அளவில் 75% ஸ்மார்ட் போன்களில், அன்ரொய்ட் சஸ்டமே இடம் பெற்றிருந்தது. அமெரிக்காவில் ஐபோன் பயன்பாடு பெரிய அளவில் இருந்தாலும், உலக நாடுகளை மொத்தமாகப் பார்க்கையில், ஐ.ஓ. எஸ். சிஸ்டம் கொண்ட போன்கள் 14.9 சதவிகிதமே இருந்தன.

2008 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட நாளில் இருந்து, மிக வேகமாக முன்னேறி, அன்ரொய்ட் முதல் இடத்தைப் பிடித்தது. பன்னாட்டளவில், அன்ரொய்ட் இயங்கும் ஸ்மார்ட் போன்கள் அதிகம் உள்ளது சீனாவில்தான். 78 கோடியே 60 லட்சம் அன்ரொய்ட் ஸ்மார்ட்போன்கள் இங்கு பயன்படுத்தப்படுகின்றன. அமெரிக்காவில் மட்டும்தான் அப்பிள் இதற்குச் சரியான போட்டியை இன்னும் தந்து கொண்டுள்ளது.

### 2. விண்டோஸ் மொபைல்:

மைக்ரோசொப்ட், மொபைல் உலகிலும் தன் பங்கினைப் பெரிய அளவில் பெற்றிட திட்டமிட்டு செயலாற்றி வருகிறது. இந்தப் பிரிவில் இதுவரை பெற முடியாமல் போனதை, விண்டோஸ் போன் 8 பெற்றுக் கொடுக்கும் என்று எதிர்பார்க்கிறது. விண்டோஸ் போன் 8 ஒப்பரேட்டிங் சிஸ்டம் நவம்பரில் வெளியானது.

மேசைக் கணனி, மடிக்கணனி மற்றும் டேப்ளட் கணனிகளுக்கான விண்டோஸ் 8 வெளியாகி சில நாட்களில் இது வெளியானது. என்றாவது ஒரு நாள், கைபேசிகளின் ஒப்பரேட்டிங் சிஸ்டமும் விண்டோஸ் 8 ஒப்பரேட்டிங் சிஸ்டமும் இணைந்த சிஸ்டமாக உருவாகும். எச்.டி.சி., நொக்கியா, சாம்சங் ஆகியவை விண்டோஸ் போன் 8 ஒப்பரேட்டிங் சிஸ்டத்துடன் மொபைல் போன்களை உருவாக்கித் தருவதால், ஸ்மார்ட் போன் பயன்பாட்டில் மூன்றாவது இடத்தினை மைக்ரோசொப்ட் விரைவில் பிடிக்க இயலும்.

### 3. நொக்கியாவைத் தள்ளிய சாம்சங்:

ஏற்கனவே ஸ்மார்ட் போன் விற்பனையில் முதல் இடத்தைப் பிடித்த சாம்சங், தற்போது சாதாரண கைபேசி விற்பனையிலும் நொக்கியாவை இரண்டாவது இடத்திற்கு ஒதுக்கி, முதல் இடத்திற்கு முன்னேறியுள்ளது. ஏறத்தாழ 14 ஆண்டுகள், இந்த வகையில் முதல் இடத்தை நொக்கியா கொண்டிருந்தது. இப்போது உலக அளவில் சாம்சங் நிறுவன கைபேசிகளே அதிகம் விற்பனையாகிறது.

# அப்பிள் கிடங்கு

ஏழு இட்சத்து 70 ஆயிரம் அப்ளிகேஷன் புரோகிராம்கள், பதிந்துள்ள பயனாளர்கள் 50 கோடி, இதுவரை 4 ஆயிரம் கோடி டவுண்லோட், 2012இல் மட்டும் 2 ஆயிரம் கோடி டவுண்லோட் என, உலகின் மிகப் பெரிய தொழில்நுட்ப நிறுவனமாக அப்பிள் உருவெடுத்துள்ளது.

2008இல் தொடங்கப்பட்ட இந்த நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட புரோகிராம்களின் எண்ணிக்கை அனைவரையும் வியக்க வைக்கிறது. ஐ.ஓ.எஸ். சிஸ்டத்தில் இயங்கும் அப்ளிகேஷன் புரோகிராம்களை உருவாக்கும் மென்பொருள் வல்லுநர்களுக்கும் இது வருமானத்தைத் தந்து வருகிறது. இதுவரை 700 கோடி டொலர் அளிக்கப்பட்டுள்ளது.

அப்பிள் நிறுவனத்தின் வளர்ச்சி கடந்த ஓர் ஆண்டில் தான் மிக வேகமாக இருந்துள்ளது. இந்த வேகம் இந்த ஆண்டில் இன்னும் அதிகமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வரும் டிசம்பருக்குள், 100 கோடி மொபைல் புரோகிராம்கள் தரவிறக்கம் செய்யப்படும் என இதனை ஆய்வு செய்திட்ட அமைப்புகள் அறிவித்துள்ளன.

# இணையத்தள பாவனையால் ஆண்டுக்கு 83 தொன் காபனீரொக்சைட்

இணையத்தள பாவனை உலகின் செயற்பாடுகளுக்கான அடிப்படைக் கட்டமைப்பாக மாறிவிட்ட நிலையில், இதில் பயன்படுத்தப்படும் சாதனங்கள், ஆண்டுக்கு 83 தொன் காபனீரொக்சைட் வாயுவினை வெளியிடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தகவல்தொழில்நுட்ப துறை இயக்கம் குறித்து ஆய்வு நடத்திவரும் ஜேர்மனி நிறுவனம் இதனைத் தெரிவித்துள்ளது.



இது உலக அளவில் வெளிப்படும் இந்த வாயுவில் 2% ஆகும். இது வரும் 2020 ஆம் ஆண்டில் இரு மடங்காக உயரும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனைக் கட்டுப்படுத்தும் வழிகளைக் கண்டறிய பல்வேறு நிலைகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இன்டர்நெட் மற்றும் பிறவகை வலையமைப்பில் இயங்கும் அனைத்தையும் ஆய்வில் கொண்டு வர வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வருகிறது பேஸ்புக் கைபேசி




பேஸ்புக் நிறுவனம் கைபேசிகளை வெளியிடுகிறது. இதற்கான அறிவிப்பு விரைவில் வெளியாகுமென அறிவிக்கப்படுகிறது. இதற்காக பேஸ்புக் நிறுவனத்தின் தலைமையிடமான கலிபோர்னியாவில் உள்ள மென்லோ பார்க்கில் அரங்கமைத்து நிகழ்ச்சி நடைபெறவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தொழில்நுட்ப உலகில் அதிகம் கிசுகிசுக்கப்படும் ஊடகமாக திகழும் பேஸ்புக் கைபேசிகளை தயாரித்திருப்பது எதிர் வருங்காலங்களில் மற்றைய நிறுவனங்களுடன் போட்டியாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# மிருகங்களின் குரலைக் கேட்க..




நம் குழந்தைகளுக்கு நாம் மிருகங்களை படம், வீடியோ மூலம் அறிமுகப்படுத்தலாம். சில வேளைகளில் சில மிருகங்களை அவை வாழும் இடத்தில் அல்லது உயிரியல் பூங்காக்களில் காட்டலாம். அவற்றைப் பார்த்த பின்னர், நம் குழந்தை குறிப்பிட்ட மிருகத்தின் குரல் எப்படி இருக்கும்? எனக் கேட்டால் என்ன பதிலைத் தருவது. நாம் குரல் எழுப்பினால் அது வித்தியாசமாக இருக்குமே. இந்தப் பிரச்னையை ஓர் இணைய தளம் தீர்த்து வைக்கிறது. மிருகங்களின் ஒலி நூலகம் (Animal Sounds Library) என இதற்கு பெயர் வைத்திருக்கிறார்கள். (எது எதற்குத்தான் நூலகம் இருப்பது? என முணு முணுக்கிறீர்களா?) இதனை ஒருமுறை பார்த்துவிட்டால், நிச்சயம் அதனால் கவரப்படுவீர்கள்.

இந்த தளத்திற்குச் சென்று, நீங்கள் கேட்க விரும்பும் மிருகத்தின் படத்தின் அருகே உள்ள listen பட்டனை அழுத்தவும். அதற்கான பைல் லோட் ஆகி, உடனே தானாக இயங்கி, மிருகத்தின் ஒலியைக் கொடுக்கும். மீண்டும் மிருகங்களின் பட்டியலைப் பெற, Back பட்டனை அழுத்தவும். சிங்கக் குட்டி, கொரில்லா குரங்கு, ஒட்டகம், நீர் வாழ் விலங்குகள் என எல்லாமே இங்கு கிடைக்கின்றன. உங்கள் குழந்தைகளுக்குக் காட்டி, குதூகலம் அடைந்து, நீங்களும் மகிழ்ச்சியாக அவர்களுடன் விளையாடலாம்.

இந்த தளத்தின் முகவரி:
http://www. seaworld.org/animalinfo/soundlibrary




சீனாவில் ஹர்பின் நகரிலுள்ள அதிநவீன உணவகமொன்றில் உணவு பரிமாறுதல், உணவை சமைப்பது மற்றும் பில் வாங்குவது கூட ரோபோ தானாம். இந்த ரோபோக்கள் அதிநவீன செயற்றிறன் மற்றும் உளவள ஆற்றலைக்கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த உணவகத்தில் 18 விதமான ரோபோக்கள் பயன்படுத்தப்படுகின்றன. உணவின் தன்மைக்கேற்ப ரோபோக்களும் வேறுபடும். மேலும் இவை முன்னரே பதிவுசெய்யப்பட்ட புரோக்கிராம்களின் படி செயற்படுமென்பது குறிப்பிடத்தக்கது.



சீன உணவகத்தில் ரோபோவின் ஆட்சி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# என்ன செய்யப் போகிறார்கள் கலைஞரின் வாரிசுகள்?

வெறும் வாயை மெல்லும் ஊடகங்களுக்கு சமீபத்தில் தி.மு.க. தலைவர் கருணாநிதி ஒரு பிடி அவலைக் கொடுத்தார். அவர் போகிற போக்கில் ஏதோ ஒரு மனநெகிழ்ச்சியில் சொன்ன ஒரு வாசகத்தை ஊடகங்கள் எவ்வளவு விவாதிக்க முடியுமோ விவாதித்து தீர்த்தன.

இன்னும் சொல்லப் போனால் ஏற்கனவே தி.மு.கவில் இருந்து கொண்டிருக்கும் வாரிசு அரசியல் புகையைக் கொஞ்சம் ஊதி நெருப்பாக்க முடியுமா என அவை பெரிதும் முயற்சித்தன. தனது வாரிசாக தி.மு.கவின் அடுத்த தலைவராக ஸ்டாலினை அவர் அறிவித்து விட்டார் என்று பிடிவாதமாகச் சாதித்தன. உண்மையில் அப்படி அவர் ஏதும் சொன்னாரா என்று அவரது பேச்சில் தேடிப்பார்த்தால் அதற்கான தடயமே இல்லை.

போதாததற்கு *தி.மு.க. என்ன மடமா* என்று மு.க.அழகிரி எதற்கோ கேட்டதை இதோடு முடிச்சுப் போட்டு எரிகிற-தீயில் எங்காவது எண்ணெய் ஊற்றலாமா என்று வேறு பார்த்தார்கள். கருணாநிதி அப்படி என்னதான் சொல்லிவிட்டார் ஸ்டாலினைப் பற்றி.

"பெரியாருக்கும் அண்ணாவுக்கும் சமத்துவத்திலே ஒரு நம்பிக்கையும் உறுதிப்பாட்டையும் ஏற்படுத்தக் கூடிய அளவுக்கு ஒத்துழைப்பு காட்டியவர் அம்பேத்கர். அவருடைய செயற்பாடுகளைப் போற்றிப் பாதுகாப்பதுதான் தி.மு.கவின் கடமை. இந்தச் சமுதாய மேன்மைக்காக என் (கருணாநிதி) ஆயுள் இருக்கும்வரை பாடுபடுவேன். அப்படியானால் அதற்குப் பின்னர் என்ற கேள்விக்குப் பதில்தான் ஸ்டாலின். அவரை நீங்கள் மறந்துவிடக்கூடாது."

இதுதான் அன்று அவர் பேசியது. மேலும் அதே உரையில் தனது மகன் அழகிரி கலப்புத் திருமணம் செய்ததையும் அவர் புகழ்ந்து பேசியிருக்கிறார்.

தனது பிள்ளைகள் சமூக நீதிக் கருத்துக்களை முன்னெடுக்க வேண்டும். அதற்குத் தொண்டர்கள் ஆதரவாக இருக்க வேண்டும் என்பதைத் தவிர அதில் எந்த அரசியல் கூற்றும் இல்லை.

ஆனால், உண்மையில் கருணாநிதி தனது நேரடி அரசியல் வாரிசாக யாரை நீண்காலமாகக் கருதி வந்திருக்கிறார் என்று கேட்டால் அதற்கான பதில் ஸ்டாலின் என்பதுதான். இதில் எந்த ஒளிவு மறைவும் இல்லை. அதிகாரம் மிக்க பதவிகள் கொடுக்கப்படவில்லையே தவிர நீண்டகாலமாக கட்சி அமைப்புக்குள் தனிச் செல்வாக்குடன் ஸ்டா லின் இருந்து வந்திருக்கிறார். மிக இளம் வயதில் மிசா கொடுமைகளை அனுபவித்தவர் என்ற வகையிலும் இளைஞர் அணி மூலமாக கட்சியின் கட்டுமானத்தை வலுவாக உருவாக்கியர் என்ற வகையிலும் தன்னை எந்த இடத்திலும் முன்னிறுத்திக் கொள்ளாதவர் என்ற முறையிலும் ஸ்டாலின் கருணாநிதிக்கு மிகவும் விருப்பமானவராக இருந்திருக்கிறார்.

ஆரம்பத்திலிருந்தே கருணாநிதி அழகிரிக்கு எந்த அரசியல் முக்கியத்துவமும் தராதது மட்டுமல்ல. அவரைக் கட்சியின் அதிகார மையத்திலிருந்து விலக்கி மதுரைக்கு அனுப்பி வைத்தார். அழகிரி தனது செல்வாக்கைத் தானே சொந்தமாக வளர்த்துக் கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டார்.

கனிமொழியை வெகுகாலமாகவே கருணாநிதி ஒரு அரசியல் சக்தியாகவே கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. உண்மையில் கனிமொழிக்கும் அத்தகைய அரசியல் ஈடுபாடுகள் எதுவும் நீண்ட காலமாக இருந்திருக்கவில்லை.

ஆனால், 2000இற்குப் பின்னர் மாறன் குடும்பத்தினரின் பொருளாதார வளர்ச்சியும் அரசியல் செல்வாக்கும்தான் தி.மு.கவில் நான்கு முனை அதிகாரப் போட்டியை உருவாக்கியது எனலாம். ஸ்டாலின், மு.க. அழகிரி, மாறன்கள், கனிமொழி என்ற இந்த நான்கு மையங்களைச் சமாளிக்கும் பெரும் நெருக்கடியில் கடந்த பத்தாண்டுகளாக கலைஞர் சிக்கிக் கொண்டார் என்றுதான் சொல்ல வேண்டும்.

2006இல் தி.மு.க. பதவிக்கு வந்தவுடன் ஸ்டாலினுக்கு உயர் பொறுப்பும் பதவியும் அளிக்கப்பட்டிருந்தால் கருணாநிதி இன்று சந்திக்கும் குடும்ப அரசியல் குழப்பங்கள் எதையும் சந்திக்க வேண்டியிருந்திருக்காது. உண்மையில் 2006இல் ஸ்டாலினை எதிர்க்கும் வலிமையான அரசியல் சக்திகள் யாரும் கட்சிக்குள் இல்லை. ஸ்டாலின் உயர் பொறுப்புக்களுக்காக அதிகாரப் போட்டிகளில் நீண்ட காலமாக ஈடுபட்டதில்லை. அவர் அந்த இடத்திற்கு இயல்பாக வந்து சேர்வோம் என்று பொறுமையாகக் காத்திருந்தார். கலைஞரும் ஸ்டாலினுக்குப் போட்டியாக கவர்ச்சி மிக்க தலைவர்கள் யூாரும் உருவாகாமல் பார்த்துக் கொண்டார். வைகோ போன்றவர்கள் வெளி






யேற நேர்ந்ததும் இந்தச் சூழலில்தான்.

ஆனால், அழகிரி மற்றும் கனிமொழியின் டில்லி அரசியல் பயணம் இனிமையானதாக அமையவில்லை. அழகிரியால் டில்லி அரசியலில் எந்த முக்கியத்துவத்தையும் உருவாக்கிக் கொள்ள முடியவில்லை. அவரது இயல்பான உள்ளூர் அரசியல் வழிமுறைகள் எதுவும் அவருக்கு அங்கு பயன் படவில்லை. நாடாளுமன்றத்தில் அவர் எந்த குறிப்பிடத்தக்க விவாதத்திலும் பங்கேற்றதில்லை.

டில்லி அதிகார வர்க்கத்தை அவரால் கையாள முடியவில்லை. மொழி உட்பட பல்வேறு தடைகள் அவரை முடக்கிவிட்டன என்றுதான் சொல்ல வேண்டும். ஒருவிதத்தில் கலைஞர் முன்னர் அழகிரியை மதுரைக்கு அனுப்பியது போலத்தான் பின்னர் டில்லிக்கு அனுப்பினார்.



கனிமொழி ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் நேரடியாகச் சம்பந்தப்படாதபோதும் அதற்குள் சாதுர்யமாக சிக்க வைக்கப்பட்டார். அவரது அரசியல் வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே அத்தகைய ஒரு கரும்புள்ளியை சுமக்க நேர்ந்தது மிகப்பெரிய அவலம் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஸ்டாலின் இயல்பாக கட்சிக்குள் உருவாகி வந்தவர் என்பதனால் கட்சி அமைப்புக்குள் இந்தக் காலகட்டத்தில் வெகுவேகமாகத் தனது செல்வாக்கினை உறுதி செய்து கொண்டார். எல்லா மாவட்டங்களிலும் தனது ஆதரவாளர்களின் செல்வாக்கினைப் பெருகச் செய்வதில் அவர் பெருமளவு வெற்றி பெற்றுவிட்டார் என்றே சொல்ல வேண்டும். கடந்த இரண்டாண்டுகளில் அவர் தமிழகம் முழுக்க சுற்றுப் பிரயாணம் செய்து தனது செல்வாக்கினைக் கட்சிக்குள் கணிசமாக உயர்த்திக் கொண்டார். அழகிரி ஆதரவாளர்கள் பலர் ஸ்டாலினை நோக்கி நகர ஆரம்பித்தனர். அரசாங்கத்தினை விமர்சிக்கும் கடுமையான அறிக்கைகளைத் தொடர்ந்து வெளியிட்டதுடன் பல்வேறு போராட்டங்களிலும் பங்கேற்றார். கனிமொழியோ அழகிரியோ இதற்குள் வர முடியாத பல்வேறு சிக்கல்களுக்குள் இருந்தனர்.

தி.மு.கவில் ஜெயலலிதாவின் அதிரடி அரசியலை எதிர்கொள்ளக்கூடிய ஒருவராக மு.க.அழகிரி கருதப்பட்டார். கடந்த தேர்தல் சமயத்தில் ஜெயலலிதாவிற்கு துணிச்சலாக சவால்விடும் ஒரே தலைவராக திகழ்ந்தார் என்பதும் உண்மை. அதேபோல கனிமொழி கருணாநிதியின் தமிழ்ப்பற்றுக்கு வாரிசாகவும் பெண்ணிய சமூக சீர்திருத்தக் கருத்துக்களும் கல்வியும் நல்லுணர்வுகளும் கொண்ட ஒரு இளைய தலைமுறை பிரதிநிதியாக தி.மு.கவில் கருதப்பட்டார்.

## வரம்பு மீறிச் செல்லும் வாரிசுகளின் போர்!

**இந்தியப் பார்வை**

ஆனால், அழகிரியின் வன் அரசியலையும் கனிமொழியின் மென் அரசியலையும் விட ஸ்டாலின் வெகுதூரம் முன்னேறியிருந்தார் என்றே சொல்ல வேண்டும்.


அரசியல் காழ்ப்புகளை வெளிப்படுத்தாத ஒருவர் என்கிற பெய்ரை அவர் வெகு இயல்பாகப் பெற்றார். சென்னை மாநகர மேயராகப் பணியாற்றிய காலத்திலும் பின்னர் ஊடக வளர்ச்சித்துறை அமைச்சராகவும் துணை முதல்வராகவும் பணியாற்றிய காலத்திலும் நிர்வாகத்திறன் கொண்டவர். சிறந்த அதிகாரிகளின் துணையுடன் கூட்டாக முடிவுகள் எடுக்கக்கூடியவர் என்ற நற்பெயர் அவருக்குக் கிட்டியது. கலைஞரைக் கடுமையாக எதிர்ப்பவர்கள் கூட ஸ்டாலினுக்குக் கொடுக்கப்பட்ட பதவிகளையோ பொறுப்புக்களையோ விமர்சிக்கவில்லை.

இவ்வாறு கட்சிக்குள்ளும் பொது அபிப்பிராயத்திலும் ஸ்டாலின் மதிப்பு உயர்ந்து வருவதையும் கலைஞர் நியமிக்காவிட்டால் கூட அவரே கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்பார் என்பதையும் கட்சிக் குள் இருந்த அடுத்தகட்ட தலைவர்கள் தெளிவாகவே உணர்ந்திருந்தனர்.

அழகிரி ஸ்டாலின் தலைமைப் பொறுப்புக்கு வருவதைக் கடுமையாக எதிர்த்து வருகிறார். கலைஞரை மட்டுமே தலைவரா ஏற்பேன் என்றும் தனக்குக் கட்சியின் உயர் பொறுப்புக்கு வர எல்லா தகுதியும் உண்டு என்றும் தொடர்ந்து சொல்லி வருகிறார்.

இது அவர் எந்த நேரத்திலும் அதிகார யுகத்தில் ஸ்டாலினுடன் நேரடியாக மோதக் கூடும் என்ற எண்ணத்தை வலுவாக ஏற்படுத்துகிறது. இந்த சவாலை ஸ்டாலின் எப்படி எதிர்கொள்ளப் போகிறார் என்பதில்தான் அவரது முழு அரசியல் எதிர்காலமும் இருக்கிறது.

கருணாநிதியின் ஐம்பதாண்டு கால அரசியல் வாழ்வில் அவர் சந்தித்த சவால்களும் போராட்டங்களும் அதற்காக அவர் மேற்



கொண்ட சாதுரியமான செயற்பாடுகளும் பிரமாண்டமானது. அவரது அரசியல் செயற்றிறனுடனும் சொற்றிறனுடனும் அவரது வாரிசுகள் யாரையும் பெயரளவுக்குக்கூட ஒப்பிட முடியாது. அவரது இடத்தைக் கட்சிக்குள் அவர்கள் யாரும் முழுமையாகப் பூர்த்தி செய்ய முடியும் என்பதும் கற்பனையே.

எதிர்காலத்தில் கருணாநிதி போன்ற ஒரு தனிப்பட்ட தலைவர் தி.மு.கவை ஆள முடியாது என்பதுதான் எதார்த்தம். அத்தகைய மக்கள் செல்வாக்கு படைத்த தலைவர்களாக அவரது வாரிசுகள் யாரும் இல்லை. ஸ்டாலினை முன்னிறுத்தி ஒரு கூட்டுத் தலைமையின் கீழ் சமரசம் செய்து கொள்வதைத் தவிர கலைஞரின் அரசியல் வாரிசுகளுக்கு வேறு எந்த வழியும் இல்லை.


மேலும் கூட்டுத்தலைமை என்பது கலைஞரின் குடும்பத்தினரை மட்டுமல்ல கட்சியின் அடுத்த தலைமுறை தலைவர்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். அத்தகைய இணக்கத்தையும் சமாதானத்தையும் நோக்கி கருணாநிதியின் வாரிசுகள் செல்லாவிட்டால் கட்சியின் அமைப்பை மிகக்குறுகிய காலத்தில் சிதைத்த பெருமை அவர்களுக்கு வந்துசேரும்.

நக்கீரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இயற்கையின் சக்தி



மன்னன் சுந்தரவர்மன் ஏனைய மன்னர்களிலிருந்து மாறுபட்டவன். எப்போதும் விருந்துகளும் கேளிக்கைகளுமாக சுகபோகத்தில் காலங்கழித்தான்.


ஒருசமயம் தொடர்ந்து சில ஆண்டுகளாக ராஜ்யத்தில் மழை பெய்யவில்லை. அந்தச் சமயம் தலைநகருக்கு ஒரு யோகி தன் சீடர்களுடன் விஜயம் செய்தார். மன்னனை நம்பிப் பயன் இல்லை என்று உணர்ந்த மக்கள் யோகி வித்யானந்தரை தரிசித்து அவர் கால்களில் விழுந்து வணங்கி தங்கள் குறை தீர்க்குமாறு வேண்டினர். யோகி மக்களின் மீது பரிதாபப்பட்டு தன் சக்தியினால் அந்த ராஜ்யத்தில் மழை பொழியச் செய்தார்.

அது கண்டு மக்கள் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கி வித்யானந்தரை விழுந்து விழுந்து வணங்கிக் காணிக்கைகளைக் கொட்டினர். அவற்றை ஏற்க மறுத்த யோகி நான் செய்த உதவிக்குப் பதிலாக நீங்கள் வேறு ஒன்று செய்யவேண்டும். ஒவ்வொருவரும் மரக்கன்று நட்டு, நீர் வார்த்து, அதை வளர்த்து மரமாக்கவேண்டும். ராஜ்யமெங்கும் பழையபடி பசுமை நிறைந்த மரங்களும் செடி, கொடிகளும் வேண்டும். அது தான் நீங்கள் எனக்கு செலுத்த வேண்டிய நன்றிக்கடன் என்றார்.

இந்தச்செய்தி மன்னனின் செவிகளை எட்டியது. உடனே அவரை சபைக்கு வரவழைத்தான். சபைக்கு வந்த யோகியை வரவேற்காமல் நேரடியாக அவருடைய மழை வரவழைக்கும் சக்தியை தனக்கும் அளிக்கும் படி கட்டளையிட்டான். ஆனால் யோகி அவனுக்கு அந்த சக்தியை அளிக்க மறுத்து விட்டார்.

மன்னன் அவர்தன் கட்டளைக்கு கீழ்ப்படிய மறுத்ததைக் கண்டு உடனே அவரை சிறையிட்டான். அதற்குள் ராஜ்ஜியத்தில் பல இடங்களில் அவனுடைய குடிமக்கள் யோகியின் வேண்டுதலின்படி மரக்கன்றுகள் நடுவதையும் அவரைத் தரிசிப்பதையும் கேட்டு வியப்படைந்த அவரின் ஆசிரமத்துக்குத் தானே நேரில் சென்றான்.

அங்கு யோகி தன்னை நாடி வந்த மக்களுக்கு ஆசி வழங்குவதைக்கண்டு குழம்பிப் போனான். தான் சிறையில் அடைத்த யோகி எவ்வாறு தப்பி ஆசிரமத்திற்கு வந்தார் என்று கோபமுற்று சிறைக்காவலாளிகளை விசாரிக்கப் போனவன் பலத்த அதிர்ச்சிக்கு ஆளானான். ஏனெனில் சிறையில் யோகி தியானத்தில் ஆழ்ந்திருந்தார். அந்தக் காட்சியைக் கண்டு அவனுக்கு தலை சுற்றியது.



நிதானமாக யோசித்துப்பார்த்த பின் மன்னனுக்கு யோகியின் சக்தி தெரியவந்தது. உடனே அவரை விடுதலை செய்து தான் அவருக்கு இழைத்த குற்றத்தை மன்னிக்கவேண்டும்படி காலில் விழுந்து வணங்கினான்.

அவனை ஆசீர்வதித்த யோகி, மன்னா! நான் ஏன் உனக்கு மழை வரவழைக்கும் சக்தியைத் தரவிரும்பவில்லையென்று அறிவாயா? அது உனக்குக் கிடைத்தால் நீ அதை மட்டுமே நம்பி பழையபடி மக்கள் நலனை மறந்துவிடுவாய். தவிர, மக்களும் வறட்சி ஏற்பட்டால் மந்திரத்தால் மழை பெய்யும் என்று தெரிந்து உழைப்பில் நம்பிக்கை இழப்பார்கள். இந்த மந்திர சக்தி தேவையற்றது. மழை என்பது இயற்கையின் சக்தி. இயற்கைக்கு சேதம் விளைவிக்காமல் அதைக் கண்ணாகக் காத்தால் மழை தானே வரும்! அதற்காகத்தான் நான் இங்கு மரக்கன்றுகளை நடச்செய்தேன். மந்திரசக்தியை நம்ப வேண்டாம், மன்னா! இயற்கையின் சக்தியை நம்பு! என்றார்.

# உண்மையான செல்வம்

## அம்புலிமாமா கதைகள்

கிருஷ்ணாபுரத்தில் வசித்த ராமய்யா மிகவும் ஏழை. அவனுடைய கிராமத்தில் அவனைப்போல் ஒரு சிலர் மட்டுமே ஏழைகளாக இருக்க ஏனையவர்கள் அவனைவிட வசதி படைத்தவர்களாயிருந்தனர். கடவுள் தன்னைப்போல் ஒரு சிலரை மட்டும் வஞ்சிக்கிறார் என்று அவனுக்கு அடிக்கடி தோன்றியது.

தினமும் அவன் தன்னிடம் கூட மனம் விட்டுப்பேசாமல் எதையோ எண்ணிக் குமுறுவதை கண்ட அவன் மனைவி அவனிடம் நம் கிராமத்திற்கு யாரோ சித்தர் வந்திருக்கிறாராம். அவரிடம் சென்று வாயேன் என்றான். தன்னை வாட்டிய விடயத்தைச்சொல்லி விளக்கம்கேட்க விரும்பி அவரிடம் சென்றான். கடவுளின் வஞ்சகத்தைப்பற்றிக்கூறி அதற்கு விளக்கம் கேட்டான்.



அதற்கு அவர் உன்னுடைய வாதம் நியாயம்தான்! நான் கடவுளிடம் பிரார்த்தனை செய்து உனக்குப் பொருட்செல்வம் வாங்கித்தருகிறேன். ஆனால் ஒன்றைப்பெறுவதென்றால் ஒன்றை இழக்கவேண்டி வரும் சம்மதமா? என்றார். செல்வம் பெற எதைவேண்டுமானாலும் இழக்கலாம் என்று நினைத்த அவன் அதற்குச் சம்மதித்தான்.

சரி உன் கால்களை இழக்கச் சம்மதித்தால் தங்கம் பெறுவாய். கைகளைத் தியாகம் செய்தால் வைரம் கிடைக்கும். கண்களைப் பறி கொடுத்தால் எல்லாச் செல்வமும் பெறுவாய் என்றார்.

சுவாமி என் கண்கள் திறந்தன. எனக்கு தங்கம் வைரம் தேவையில்லை. கடவுள் தந்த பெரும் செல்வமான கை, கால், கண்களை ஒரு போதும் இழக்கமாட்டேன் என்று சொல்லி விட்டு வீடு திரும்பினான். அன்று முதல் மற்றவர்களைப் பார்த்துப் பொறாமைப்படுவதை நிறுத்தி விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...


# சுற்றுச்சூழல் பரிகரிப்பில் நனோ தொழில்நுட்பத்தின் பங்களிப்பு

விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் தோன்றி பல தொழில்நுட்ப சக்கரங்கள் காலத்திற்கு காலம் மனித வாழ்வை மேமப்படுத்தக் காரணமாக அமைந்து வருகின்றன. விஞ்ஞான தொழில்நுட்பத்தின் பாரிய வளர்ச்சி காரணமாக இன்று உலகை உள்ளங்கைக்குள் உள்ளடக்கும் முயற்சியில் மனிதன் வெற்றி கண்டும் வருகின்றான். இன்று பலராலும் பேசப்பட்டு வரும் நனோ தொழில்நுட்பமானது விஞ்ஞானம் கண்ட பரிணாம வளர்ச்சியின் புதிய திருப்பு முனையாகும். இத் தொழில்நுட்பம் உலகிற்கு கிடைத்துள்ள ஐந்தாவது தொழில்நுட்பப் புரட்சியாகும்.


1959 ஆம் ஆண்டில் நோபல் பரிசை வென்ற பௌதீகவியலாளரான றிச்சட் ஃபெமன் (Richard Feynman) என்பவரே நனோ தொழில்நுட்பத்துக்கான எண்ணக்கூற்றை விஞ்ஞான ரீதியாக முன்வைத்தவராவார். நனோ தொழில்நுட்பம் என்ற சொல்லை முதன்முதலில் டோக்கியோ அறிவியல் பல்கலைக்கழகப் பேராசிரியர் நொரியோ தனிக்குச்சி (Norio Taniguchi) என்பவர் 1974 இல் அறிமுகப்படுத்தினார். 1980 களில் டாக்டர் எரிக் டிரெக்ஸ்லர் (Eric Drexler) என்பவரால் இது மேலும் பகுத்தாராயப்பட்டது.

நனோ தொழில்நுட்பமானது பல்துறை சார்ந்து காணப்படுவதால் இத் தொழில்நுட்பத்தை ஒவ்வொரு துறையினரும் வெவ்வேறு விதமாக வரைவிலக்கணப்படுத்துகின்றார்கள். பொதுவாக நனோ தொழில்நுட்பவியலானது அணு மட்டத்தின் பகுதியிலிருந்து ஆரம்பித்து உயர்தரத்திலான முடிவுப் பொருள் வரை கட்டியெழுப்புதல் என்பதாகும். இது கீழிலிருந்து மேல் நோக்கி செல்லல் (Bottom-up) என்ற கோட்பாட்டிற்கு அமைவானது. அத்துடன் நனோ தொழில்நுட்பம் 1-100 நனோ மீற்றர் (nm) அளவிலான பொருட்களின் இயல்புகளை அறிந்து கட்டுப்படுத்தி அதன் தனிச்சிறப்பால் நிகழும் புது விளைவுகளின் அடிப்படையில் புது பயன்பாடுகளுக்கு வழி வகுக்கின்றது. ஒரு நனோ மீற்றர் என்பது ஒரு மில்லி மீற்றரின் (mm) $10^6$ இல் ஒரு பங்கு ஆகும்.

நனோ தொழில்நுட்பத்தில் பிரதானமாக பயன்படுத்தப்படும் மூலகம் காபன் ஆகும். காபனின் மூன்றாவது பிற திருப்பமாகிய புல்லரீன் (Fullerene) மூலம் உற்பத்தி செய்யப்பட்ட காபன் பக்கி பந்து (bucky ball), காபன் நனோ குழாய்கள் (nano tubes) என்பன முக்கிய பங்காற்றுகின்றன. கருவிகளை சிறிதாக்கிக் கொண்டே போவதன் விளைவாக அணுப்புற விசை நுண்ணோக்கி (Atomic force microscope) மற்றும் வாருதல் வகை புரை ஊடுருவு மின்னோட்ட நுண்ணோக்கி (scanning tunneling microscope) போன்ற மிகுதுல்லிய நுண்கருவிகள் உருவாக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.




Bucky ball


Carbon nano tubes

இன்றைய உலகில் நனோ தொழில்நுட்பத்தின் பயன்பாடு வரையறை அற்றது. இலத்திரனியல், இரசாயனவியல், உயிரியல், பௌதீகவியல், மருத்துவம், விவசாயம் என்று பல துறைகளில் இவற்றின் பங்களிப்பு இருக்கின்றன.

இன்று முழு உலகமும் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினைகளான பூகோளம் வெப்பமடைதலும் சூழல் மாசடைதலும் 19 ஆம் நூற்றாண்டின் கைத்தொழில் புரட்சி தந்த பக்க விளைவுகள் என்பது தெளிவு. இப்பக்க விளைவுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் முழுமையான தீர்வு இன்னும் எட்டப்படவில்லை. கடந்த சில வருடங்களாக சூழல் பரிகரிப்பில் நனோ பொருட்களின் பங்களிப்பு அதிகரித்துக் கொண்டு வருகின்றன. குளோரினேற்றப்பட்ட கரைப்பான்களாலும் எண்ணெய் கசிவுகளாலும் மாசுபடுத்தப்பட்ட நிலம் மற்றும் நீர் நிலைகளை சுத்திகரிக்க பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றது. நனோ திரவியங்கள், நனோ குழாய்களாலான வடிகட்டி அமைப்புக்கள் மற்றும் காந்த நனோ துணிக்கைகள் நிலம், நீர் மற்றும் வளியிலுள்ள மாசுக்களை அகற்றுவதற்கும் செயலிழக்கச் செய்வதற்கும் பயன்படுத்தப்படுகின்றன. நனோப் பொருட்களின் மேற்பரப்பிற்கு கனவளவு விகிதமானது அதிகமாக இருப்பது அதன் உயிரியல், இரசாயன தாக்கங்கள் வின்னத்திறன் மிக்கதாக இருப்பதற்கு காரணமாக உள்ளது.

தைத்தேனியம் ஈரொட்சைட்டு ($TiO_2$) ஓர் அசேதன நனோ திரவியமாகும். இது ஒரு ஒளி ஊக்கியும் ஆகும். $TiO_2$ ஊக்கி வலய இடைவெளிச் சக்தியை விட கூடுதலாக சக்தி கொண்ட கழியூதாக் கதிர்களால் கதிரடிக்கப்பட்டால் கடத்தல் மற்றும் வலுவளவு வலயங்களில் முறையே இலத்திரன்களும் துளைகளும் தோன்றும். இலத்திரன்கள் உயர் தாக்கத்திறனுடைய தாழ்த்தல் அழுத்தத்தைக் கொண்டுள்ளதோடு துளைகள் உயர் தாக்கத்திறன் கொண்ட ஒட்சியேற்ற அழுத்தத்தைக் கொண்டது. இந்த இரண்டும் சேர்வதால் சேதனத் திரவியத்தைப் பிரிக்கத்தக்க ஊக்கல் தாக்கங்கள் தூண்டப்படும். எனவே, $TiO_2$ நனோ துணிக்கைகள் (40nm) ஒளி ஊக்கி ஒட்சியேற்றத்தினால் சேதன மாசாக்கிகளை $CO_2$ மற்றும் $H_2O$ ஆக மாற்றமடையச் செய்யும்.


Nano filtration

நுண் அலகு வடிகட்டல் முறையில் (nano filtration) வடிகட்டி அமைப்புக்கள் 10nm ஐ விட மிகச்சிறிய நனோ குழாய்களாலான நுண்துளை சவ்வுகளை (nano porous membrane) கொண்டிருப்பதால் சுத்திகரிப்பில் அயன்களை அகற்றுவதற்கும் வேறுபட்ட திரவங்களை பிரித்தெடுப்பதற்கும் பொருத்தமான நுட்பமாக உள்ளது.

மேலும் கழிவு நீரிலுள்ள பார உலோகங்களை அகற்ற காந்த நனோ துணிக்கைகள் பயன்படுத்தப்படுகின்றன. இத்துணிக்கைகள் இரும்பு (Fe), நிக்கல் (Ni), கோபோற்று (Co) போன்ற மூலகங்களாலும் அவற்றின் சேர்வைகளாலும் ஆனவை. (உ+ம்: Fe, $Fe_2O_3$, $Fe_3O_4$, NiO, $CoO_2$) இவ்வாறு நனோ துணிக்கைகளைப் பயன்படுத்தி மாசாக்கிகளை அகற்றும் முறையானது பாரம்பரிய முறைகளான வீழ்படிவாக்கல் (Precipitation) மற்றும் வடிகட்டல் முறைகளை (Filtration) விட வினைத்திறன் மிக்கதாகவும் ஒப்பீட்டளவில் செலவு குறைந்ததாகவும் உள்ளன.




Photo catalytic reaction of $TiO_2$

நனோ தொழில்நுட்பம் சிறந்த ஒன்றாக இருக்கின்ற போதிலும் தீமைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. நனோ தொழில்நுட்பத்தின் வளர்ச்சி உலகினை புதிய பாதையில் இட்டுச் செல்லும் என்பதில் ஐயமில்லை. ஆயினும் இதனை ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்துவது அனைவரது கடமையாகும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் நனோ தொழில்நுட்ப ஆய்வுகளுக்கென விஞ்ஞான பேராசிரியர்களின் வழிகாட்டலுடன் இலங்கை தேசிய நனோ தொழில்நுட்ப முனைப்பு (SLNNI) நிறுவப்பட்டுள்ளது.

இது ஆக்கபூர்வமான நனோ தொழில்நுட்ப ஆய்வுகளுக்கும் கண்டுபிடிப்புகளுக்கும் களமமைத்து கொடுத்துள்ளது. அத்துடன் யாழ். பல்கலைக்கழகத்திலும் இவ் ஆய்வுகள் நடைபெறுகின்றன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

**செல்வி சி.கோபிகா**
**உதவி விரிவுரையாளர்,**
**இரசாயனவியற்றுறை;**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

## வாரத்திற்கு ஒரு புதிர்! 76

**இரண்டு வேறு வேறு நேர் எண்களின் கூட்டுத்தொகையாக இரண்டு வேறுவேறு முறைகளில் எழுதக்கூடிய மிகச்சிறிய பெறுமானம்?**

விடைகளை 28.01.2013 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

**து.பிரதீபன்**
ஆசிரியர், பிரிவு -A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி,
மானிப்பாய்.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட இரசாயனவியல் துறையில் கலாநிதி மீனா செந்தில்நந்தனனிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

## புதிர் 75 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

பல பொருத்தமான விடைகள் அமைகின்றபோதிலும் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்ட அதிர்ஷ்டசாலி.

கைலாயப்பிள்ளை சுந்தரலிங்கம்
திருமந்திரம் 127, வாசிகசாலை லேன்,
கல்வியங்காடு.

**புதிர் 75 இற்கான கேள்வியும் விடையும்:**

$P+Q+R= S+T+U$ ஆகவும் $P^2+Q^2+R^2= S^2+T^2+U^2$ ஆகவும் வருமாறு சாத்தியமான இரு தொடர்புகள் தரப்பட்டுள்ளன. இவற்றை பயன்படுத்தி P, Q, R, S, T, U என்பவற்றின் பொருத்தமான பெறுமானங்கள் எவை?

P=4, Q=8, R=9, S=10, T=6, U=5

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 76

சரியான விடை:-..........
முழுப்பெயர்:-..........
முகவரி:-..........
தொ.பே. இல:..........
கையொப்பம்:..........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சிலைப்பள்ளி கடற்றொழிலாளர்கள் அத்துமீறி இறால் பிடிக்கின்றனர்

## ஆனையிறவு கடற்றொழிலாளர்கள் கவலை

(ஆனையிறவு)

ஆனையிறவு கடல் நீரேரியில் இறால் பிடிப்பதற்கான இடைக்கால தடையையும் மீறி அங்கு பச்சிலைப்பள்ளி கடற்றொழிலாளர்களால் இறால் பிடிக்கப்பட்டு வருவதாக ஆனையிறவு பிரதேச கடற்றொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறித்த கடல் நீரேரியில் தொடர்ச்சியாக இறால் பிடிக்கப்பட்டு வந்தமையால் கடல் நீரேரியில் இறால் விருத்தி குறைவடைந்தது.

இந்நிலையில் அப்பகுதியீல் குஞ்சு இறால்கள் பிடிக்கப்பட்டு வந்தன.

இதன் காரணமாக குறித்த நீரேரியில் இறால் விருத்தி பாதிப்படையும் நிலைமையை கருத்திற்கொண்டு கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசத்தின் கீழ் உள்ள சங்கங்களுக்கும் சமாசத்தின் இயக்குநர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் நிகழ்த்தப்பட்டு அக் கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட முடிவின்படி இறால்கள் குறித்த பருமன் அடையும் வரையில் மறு அறிவித்தல் வரை நீரேரியில் இறால் பிடிப்பதற்கு இடைக்கால தடை ஏற்படுத்தப்பட்டது.

இதன் மூலம் கடந்த 9ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் குறித்த இடைக்காலத்தடை நடைமுறைப்படுத்தப்பட்டதோடு கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசத்தின் கீழுள்ள தொழிலாளர்கள் ஆனையிறவு கடல் நீரேரியில் இறால் பிடிப்பதை நிறுத்தி வைத்துள்ளனர்.

இந்நிலையிலேயே பச்சிலைப்பள்ளி பிரதேசக் கடற்றொழிலாளர் சங்கத்திற்குட்பட்ட கடற்றொழிலாளர்கள் தொடர்ந்து ஆனையிறவு கடல் நீரேரி மேற்குப் பகுதியில் இறால் பிடித்து வருகின்றனர்.

இதுகுறித்து பச்சிலைப்பள்ளி கடற்றொழிலாளர் சங்கங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் இப்பகுதியில் குறித்த இறால் பிடிக்கும் நடவடிக்கையை கைவிடுமாறும் கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளன. (அ-5-264)

# காலி சிறைக்குள் ஹெரோயின் மீட்பு

(காலி)

காலி சிறையிலுள்ள கைதி ஒருவரிடமிருந்து ஒரு தொகை ஹெரோயின் போதை பொருள் மீட்கப்பட்டுள்ளது.

சிறை அதிகாரிகளிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின்படி காலி பொலிஸார் மேற்கொண்ட சோதனையில் இந்த ஹெரோயின் தொகை மீட்கப்பட்டுள்ளது.

கைதியிடம் இருந்து 4 கிராம் 470 மில்லி கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டது. இது குறித்த தகவல்கள் காலி நீதவான் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

காலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# வவுனியாவில் விபத்து; சாரதி காயமடைந்தார்

(குருமன்காடு)



வவுனியா வைத்தியசாலைக்கு முன்பாக நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தொன்றில் முச்சக்கர வண்டி சாரதி காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக தெரிய வருவது,

வவுனியா வைத்தியசாலைக்கு முன் அமைந்துள்ள மஞ்சள் கடவையினூடாக மக்கள் வீதியை கடந்து செல்லும்போது முன்னால் சென்ற மிதிவெடியகற்றும் நிறுவனத்தின் வாகனம் அவ்விடத்தில் நிறுத்தியதை தொடர்ந்து பின்னால் வந்த முச்சக்கர வண்டி அவ் வாகனத்துடன் பலமாக மோதியதனாலேயே முச்சக்கர வண்டியின் சாரதி காயமடைந்ததாக போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து காயமடைந்த சாரதி வைத்தியசாலையின் விபத்துக்கள் பிரிவில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ள துடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-9-250)

# குளிரான காலநிலை பெப்ரவரி வரை நீடிக்கும்

கொழும்பு உட்பட நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் நிலவும் குளிரான காலநிலை எதிர்வரும் பெப்ரவரி முதல் வாரம் வரை நீடிக்கும் என வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இலங்கையைக் கடக்கும் உலர் குளிர்காற்றின் தாக்கமும் இதற்கொரு காரணமாக அமைவதுடன் இரவு நேரங்களில் வானத்தில் மேகங்கள் இல்லாமையும் இக்குளிர் நிலைக்குக் காரணமாகுமென நிலையத்தின் உயரதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இலங்கையைப் பொறுத்தவரை மார்கழி, தை, மாசி மாதங்களில் வழமையான குளிர்நிலை நிலவுவதாகவும் கடந்த வருடங்களோடு ஒப்பிடுகையில் இம்முறை குளிரின் அளவு குறைந்தே காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது மழை வீழ்ச்சிக்கான அறிகுறிகள் குறைவாகவே காணப்படுவதாகவும் இந்த நிலை மாற்றமடைந்து மழை பெய்யுமானால் குளிரான நிலை வெகுவாகக் குறைவடையும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# நிதி மோசடியில் ஈடுபட்ட ஊழியர்கள் 12 பேர் கைது

(கொழும்பு)

நிதி மோசடியிலல் ஈடுபட்ட அரச சார்பற்ற நிறுவன ஊழியர்கள் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போலி கடன் அட்டைகளைப் பயன்படுத்தி இந்த நிதி மோசடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு மோசடி செய்யப்பட்ட பணத்தில் ஒரு தொகுதி புலம்பெயர் ஆதரவு தமிழர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வெளிநாடு மற்றும் உள்நாட்டைச் சேர்ந்த செல்வந்தர்களின் கோடிக்கண்க்கான பணம் இவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ளது. கடன் அட்டைகளில் மோசடியான முறையில் பணத்தைப் பெற்றுக் கொண்டு அவற்றை தங்களது கணக்கில் வைப்புச் செய்து கொண்டுள்ளனர்.

அரச வங்கியொன்றின் முறைப்பாட்டுக்கு அமைய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அரச சார்பற்ற நிறுவனமொன்றின் கணக்குகளில் பாரியளவு பணம் வைப்பிலிடப்பட்டுள்ளது.

சிறியளவு பணம் சமூக சேவைக்காக பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் பெருமளவு பணம் தங்களது சொந்த பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

களுத்துறை, மாத்தளை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 12 பேரே இவ்வாறு குற்ற விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மோசடியுடன் தொடர்புடைய மேலும் சிலரை விரைவில் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் அறிவித்துள்ளனர். (அ-2)

# ஜனாதிபதி கோரினால் மீண்டும் பதவியேற்பேன்

களனி தொகுதி அமைப்பாளர் பதவியை ஏற்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோரினால் மீளவும் பதவியை ஏற்றுக் கொள்ளத் தயார் என அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஓர் ஒழுக்கமிக்க கட்சியாகும். இக்கட்சிக்குள் களனியைச் சேர்ந்த 25ஆயிரம் மக்கள் எனக்கு வாக்களித்துள்ளனர். கம்பஹா மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 52 ஆயிரம் பேர் எனக்கு வாக்களித்துள்ளனர்.

களனி மக்களுக்கு நான் ஆற்றிய சேவைகளை பிரதேச மக்கள் அறிவார்கள். களனி மக்களை ஒருபோதும் மறக்க மாட்டேன். கொலைச் சம்பவங்களை நான் எதிர்க்கின்றேன்.

ஹசித மடவல சிறந்த மனிதர். தனிப்பட்ட பிணக்கு காரணமாக கொலை செய்யப்பட்டுள்ளார் என மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார். (அ-2)

# அமைச்சர் மேர்வினை கைது செய்யுமாறு ஆர்ப்பாட்டம்

மக்கள் தொடர்பாடல் அமைச்சர் மேர்வின் சில்வாவை கைது செய்யுமாறு மஹர நீதிமன்றத்திற்கு முன்பாக மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். களனி பிரதேச சபையின் உறுப்பினர் ஹசித மடவல படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொர்டர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் மஹர நீதின்றத்தில் நேற்றுக் காலை ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போதே மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அமைச்சர் மேர்வின் சில்வாவை கைது செய், பிரதான சந்தேக நபர் சுதந்திரமாக இருக்கின்றார் போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியிருந்தனர். இந்த படுகொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களில் அமைச்சரின் இணைப்புச் செயலாளர்கள் இருவர் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (அ-2)







யாழ்ப்பாணம் அலியன்ஸ் காப்புறுதி நிறுவனத்தின் திருநெல்வேலி பிராந்திய காரியாலயத் திறப்பு விழா நேற்று இலக்கம் 28, பலாலி வீதியில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இந் நிறுவனத்தின் விற்பனை சந்தைப்படுத்தல் பொது முகாமையாளர் சண்டன ஹெற்றிய ஆராச்சி நாடா வெட்டித் திறந்து வைப்பதையும் ஏனைய விருந்தினர்கள் அருகில் நிற்பதையும் அலியன்ஸ் காப்புறுதி நிறுவனத்தின் விற்பனை விநியோக முகாமையாளர் கிருபாகரன் உரையாற்றுவதையும் பிரதம விருந்தினரிடம் வாடிக்கையாளர்கள் பணத்தினை கொடுத்து வைப்பு செய்வதையும் படங்களில் காணலாம். (படங்கள் எஸ்.ஆர்.கரன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஐ.பி.எல்.வீரர்கள் பெப்.3 இல் ஏலம்

DLF IPL

6ஆவது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி ஏப்ரல் 3ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்தப் போட்டியில் 9 அணிகள் பங்கேற்கின்றன.

கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெறும் தொடக்க ஆட்டத்தில் டில்லி டேர்டெவில்ஸ் - கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதுகின்றன.

6ஆவது ஐ.பி.எல். போட்டிக்கான வீரர்கள் ஏலம் அடுத்த மாதம் (பெப்ரவரி) 3ஆம் திகதி சென்னையில் நடைபெறும் என ஐ.பி.எல். தலைமை நிர்வாக அதிகாரி சுந்தர்ராமன் டுவிட்டர் இணையதளத்தில் தெரிவித்துள்ளார்.

மொத்தம் 37 வீரர்கள் ஏலப்பட்டியலில் இடம் பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பாகிஸ்தான் வீரர்களை மீண்டும் சேர்ப்பது என்று ஐ.பி.எல். ஆட்சி மன்ற குழுவில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டது.

தற்போது நடைபெற இருக்கும் ஏலத்தில் பாகிஸ்தான் வீரர்கள் இடம்பெறுவது பற்றி மற்றொரு கூட்டத்தில் முடிவு செய்யப்படும். தற்போது எல்லையில் நிலவும் பதற்றமான சூழ்நிலை காரணமாக பாகிஸ்தான் வீரர்கள் இந்த ஏலத்தில் இடம் பெறமாட்டார்கள்.

2008 ஆம் ஆண்டு நடந்த முதல் ஐ.பி.எல். போட்டியில் பாகிஸ்தான் வீரர்கள் விளையாடினார்கள். மும்பையில் நடந்த தாக்குதல் சம்பவத்தை தொடர்ந்து பாகிஸ்தான் வீரர்கள் ஐ.பி.எல்.லில் விளையாட அனுமதிக்கப்படவில்லை. சமீபத்தில் பாகிஸ்தான் அணி இந்தியா வந்து விளையாடினாலும் தற்போதுள்ள சூழ்நிலை காரணமாக அந்த அணி வீரர்கள் ஐ.பி.எல்.லில் மீண்டும் விளையாட வாய்ப்பு இல்லை என கிரிக்கெட் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## பாலியல் தொந்தரவு கொடுத்த பயிற்சியாளர் கைது



பெண் ஹொக்கி வீராங்கனைகளிடம் பாலியல் சேட்டை செய்ததாக ஹொக்கி பயிற்சியாளர் ஐதராபாத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். ஜம்மு காஷ்மீர் மாநில 20 வயதுக்குட்பட்ட மகளிர் ஹொக்கி அணிக்கு பயிற்சியாளராகப் பணியாற்றி வந்தவர் அங்காட் சிங். இவர் ஜம்மு காஷ்மீர் ஹொக்கி அணி ஐதராபாத்தில் நடைபெறும் ஹொக்கி தொடரில் பங்கு பெற வந்தபோது, பெண் ஹொக்கி வீராங்கனைகளிடம் பாலியல் சில்மிஷம் செய்ததாக 5 வீராங்கனைகள் புகார் கொடுத்துள்ளனர்.

இந்த புகாரின் பேரில் அங்காட் சிங் ஐதராபாத் பொலிஸாரினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

## மகளிர் உலகக்கிண்ணம்; இடம் தெரிவு செய்வதில் தொடர்ந்து இழுபறி

ICC WOMEN'S WORLD CUP India 2013

2013 மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 31 ஆம் திகதி முதல் பெப்ரவரி 17 ஆம் திகதி வரை மும்பையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இதில் இந்தியா, பாகிஸ்தான் உட்பட 8 அணிகள் பங்கேற்கவுள்ளன.

இந் நிலையில் கடந்த 8 ஆம் திகதி எல்லையில் இந்திய இராணுவ வீரர்கள் இருவரை பாகிஸ்தான் இராணுவம் கொன்றதையடுத்து ஹொக்கி இந்தியா லீக் போட்டியில் விளையாட வந்த பாகிஸ்தான் வீரர்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சிவசேனை கட்சி மற்றும் பல்வேறு அமைப்புகள் போராட்டத்தில் குதித்தன. இதைத் தொடர்ந்து பாகிஸ்தான் வீரர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இந்த நிலையில் அகமதாபாதில் உலகக் கோப்பை போட்டியை நடத்த முடியுமா என குஜராத் கிரிக்கெட் சங்கத்திடம் பிசிசிஐ கேட்டுள்ளது. ஆனால் அதற்கு குஜராத் கிரிக்கெட் சங்கம் மறுத்துவிட்டது.

இது தொடர்பாக அந்த சங்கத்தின் செயலர் ராஜேஷ் படேல் கூறுகையில், போட்டியை அகமதாபாதில் நடத்துமாறு பிசிசிஐ எங்களை அணுகியது. எல்லையில் பதற்றம் நிலவி வருவதைக் கருத்தில் கொண்டு போட்டியை நடத்த மறுத்துவிட்டோம். போட்டியை மும்பையில் நடத்துவதா அல்லது வேறு இடத்துக்கு மாற்றுவதா என்பது குறித்து ஐசிசியும், பிசிசிஐயும்தான் முடிவு செய்யவேண்டும்" என்றார்

## விளையாட்டுத் துளிகள்

- ✔ லஹிரு திரிமன்ன ஏராளமான சவால்களைச் சந்தித்துள்ளதாகத் தெரிவித்த அன்ஜலோ மத்தியூஸ், அவர் அணியில் குறித்த துடுப்பாட்ட வரிசையிலன்றி மேலும், கீழுமாக ஆடி வந்ததாகவும் எனினும் தனக்கு வழங்கப்பட்ட வாய்ப்பில் அவுஸ்திரேலியாவுடனான டெஸ்ட். ஒருநாள் போட்டியில் தனது திறமையை வெளிப்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்த மத்தியூஸ் இலங்கையின் எதிர்காலத்திற்குரிய வீரர் எனவும் புகழாரம் சூட்டியுள்ளார்.
- ✔ பிரபல ரிவி நேர்காணல் நிகழ்ச்சியில், போதை மருந்து உட்கொண்டதை ஒப்புக் கொண்ட சைக்கிள் பந்தய முன்னாள் உலக சம்பியன் லேன்ஸ் ஆர்ம்ஸ்ட்ராங் மீது அமெரிக்க சட்டப்படி தக்க நடவடிக்கை எடுக்கப்போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.
- ✔ இங்கிலாந்து அணியுடன் நடந்து வரும் தொடரில்,நீக்கப்பட்டிருந் தாலும், ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் அதிரடி தொடக்க வீரர் வீரேந்திர சேவாக் மீண்டும் வெற்றிகரமாக வலம் வருவார் என்று முன்னாள் இந்திய அணித் தலைவர் சவுரவ் கங்குலி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.
- ✔ 'நெதர்லாந்தில் நடைபெறும் டாடா ஸ்டீல் சுப்பர் செஸ் போட்டித் தொடரின் 4ஆவது சுற்றில் லெவோன் அரோனியனுடன் மோதிய விஸ்வநாதன் ஆனந்த் அபாரமாக வென்றார். இதையடுத்து முதல் இடத்தை மேக்னஸ் கார்ல்சன் (நோர்வே), செர்ஜி கர்ஜாகின் (ரஷ்யா), ஆனந்த் (இந்தியா) ஆகியோர் பகிர்ந்து கொண்டுள்ளனர். ஆனந்த் அடுத்து 5ஆவது சுற்றில் கார்ல்சனுடன் மோதவுள்ளார்.



# சரவணை மேற்கு, நாவலடி ஞான வைரவர் கோயில்

# நூதன பிரதிஸ்டா மஹா கும்பாபிசேக சிறப்புமலர் 18.01.2013



### பிரதம குருவின் ஆசி

இலங்கையின் வடபால் சைவமும் தமிழும் கலையும், கலாசாரமும் பின்னிப் பிணைந்து செழித்தோங்கிக் காணப் படும் சரவணைப் பதியிலே அருள் சுரக்கும் ஆலயங்கள் பல உண்டு. அத்தகைய இப்பதியிலே கிராமத்து காவல் தெய்வமாக எல்லோருக்கும் காவலனாக புதிதாக பிரதிஷ்டை செய்யப்பட்ட ஞானவைரவ சுவாமிப் பெருமான் அருள் பாலிக்க உள்ளார்.

வைரவப்பெருமான் வழிபாடு பெரும்பாலும் மரங்களை அண்மித்ததாக காணப்படுகின்றது. ஆலடி வேம்படி, நாவலடி, புளி யடி,அரசடி என்று மரத்தின் கீழ் அமைத்து வழிபடுவது சிறப்பாகக் காணப்படுகின்றது. இவ்வகையில் இங்கும் நாவலடி வைரவ சுவாமி ஆலயமாக புதிதாக அமைக்கப்பட்டு நூதன பிரதிஷ்டை மஹா கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது.

இக் கும்பாபிஷேகத்தில் பங்கு பற்றி இதனை கண்டு களித்த அனைவரும் இத் தெய்வீக திருப்பணியில் பல வழிகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட அனைவருக்கும் நாவலடி ஞானவைரவ சுவாமி பெருமான் திருவருளால் சகல நலன்களும் பெற்று வாழ வேண்டும் என்று காவல் நாயகனின் திருவடித் தாமரைகளைப் பணிந்து நிறைவு செய்கின்றேன்.

'மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்'

சிவஸ்ரீ.கா.புவனேஸ்வரக் குருக்கள்.

*(நாரந்தனை சரவணை கர்ணந் தோட்டம் சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் பிரதம குரு)*



### அற்புதம் நிகழ்ந்து அதிசயமாக விரைந்தெழுந்த ஆலயம்

அடியேனது அருள்வாக்கின்படி நாவலடி வைரவர் தமது துன்பத்தைத் தீர்த்தருளினால் ஆலயம் கட்டுவோம் என திடசங்கற்பம் பூண்டார்கள் இந்த ஆலய உரித்துடைய யாழ்.பிரப்பங்குளம் வீதியில் வசிக்கும் செ.சிவபாதசுந்தரம் குடும்பத்தினர். இதன்பின் ஒரு மாதத்தில் இவர்களது சஞ்சலத்தைத் தீர்த் தருளினார் சரவணை மேற்கு நாவல் மரத்தில் பல தசாப்தங்களாக உறைகின்ற ஞானவைரவப் பெருமான். இவர்கள் கேட்டுக் கொண்ட வரம் இவர்களது புத்திரனுக்கு லண்டன் வெம்பிலியில் அற்புதம் நிகழ்ந்தது.

இவர்களின் வேண்டுதலுக்கிணங்க ஆல யத்திற்கான அமைவிடம்-நிலையமெடுக்க 03-12-2012 அன்று அடியேன் சரவணை மேற்கு நாவலடிக்குச் சென்றேன். நாவல்மரம் முன்பாக அடியேன் நின்று ஆலய அமை விடத்திற்கான நிலையத்தை அடையாளப்படுத்தித் தரும்படி பெருமானை வேண்டுதல் செய்த போது வைரவர் காட்சிப்படுத்தி- வடக்குத் திசை நோக்கிய கோயிலாகவும் அளவுப் பிரமாணமும் அமைத்துத் தந்தது மட்டுமல் லாமல், நாவல்மர அடித்தள நிலத்தின் கீழ் நாக சர்ப்பங்கள் வாசம் செய்வதையும் காட்டி சில தகவல்களையும் வைரவப் பெருமான் கூறிக்கொண்டார்.ஆலயக் கட்டுமானப் பணிகள் இடம்பெறும் காலங்களிலும் இதன் பின் பூசைகள் நடைபெறும் காலங்களிலும் நாக சர்ப்பங்கள் அடியவர்களுக்கு காட்சி தந்து ஆசீர்வதித்து அருள் புரியும் என்ற அருள் வாக்கினை அவ்விடத்தில் நின்ற மக்களிடம் கூறினேன்.

கட்டுமானப் பணியில் உதவியாளராக இருந்த கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த [illegible] வெள்ளை நிற நாகபாம்பு தோன்றிக் காட்சி தந்ததைச் சொல்லி அதிசயப்பட்டார். இந்த ஆசீர்வாதத்தோடு குறுகிய நாட்களில் பலரும் வியக்கும் வண்ணம் கட்டுமானப் பணிகள் அனைத்தும் பூர்த்தியடைந்து, இன்று எம் பெருமானுக்கு குடமுழுக்குப் பெருவிழா நடைபெறுவதென்றால் பெருமானது எல்லையற்ற அருட்கடாட்சமே. வைரவப் பெருமானின் அற்புத அதிசயத்தினால் தனியொரு குடும்பத்தினரே தமது காணியையும் வைரவருக்கு வழங்கி கட்டட வேலைகள், பூசைகளுக்கான உபகரணங்கள், திரவியங்கள், கும்பாபிஷேகம்,அன்னதானம் முதலான சகலதையும் நிறைவேற்றுகிறார்கள் என்றால் வைரவப் பெருமான் நிகழ்த்திக் கொண்டிருக்கும் அற்புதமே. மேற்சொன்ன இதேபோன்றதொரு சந்தர்ப்பமாக கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பாக லண்டனில் சக்தி வேலன் ஆலயம் என்ற பெயரில் அடியேன் இங்கிருந்தபடியே தொலை பேசி மூலமாக நெறிப் படுத்தி முருகன் ஆலயத்தை ஆரம்பித்து, இன்று பல் லினத்தவரையும் கவர்ந்து வெற்றி நடை போடுகின்றது.

ஆத்மீக சாதனையாளர், அன்புடன் சக்தி மைந்தன்,

*சி.சிவகுமாரன் ஸ்ரீவாணி வெளியீட்டகம்*

### எங்கள் குலதெய்வம் நாவல் வைரவர்

எங்கள் பரம்பரை குலதெய்வம் வைரவ பெருமான் உலாவித்திரிந்ததை சில அடியவர்கள் நேரடியாக கண்டு கொண்டனர். இதே போல பல வகைகளிலும் வைரவர் நாவல் மரத்தில் உறைந்து இருப்பதை உணர்ந்ததனால் அந்த நாவல் மரத்துக்கு சூடம் ஏற்றியும் பொங்கியும் வழிபட்டு வந்தனர். இந்த கிராமிய முறையிலான வழிபாடு கடந்த 5 தலை முறையாக இடம்பெற்று வந்தது. இப்பொழுது 6 ஆவது தலை முறையான எங்களுக்கு வைரவப் பெருமான் அற்புதத்தை நிகழ்த்தி ஆலயத்தை கட்டி கும்பாபிஷேகம் செய்யும் பலனைத் தந்துள்ளார். இந்த அற்புதமான நாவல் மரத்து வைர வரை எல்லோரும் வணங்கி அருள் பெறுவோமாக.

திரு.சி.கருணனந்தன், திரு.சி.சிவானந்தன், திருமதி.பு.கௌரி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அழிவுக்கு முன் கர்வம் வரும். வீழ்ச்சிக்கு முன் திமிர் வரும்.

-இயேசு கிறிஸ்து

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# போர்க்களத்தில் வீஷ்மர் இறந்தது ஏன்?

மகாபாரதத்தில் இடம்பெற்றுள்ள பாத்திரங்களில் பல்வகை குண இயல்புகள் கொண்ட பாத்திரங்கள் நிறையவே உண்டு.

அதில், வீஷ்மர் என்ற பாத்திரம் மிகவும் மரியாதைக்குரியதாக – கடும் சந்நியாசத்திற்குரியதாக – தன் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றியதாக – ஆட்சி தனக்குரியதென்று தெரிந்தும் அது எனக்கு வேண்டாம் என்று பதவியை உதறித் தள்ளிய உத்தம குணமுடையதாக காண முடியும்.

பிதாமகர் என்று போற்றப்பட்ட வீஷ்மர் குரு ஷேத்திரப் போரில் பாதுகாக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது நம் நினைப்பு.

மகாபாரதக் கதையை கூறுவோரிடம் ஐயா! பிதாமகர் வீஷ்மர் குருஷேத்திரப் போரில் உயிர் துறந்தது ஏன்? அதுவும் தனது சிஷ்யனின் கையால் உயிர் துறந்தார் அல்லவா? அப்படியாக ஒரு அவல நிலை அந்தப் பெருமகனாருக்கு ஏற்பட்டது எதற்காக?

இப்படியெல்லாம் கேள்வி கேட்ட ஞாபகம் உண்டு. இந்தக் கேள்விகளுக்கு அப்போது விளக்கம் தெரியவில்லையாயினும் இப்போது அதற்கான விளக்கம் மிகத் தெளிவாகத் தெரிகிறது.

அதுவும் எங்கள் நாட்டில் பிரதம நீதியரசராக இருந்த ஷிராணி பண்டாரநாயக்கவின் நிலைமைக்குப் பின்பு, வீஷ்மர் போர்க்களத்தில் இறந்ததன் காரணத்தை தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகின்றது.

ஆம் திரௌபதியின் ஆடையை துச்சாதனன் பற்றியிழுக்கின்றான். சபை நடுவே மிகக் கொடுமையான சம்பவம் நடக்கிற போது வீஷ்மர் மௌனம் காத்தார்.

பிதாமகர் என்று பெருமைப்படுத்தப்பட்ட வீஷ்மர் ஒப்புரவாளராக இருந்திருந்தால் சபையில் எழுந்து துரியோதனா இக் கொடுஞ்செயலை நீ செய்வாயானால் எனது முடிவுகள் வேறுவிதமாக இருக்கும் என்று கூறியிருக்க வேண்டும். இவ்வாறு வீஷ்மர் கூறியிருந்தால்,

நிச்சயம் துரியோதனன் சிந்தை தெளிந்திருப்பான். ஆனால் அதனை வீஷ்மர் செய்ய வில்லை.

ஏன் அவ்வாறு வீஷ்மரால் சொல்ல முடிய வில்லை என்று ஒருகணம் சிந்தித்தால், நாடாளும் பதவி வேண்டாம் என்ற வீஷ்மரிடமும் துரியோதனின் சபையில் தனக்கிருந்த பதவி மீது ஒரு பற்று.

திரௌபதியை காப்பாற்றும் நோக்கில் நியாயத்தை எடுத்துரைத்தால் அது கௌரவர் சபையில் இருக்கக் கூடிய தனது பதவிக்கு பாதகமாகி விடும். எனவே நடப்பது அநீதி, அக்கிரமம், அநியாயம் என்று தெரிந்திருந்தும் வீஷ்மர் மௌனம் காத்தார்.

அதன் விளைவாக குருஷேத்திரப் போரில் முதற்பலியாகும் துரதிர்ஷ்டத்திற்கு வீஷ்மர் ஆளாக வேண்டியதாயிற்று.

இந்த நிலைமைதான் இப்போது இலங்கையில் நடக்கும் நாடாளுமன்ற – உயர் நீதிமன்ற முரண்பாடுகளாகும்.

ஐயா, இவன் தமிழன் இவனது பக்கத்தில் நியாயம் இருக்கிறது என்று தெரிந்தும் பதவியின்பால் கொண்ட பற்றுக் காரணமாக தமிழனுக்கு அநீதியை வழங்குவதே ஒரே வழியென்று முடிவு செய்யப்பட்டது. அதன் விளைவாக இன்று நிலைமை மாற்றம் கண்டுவிட்டது.

அன்று தமிழர் – சிங்களவர் என்று நோக்காது நீதிவழங்கப்பட்டிருந்தால், இன்று பதவியை பறித்து தள்ளிவிழுத்துகின்ற மோசங்கள் நடந் திருக்காது.

ஆக, வீஷ்மருக்கு நடந்ததுதான் இப்போதும் நடக்கிறது என்பதை இதிலிருந்து புரிதல் கடினம் அன்று.

# நடனப் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 26ஆம் திகதி

(பண்டத்தரிப்பு)

சங்கானை பிரதேச செயலக கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நடன பயிற்சிப்பட்டறை எதிர்வரும்26 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இப்பயிற்சிப்பட்டறையில் கலந்து கொள்ள விரும்புவோர் கலாசார அலுவல்கள் திணைக்கள அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பயிற்சிப் பட்டறையில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கலைநிறுவனங்களின் நடன ஆசிரியர்கள் பாடசாலைகள் மாணவர்கள், கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொள் வதற்காக பதிவு செய்து கொள்ள முடியும் என சங்கானை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். மேற்படி பயிற்சிப்பட்டறையில் கலந்து கொள்வோருக்கு இறுதியில் சான்றிதழ் வழங்கப்படவுள்ளதோடு இறுதி நிகழ்வாக அரச நடன குழுவினர் மற்றும் யாழ் மாவட்ட நடனக்குழுவினரின் நடன நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இதே வேளை பயிற்சிபட்டறையில் கலந்து கொள்வோரின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் விரைவில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் கேட்டுள்ளார். (5-30)

# மேலதிக மொழி கற்கை நெறிகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவனத்தின் இவ்வாண்டுக்கான மேலதிக மொழி அபிவிருத்தி கற்கைநெறி (சிங்களம்/ஆங்கிலம்) எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இற்கற்கை நெறியில் இணைந்து கொள்ள விருப்பமுடைய ஆசிரியர்கள் மற்றும் திணைக்களத்தலைவர்கள் ஊழியர் கள் ஆகியோர் தங்கள் விண்ணப்பத்தினை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இக் கற்கை நெறி தொடர்பான மேலதிக விபரங்களை 0777703776 அல்லது 0775340144 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என அதன் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (அ)

# கால்கோள் விழாவும் பொங்கல் விழாவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இருபாலை சீ.சீ.த.கலவன் பாடசாலைகளின் தரம்-1 மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழாவும் தைப்பொங்கல் விழாவும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 11 மணிக்கு அதிபர் திருமதி க.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்வைபவத்தில் யாழ் கல்வி வலய ஆரம்பகல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி. ஜே.றொறின்ரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். அத்துடன்மாணவர் களுக்கான போசாக்கு உணவுத்திட்டமும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது. (அ)

# இந்திய வீட்டுத்திட்டத்தின் இரண்டாவது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

இந்திய வீட்டுத்திட்டத்தின் செயற்திட்டம் -2 இரண்டாவது ஆண்டுவிழா எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ்ப்பாணம் இந்தியன் வங்கியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இந்திய துணைத் தூதுவராலயத்தின் தூதுவர் வி.மகாலிங்கம், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.அருமைநாயகம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார். (அ-9)

# மாணவர்களுக்கு உபகரணம் வழங்கல்

(குருமன்காடு)

வவு/கோமரசம் குளம் தமிழ் மகாவித்தியாலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12:30 மணிக்கு மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

சிவில் பாதுகாப்பு பிரிவும்பொலிஸாரும் இணைந்து ஐத்ரா நிறுவனத்தின் உதவியுடன் நடத்தும் இந் நிகழ்வில் விசேட விருந்தினர்களாக வவுனியா மன்னார் மாவட்டத்திற்கு பொறுப்பாக உள்ள உதவிப்பொலிஸ்மா அதிபர், வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஐத்ரா நிறுவனத்தின் உரிமையாளர், பிரதேச செயலாளர் தெற்கு வலயக்கல்விப்பணிப்பாளர். வவுனியா மாவட்ட மத்தியஸ்குழு தலைவர் பாடசாலை அதிபர் கிராம அலுவலர், கிராம அபிவிருத்தி அமைப்புக்கள், மதகுருமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-9, 250)

# மானிப்பாய் கால்நடை வைத்திய அலுவலகம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் மானிப்பாய் பட்டின உப அலுவலகத்திற்கு பின்னாலுள்ள கட்டிடத்தில் கால்நடை வைத்திய அலுவலகம் நாளை சனிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள உதவிப்பணிப்பாளர் டாக்டர் திருமதி வ.அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார்.

கட்டுடைமத்தி, மானிப்பாய், நவாலி, ஆனைக்கோட்டை, சுதுமலை, சாவற்காடு, காக்கைதீவு, ஆகிய பிரதேசங்களின் நன்மை கருதியே மேற்படி கால்நடை வைத்திய உப அலுவலகம் திறந்து வைக்கப்படவுள்ளது.

கட்டிடத்திறப்புவிழாவின் அன்றைய தினம் கோழிகளுக்கான தடுப்புமருந்தும் வழங்கப்படும். பிரதி செவ்வாய், வியாழக்கிழமைகளில் பண்ணையாளர்கள் இவ்வலுவலகத்தில் சேவைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும். (அ-9)




பிறர் செய்யும் பிழையைப் பொறுக்கும் உயர்ந்த உள்ளம் எல்லோரிடமும் இல்லை. மனச்சீர்மை கொண்டவரே பிறர் பிழையைப் பொறுத்து நட்புப்பாராட்டும் பண்புடையவராவர். அத்தகையவர்களை இனங்காண்பதும் கடினமே. பிழை செய்பவருடைய மனநிலையும் ஆழமாக அறிந்து கொண்டால் பொறுமை காக்கும் பண்பு தானாகவே வந்துவிடும். பிழை செய்பவர் தன் பிழையை எவ்வாறு நீக்கலாமென எண்ணியே வாழ்வர். தமிழில் பிழை, தவறு, குற்றம் என மூன்று சொற்கள் பயன்பாட்டில் உள்ளன. மனித வாழ்வியலில் இம்மூன்றும் பிழை விடுதல், தவறு செய்தல், குற்றம் புரிதல் எனச் செயற்பாட்டில் வழங்கப் படுகின்றன. பிழை என்பது ஒரு நேர்மையான செயற்பாட்டிலிருந்து வழுவுதலாகும். தவறு என்பது தற்செயலாகச் செயற்பாட்டில் ஏற்படும் மாற்றமாகும். குற்றம் என்பது செயற்பாட்டிற்கு முற்றிலும் முரணாக நடப்பதாகும்.

மணிவாசகர் தான் பிழை செய்து விட்டதாகவே பாடலில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அவர் செய்த பிழையை எவ்வாறு தீர்ப்பது என்பது சிக்கலாக இருந்துள்ளது. நேர்மையான செயற்பாட்டிலிருந்து அவர் வழுவியதால் பயப்படுகிறார். வேர்க்கின்ற என்னை விடுதி கண்டாய் என்ற அவருடைய பாடலடி இதனைத் தெளிவாக உணர்த்தி நிற்கின்றது. ஒன்றைக் கண்டு நாம் பயப்படும் போது உடனடியாக உடல் வியர்க்கும். அத்தகைய பயத்தைத் தீர்க்க வல்லவன் இறைவனே. எனவே பிழை செய்தவரைப் பார்க்கின்றவர்கள் உடனடியாக பயங்கொள்ள அவர்களை வெருட்ட வேண்டும். அவர்கள் பிழை பற்றி அறிய விரும்பாமல் ஓடிவிடுவார்கள். இறைவன் ஆரவாரம் செய்கின்ற நீண்ட மாலைகளை அணிந்த விடையில் ஏறி வரும் போது எல்லோரும் வெருண்டு நிற்பர். சம்பந்தர் பாடிய முதல் தேவாரப் பாடலிலே விடை பற்றிக் குறிப்பிட்டுள்ளார். மணிவாசகரும் விடையேறிய தோற்றத்தையே காட்டுகின்றார்.

இறைவனுடைய சிவன்டியார் வடிவத்திலே திருவடி தீட்சை பெற்ற மணிவாசகருக்கு அதை மறந்திருந்தமை பெரிய பிழையாகத் தெரிகிறது. அதனால் இறைவன் தன்னை மீண்டும் ஆட்கொள்ள மாட்டான் எனப் பயப்படுகிறார். உலகவாழ்க்கையால்ஈர்க்கப்பட்டநிலையை விளக்க ஐம்புலன்களால்தான் அடக்கப் பட்டிருக்கும் நிலையை நினைக்கிறார்.

அச்சமும் ஐம்புலன்களின் தறிகெட்ட நிலையும் மணிவாசகரை மீண்டும் பிழையான வாழ்வியலுள் தள்ளிவிடக்கூடும். எனவே இறை சிந்தனையால் தன்னை பாதுகாக்க எண்ணி இறைவனையே விளித்துத் தன் குறையிரந்து பாடுகிறார். அவருடைய விண்ணப்பம் தனிப்பட்ட மனித நிலையாக அன்று காணப்பட்டாலும் இன்று உலகம் முழுவதும் அறிய வேண்டியதொரு சீர்மியமாக உள்ளது.

மணிவாசகரைப் பற்றிய தேடுதல் இன்று எம்மிடையே அருகிவிட்டது. மனத்தை ஒருநிலைப்படுத்த முடியாமல் மயங்கி நிற்கும் இன்றைய இளைய தலைமுறை இதனை அறிய வேண்டும். ஐம்புலன்களின் ஆற்றலுக்குட்பட்டு வழிமயங்கி நடக்கும் மனித குலம் வழிபட்டால் மனம் பக்குவப்பட வேண்டும். வேகமாக நடக்கும் செயற்பாட்டின் விளைவுகள் தவிர இதுவே வழியாகும். இளமையில் மணிவாசகர் மனம் பக்குவமடைய இறை வழிபாட்டையே கைக் கொண்டார். இதுவே எமக்கும் ஏற்றதாகும்.

**தீர்க்கின்ற வாறென் பிழையை**
**நின் சீரருள் என் கொலென்று**
**வேர்க்கின்ற உன்னை விடுதி**
**கண்டாய்விர வார் வெருவ**
**ஆர்க்கின்ற தார்விடை உத்தர**
**கோச மங்கைக் கரசே**
**ஈர்க்கின்ற அஞ்சொடச்சம் வினை**
**யேனை இருதலையே**

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இப்படியும் போராட்டம்

வாடிகனில் ஓரினச்சேர்க்கை திருமணத்துக்கு அங்கீகாரம் அளிக்ககோரி மேலாடை இல்லாமல் பெண்கள் போராட்டம் நடத்தினர்.

வாடிகனில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் கடந்த 13ஆம் திகதி பிரார்த்தனை நடைபெற்றது. ஏராளமான பொதுமக்கள் திரண்ட இப் பிரார்த்தனையில் போப் ஆண்டவர் 16ஆம் பெனடிக்ட் கலந்து கொண்டார்.

அப்போது உக்ரைன் பெண்கள் உரிமை அமைப்பை சேர்ந்த பெண்கள் சிலர், தங்களது மேலாடையை களைந்துவிட்டு அரைநிர்வாணமாக மேடையில் ஏறி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஓரினச்சேர்க்கையாளர் திருமணத்துக்கு அங்கீகாரம் உட்பட அனைத்து உரிமைகளையும் வழங்க வேண்டும் என்பன போன்ற பல்வேறு கோஷங்களையும் எழுப்பினர்.

"ஓரினச்சேர்க்கையாளர்களை நம்புகிறோம்" போன்ற வாசகங்களையும் தங்கள் முதுகில் எழுதி வைத்திருந்தனர். இதனையடுத்து இப்போராட்டத்தில் ஈடுபட்ட 4 பெண்களை பொலிசார் கைது செய்தனர்.









## 'துப்பாக்கி திருமணம்'

அமெரிக்காவில் லாஸ் வேகாஸில் உள்ள ஒரு துப்பாக்கி விற்பனை நிலையம், புது விதமான விளம்பரம் ஒன்றை செய்துள்ளது.

விளம்பரத்தின் பெயர், "துப்பாக்கி திருமணம்". திருமணம் செய்து கொள்ளப்போகும் இருவரும், துப்பாக்கிகள் மீது ஆர்வம் உடையவர்களாக இருந்தால் அவர்களின் திருமணத்தை இந்த துப்பாக்கி விற்பனை நிலையத்திலேயே செய்து கொள்ளலாம்.

இதற்கான கட்டணம் வெறும் 300 டொலர்தான். இந்த விற்பனை நிலையத்தில் திருமணம் செய்து கொள்பவர்கள் எந்த துப்பாக்கியுடனும் போஸ் கொடுக்கலாம்.

இந்தவிளம்பரம்அமெரிக்காவில்ஒருதரப்பினரிடையே கொதிப்பை ஏற்படுத்த, மற்றொரு பக்கமாக துப்பாக்கி அபிமானிகள் திருமணம் செய்துகொள்ள இங்கே வந்து குவிகிறார்கள்.

## 24 லட்சம் பேரின் தெரிவு

அமெரிக்காவைச் சேர்ந்த, ஆண்களுக்கான பிரத்தியேக, இணையதள நிறுவனம், ஆண்டுதோறும், உலகிலேயே, உங்களால் அதிகம் விரும்பப்படும் பெண் யார்? என்ற கேள்வியை கேட்டு, அதன் முடிவுகளை வெளியிட்டு வருகிறது.

இந்தாண்டுக்கான கருத்துக்கணிப்பில், முதலிடத்தை தட்டிச் சென்றுள்ளவர், பிரபல ஹாலிவுட் நடிகை, ஜெனிபர் லாரன்ஸ். இவருக்கு, 22 வயது. மெழுகுச் சிலை போன்ற, இவரது தோற்றமும், அசத்தலான அழகும், பலரையும் அசரவைக்கிறது.

"இவர் தான், எனக்கு பிடித்த பெண்" என, 24 லட்சம் பேர், ஏகமனதாக, ஜெனியை தேர்வு செய்துள்ளனர். மற்றொரு பிரபல ஹாலிவுட் நடிகை, மிலா குனிஸ், இரண்டாவது இடத்தை பிடித்துள்ளார். இணையதள நிர்வாகி, ஜேம்ஸ் பசில் கூறுகையில், குளிரூட்டியில் வைத்த அப்பிள் போல், எப்போதும் கிழுகிழுப்பாக தோற்றமளிப்பதால்தான், ஜெனியை, பலருக்கும் பிடித்துள்ளது. அத்துடன், நடிக்க வந்து, நான்கு ஆண்டுகள் ஆகியும், இதுவரை எந்த சர்ச்சையிலும் அவர் சிக்கவில்லை என்பதும், மற்றொரு முக்கிய காரணம் என்கிறார்.



இலங்கையில்
அதிக விருதுகளை
வென்றெடுத்த
கொமர்ஷல் வங்கி

- இம்முறையும் யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக கண்காட்சி - 2013 இல் பங்கேற்கிறது.
- எமது கண்காட்சி கூடத்திற்கு வருகைதந்து விசேட வெகுமதிகளையும், விசேட பரிசில்களையும் வென்றிடுங்கள்.

COMMERCIAL BANK

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருநாள் போட்டியின் புதிய நடைமுறை சுழற்பந்து வீச்சாளரை பாதிக்கும்



ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளுக்கான புதிய நடைமுறைகளில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களை இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்த்தன எதிர்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த மாற்றங்கள் மறை நிலையான தன்மையை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபை ஏற்படுத்தியுள்ள ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளுக்கான புதிய விளையாடும் நிலைமைகளின் படி முதல் 10 ஓவர்கள் பவர் பிளே ஓவர்களாகக் காணப்படுவதோடு அதன் பின் காணப்படும் 41 ஓவர்கள் 5ஓவர்கள் துடுப்பாட்ட பவர்பிளே ஓவர்களாகக் காணப்படுகின்றன.

அந்த 5 ஓவர்களைத் தவிர ஏனைய நேரங்களில் களத்தடுப்பில் ஈடுபடும் அணி 30 யார் கோட்டுக்கு வெளியே 4 களத்தடுப்பு வீரர்களை மாத்திரம் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதற்கு முன்தாக 5 வீரர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.


இந்த நிலையில் இது குறித்துக் கருத்து தெரிவித்துள்ள மஹேல ஜெயவர்த்தன, இந்த மாற்றம் காரணமாக சுழற்பந்து வீச்சாளர்கள் போட்டிகளில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

தற்போது சுழல் பந்து வீச்சாளார்கள் போட்டிகளில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். தற்போது சுழல்பந்து வீச்சாளர்கள் மறை நிலையான மனநிலையுடன் பந்து வீச்சில் ஈடுபடுவதாகத் தெரிவித்துள்ளார்.

தற்போது சுழல்பந்து வீச்சாளர்கள் குறைந்த ஓட்டங்ளை விட்டுக்கொடுப்பதற்காக மாத்திரம் பந்துவீச்சில் ஈடுபடுவதாகவும் விக்கெட்டுகளைக் கைப்பற்றுவதாக பந்து வீசுவதில்லை எனவும் தெரிவித்தார்.

சுழல் பந்து வீச்சாளர் ஒருவர் உயர்நிலை சுழற்பந்து வீச்சாளராகக் காணப்பட்டு அதிக வகையான பந்துவீச்சுக்ளை கொண்டிருந்தால் மாத்திரமே தப்பித்துக்கொள்ளலாம் எனத் தெரிவித்த மஹேல ஜெயவர்த்தன ஏனையவர்கள் தடுமாறுவார்கள் எனவும் தெரிவித்தார்.

# ஆஸி ஓபன் டென்னிஸ் செரினா, முர்ரே வெற்றி



அவுஸ்திரேலியா ஓபன் டெனிஸ் ஒற்றையர் பிரிவு 2 வது சுற்றில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், ஸ்பெயின்வீராங்கனை கார்பின் முகுருஜாவை சந்தித்தார்.

இதில் செரினா 6-2, 6-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று 3 வது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொருபோட்டியில் பெலாரசின் விக்டோரியா அசரன்கா, கிரீசின் எலினி டேனிலிடோயுவை சந்தித்தார்.

இதில் அசரன்கா 6-1 ;6-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு 2 வது சுற்றில் இங்கிலாந்தின்ஆண்டி முர்ரே போர்த்துகலின் ஜோயோ சவ்சாவை சந்தித்தார்.

இதில் முர்ரே 6-2, 6-2, 6-4 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று 3வது சுற்றுக்கு தகுதி பெற்றார்.



© Reuters

## தப்பியது...

அதனுடன் தொடர்பு கொண்டு நிறுத்துவதற்கு முயற்சித்த போதிலும் எந்தப் பதிலும் அளிக்காமல் அது போய் விட்டதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

எம்வி அமினா என்ற அந்தக் கப்பல், ஜேர்மனியின் டிவிபி வங்கி கொழும்புஉயர் நீதிமன்றத்தில் பெற்ற உத்தரவுக்கு அமைய கடந்த டிசம்பர் 12ஆம் நாள் தொடக்கம் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

கப்பலின் உரிமையாளர்கள் செலுத்த வேண்டிய மில்லியன் கணக்கான டொலர்களுக்காக இந்தக் கப்பல் தடுத்து வைக்கப்பட்டது.

தப்பிச்சென்ற கப்பல் நேற்று இந்தியாவின் இலட்சதீவு கடற்பகுதிக்குச் சென்றிருப்பதாக கூறப்படுகிறது.

இந்தக் கப்பலில் இருந்த 24 மாலுமிகளில் 8 இந்தியர்கள் நாடு திரும்பி விட்ட நிலையில் ஈரானிய மாலுமிகளுடன் மட்டும் அது தப்பிச் சென்றுள்ளது. (செ-11)

## இலங்கைக்கு...

தொடர்ந்து நோர்வே, எஸ்தோனியா, நெதர்லாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் முதல் ஐந்து இடங்களைப் பெற்றுள்ளன.

இதேவேளை உலகில் மிகவும் மோசமான ஊடக சுதந்திரம் நிலவும் நாடாக எரித்திரியா விளங்குகிறது. இது 179ஆவது இடத்தில் உள்ளது.

ஊடகவியலாளர்களுக்குக்கான எல்லையற்ற அமைப்பு 2010 ஆம் ஆண்டு 178 நாடுகளைக் கொண்டு தயாரித்த பட்டியலில் இலங்கை 158ஆவது இடத்தினையும் 2009 ஆம் ஆண்டு 162ஆவது இடத்தையும் பெற்றிருந்தது.

கடந்த 2002-ம் ஆண்டு ஊடகவியலாளர்களுக்கான எல்லையற்ற அமைப்பு தயாரித்திருந்த பட்டியலில் இலங்கை 51 ஆவது இடத்தினைப் பெற்று ஊடக சுதந்திரத்தில் முன்னேறிய நாடாகக் கருதப்பட்டது.

எனினும் கடந்த 2011 மற்றும் 2012 ஆண்டுகளில் இலங்கையில் மிக மோசமான முறையில்ஊடகசுதந்திரம்காணப்படுகின்றதை குறித்த அமைப்புவெளியிட்டுள்ளஅறிக்கையின் மூலம் அறிந்துகொள்ளக் கூடியதாய் உள்ளது. (செ-11)

## நாடாளுமன்றைப் பலப்படுத்தி...

மேற்கொள்ளப்படுமா? அல்லது அரசியல் யாப்பு மாற்றப்படுமா? என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு தொடர்ந்தும் பதிலளித்த அமைச் சர் சுசில் பிரேமஜயந்த,

புதிய பிரதம நீதியரசரின் பதவிக்காலத்தை 5 வருடங்களுக்கு வரையறுக்கும் வகையில் திருத்தங்கள்மேற்கொள்ளப்படுமா? இல்லையா? என்பது தொடர்பில் எதுவும் தெரியாது.

எனினும் தற்போதைய அரசியல்யாப்பு மாற்றப்படாது. நாடாளுமன்றத்தின் பலத்தை மேலும் பலப்படுத்தும் வகையில் அரசியல் யாப்பில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

சோல்பரி அரசியல் யாப்பு 1946-ம் ஆண்டு கொண்டுவரப்பட்டு 48-ம் ஆண்டு நாடு சுதந்திரமடைந்தது முதல் நடைமுறைப் படுத்தப்பட்டது. அதன் பின்னர் 72- ம் ஆண்டு அதற்கு பதிலாக புதிய அரசியல் யாப்பு கொண்டு வரப்பட்டது. இந்த அரசியல்யாப்பும் 78-ம் ஆண்டு வரையில் மாத்திரமே அதாவது 6 வருடங்கள் நடைமுறையில் இருந்தது .

அதன் பின்னர் 78 புதிய யாப்பு தயாரிக்கப்பட்டது. குறித்த அரசியல் யாப்பு இன்று வரையில் 34 வருடங்களாக செயற்பாட்டில் உள்ளது.

சட்டரீதியான அரசியல் யாப்புக்களைக் கொண்டுள்ள எந்தவொரு நாட்டிலும் தற்போதைய நிலைமைக்கேற்ப அரசியல் யாப்புக்களில் திருத்தங்களைக் கொண்டுவர முடியும்.

உதாரணமாக 1987-ம் ஆண்டு காலப் பகுதியில் காணப்பட்ட பிரதான பிரச்சினையை தீர்க்க மாகாண முறைமைக்கு வழிவகுத்த 13-வது திருத்தச்சட்டம் கொண்டு வரப்பட்டது.

அது அன்று ஏற்பட்ட தேவைக்கு ஏற்ப கொண்டுவரப்பட்டது. அதேபோல் குறித்த காலத்திற்கு ஏற்ப எந்தவொரு நாட்டிலும் அதன் அரசியல் யாப்புக்களில் திருத்தங்களை கொண்டுவரமுடியும்.

இதன்போது அரசியல் திருத்தம் தொடர்பிலான விரிவான விளக்கத்தை கொடுக்க முடியுமா? என ஊடகவியாளர்கள் கேட்டபோது,

இப்போதைக்கு அரசியல் திருத்தம் குறித்து தெளிவான விளக்கங்களையோ உள்ளடக்கங்களையோ விபரிக்க முடியாது. அரசியல் திருத்தம் தொடர்பில் ஊடகங்கள் வாயிலாக பலர் பல்வேறான கருத்துக்களை தெரிவிக்கின்றனர்.

யாருக்கும் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க இடமுண்டு. அதற்கமைய அவர் கள் தமது நிலைப்பாட்டினைக் குறிப்பிடுகின்றனர். இது தொடர்பில் ஆளும் அரசாங்கம் ஒரு தீர்மானத்தை எடுக்கும்.இவ்வாறு அரசு ஒரு தீர்மானத்தை எடுத்ததன் பின்னர் நாம் அது தொடர்பில் ஒரு விரிவான பேச்சுக்களை நடத்தலாம். என்றும் கூறினார். (செ-11)

## இலங்கையின் முன்...

கேட்டுக்கொண்டுள்ளார்.

மீனவர்களுக்கு பயிற்சி அளிக்க பயிற்றுவிப்பாளர்களின் ஒத்துழைப்பையும் வழங்குமாறு அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

மன்னார் கரையோரகடலட்டைதொழில்துறை ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக செல்வதாக பசில் ராஜக்ஷ இங்கு சுட்டிக்காட்டினார்.(செ -11)

## ஷிராணி பதவி...

செய்தியாளர் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இருந்த போதிலும் இவை அமெரிக்காவின் இலங்கைக்கான நிதி உதவிகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று இப்போதைக்கு கூற முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

இலங்கைக்கான உதவிகள் குறித்த விடயத்தில் 2012ஆம் நிதியாண்டில் இலங்கைக்கான அமெரிக்காவின் உதவிகளாக 27 மில்லியன் டொலர்கள் வழங்கப்பட்டது. அதில் 13.3 மில்லியன் இரு தரப்பு உதவித் திட்டங்களுக்காக வழங்கப்பட்டது. அவை அடிப்படையில் அமைதி, பாதுகாப்பு, மனித உரிமைகள், பொருளாதார வளர்ச்சி மற்றும் ஜனநாயகத் திட்டங்களுக்காகவே வழங்கப்பட்டது.

2013 ஆம் ஆண்டுக்கு 16.5 மில்லியன் டொலர்கள் இலங்கையினால் கோரப்பட்டுள்ளது. ஆனால் இந்த உதவிகள் மீது தற்போது அங்கு நடக்கும் விடயங்கள் என்ன தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதை இப்போதைக்கு கூற முடியாது என்று விக்டோரியா நூலண்ட் தெரிவித்தார்.

அத்துடன் இன்னுமொரு கேள்விக்கு பதிலளித்த அவர், இலங்கையுடன் தாம் இது குறித்து தொடர்பு கொள்வோம் என்றும் ஆனால் அவர்களால் இந்த விடயம் குறித்து கூறப்படும் காரணங்கள் ஜனாயகத்தை பாதுகாத்தல் என்ற நிலைமைகளை திருப்திப்படுத்துவதற்கு போதுமானவையல்ல என்று தன்னால் கூற முடியாது என்றும் குறிப்பிட்டார். (செ -11)

## வர்த்தக...

தரப்பினர் இதில் தமது படைப்புக்கள் மற்றும் சேவைகளினை காட்சிப்படுத்தவுள்ளனர்.

இன்று காலை 10 மணிக்கு யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படும் இந்த நிகழ்விற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, றிசாட் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிபர், மாநகர முதல்வர், ஆளுநர் உள்ளிட்ட பல பிரதிநிதிகள் விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்கண்காட்சியில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு நுழைவுச்சீட்டு இலவசம் மென்பதுடன் ஏனையவர்களுக்கு 30 ரூபாய் அறவிடப்படவுள்ளது. (செ -11)

## ஐ.நா.மௌன...

எனினும் தற்போதைக்கு இந்த நிலைமைகள் குறித்து கருத்து வெளியிடப் போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் நாளாந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.(செ)

## 58 ஆயிரம்...

இன்னமும் மிதிவெடி அபாயம் உள்ளது.

தற்போது 80 வேலைப் பகுதிகளில் 52 இலட்சத்து 74 ஆயிரத்து 270 சதுர மீற்றரில் மிதிவெடியகற்றும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இன்னமும் 81 வேலைப் பகுதியில் ஒரு கோடி 42 இலட்சத்து 98 ஆயிரத்து 93 சதுர மீற்றரில் மிதிவெடிகள் அகற்றப்பட வேண்டியுள்ளது.

இதுதவிர ஒரு இலட்சத்து 58 ஆயிரத்து 586 தனிநபர் மிதிவெடிகளும், 148 தாங்கி எதிர்ப்பு மிதிவெடிகளும் மீட்கப்பட்டுள்ளன. 2 இலட்சத்து 10 ஆயிரத்து 321 வெடிக்காத வெடி பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை, யாழ்.மாவட்டத்தில் இது வரையில் ஒரு இலட்சத்து 22 ஆயிரத்து 376 தனி நபர் மிதிவெடிகளும், 534 தாங்கி எதிர்ப்பு மிதிவெடிகளும் மீட்கப்பட்டுள்ள அதே வேளை, ஒரு லட்சத்து 41 ஆயிரத்து 161 வெடிக்காத வெடி பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (செ-11)

## நீதவான்கள், சட்டத்...

போன்று இந்தப் படு கொலைச் சம்பவம் திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளது.

சில காவல்துறை உத்தியோகத்தர்களும் இந்த முயற்சிக்காக பயன்படுத்தப்பட உள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியினர் இந்த சதித் திட்டம் குறித்து உன்னிப்பாக கண்காணித்து வருகின்றனர்.

சர்வதேச சமூகமும் இது குறித்து கவனம் செலுத்த வேண்டும்.

குறிப்பாக முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் பாதுகாப்பு தொடர்பில் சர்வதேச சமூகம் கண்காணிக்க வேண்டுமென மங்கள சமரவீர கோரியுள்ளார். (செ -11)


**போட்டிப் பரீட்சைக்கான விசேட கருத்தரங்கு**

❁ பதிவாளர்
சனி 10 மணி – 4 மணிவரை

❁ முகாமைத்துவ உதவியாளர்
19,20 சனி,ஞாயிறு: 25,26 வெள்ளி, சனி
காலை 10 ம்ணி –4 மணிவரை

❁ கிராம சேவையாளர்
சனி, ஞாயிறு 12.30–4.30 மணி

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்
தொடர்புகளுக்கு: 0754164564

(சி-2154)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறு நீரகம் தேவை

34 வயதுடைய சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு A இரத்த வகை உடையவருடைய சிறுநீரகம் அவசரமாகத் தேவைப்படுகிறது. வழங்க விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 0778297440

(1522)



## Deutsch, Dutch, French, English

2013 புதிய வகுப்புகள் விபரம்

ஜேர்மன் – டொச், நெதர்லாந்து – டச்

தூதரக பரீட்சைகளுக்கான புதிய வகுப்புகள் அனைத்தும் 26, 27/01/2013 சனி, ஞாயிறு தினங்களில் ஆரம்பமாகின்றன.

மேலும் London செல்பவர்களுக்கான ஆங்கிலம் AI, French, Italian வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.

தொடர்பு: விவேகானந்தா அக்கடமி

221/1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Tel: Hotline, 0774842464



## யாழ் சர்வதேச வர்த்தக கண்காட்சி கல்விக் காட்சியரங்கு இல.144

விசேட புலமைப்பரிசில்கள், கட்டணக் கழிவுகளுடன் உள்நாட்டு, வெளிநாட்டு கல்வி-தொழில் வாய்ப்புக்கள்

உள்நாட்டில் உயர்கல்வி, தொழிற்கல்வி வழிகாட்டி ஆலோசனைகள்

**சிகரம்**

கல்வி - தொழில் வழிகாட்டி

இலவசம்! இலவசம்! இலவசம்! இலவசம்!

**UK, Australia, New Zealand, Canada, America & Malaysia**

பல்கலைக்கழக அனுமதிகள், விசேட புலமைப் பரிசில்கள்

**50,000/= வருமானம்,**

UK, Australia சான்றிதழ்களுடன்

**ஹொட்டேல் பயிற்சிநெறி**

(With Work Permit)

**30% Discount for Spot Admission**

முன்னணி தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பை வழங்கும்

**'தொழில் திறன் விருத்திப் பயிற்சிநெறி'**

Professional Skills Development

**30% Discount for Registration**

**Mass Communication / Business Studies**

1st Yr Certificate - 2nd Yr Dip in Malaysia

-2 Yrs Degree in University of Wollongong Australia

இந்தச் சலுகைகள் 3 தினங்கள் மட்டுமே

**இப்போதே விரையுங்கள்**

சிகரம் ஊடக இல்லம்

221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்

T.P.: 021 300 80 60 Hotline: 0773 616 798

web: www.sikaram.lk Email: sikarammedia@gmail.com



## கணக்காளர் பதவி

யாழ்.நகரில் இயங்கும் பிரபல்யமான நிறுவனம் ஒன்றுக்கு கணக்காளர் தேவை.

உயர்தரத்தில் வர்த்தகத்துறையில் சித்தியடைந்த ஆண், பெண் இருபாலாரும் இப் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

கணக்குப் பதிவில் முன் அனுபவமும், யாழ்.நகரை அண்மித்து வசிப்பவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

தகைமை உடையவர்கள் தொலைபேசி இலக்கம் உட்பட தங்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பங்களை:-

விளம்பர இல.சி-2153

வலம்புரி

இல.3, 2ம் ஒழுங்கை, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு உடன் அனுப்பி வைக்கவும்.

(சி-2153)



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:

T.P : 021 321 0815, 021 567 1540

E-mail: valampurijaffna@gmail.com



## BECOME AN ENGINEER AT 2017...

இலங்கையின் IESLஅங்கீகாரம் பெற்ற ENGINEER ஆகுங்கள்.

அடிப்படைத் தகுதி:-A/L MATHS 3 PASSES.

- CIVIL ENGINEERING
- MECHANICAL ENGINEERING
- ELECTRONICS AND COMMUNICATION ENGINEERING
- INFORMATION TECHNOLOGY
- COMPUTER SCIENCE & ENGINEERING

போன்ற படிப்புக்களை 4வருடங்களில் நிறைவு செய்து 2017இல் வேலை வாய்ப்பினை பெற்றிடலாம்.

IELTS,BANK BALANCE எதுவும் தேவையில்லை.

சர்வதேச அங்கீகாரம் பெற்றது.• 4வருடங்கள் பட்டப்படிப்பு அண்ணா பல்கலைக்கழகத்தினது சான்றிதழ், இந்தியாவின் தலைசிறந்த பொறியியல் கல்லூரியான SONA COLLEGE OF TECHNOLOGYஇல் அனைத்து வசதிகளுடனுமான கல்வி வாய்ப்பு.

SPOT ADMISSION GIVEN:-18,19,20 ஆகிய திகதிகளில் துரையப்பா விளையாட்டு அரங்கில் யாழ்ப்பாண சர்வதேச கண்காட்சியில் STALL NO:204 இல்

கல்விக் கட்டணம்:- வருடத்திற்கு 2500 அமெரிக்க டொலர் கட்டணத்தை தவணைகளாக பிரித்தும் கட்டலாம்.

மாணவர்கள், பெற்றோர்கள் விரும்பின் வங்கிக் கடன்களுக்கு ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

V4 EDUCATIONAL CONSULTANCY[PVT]LTD

எம்மூடாக அனுமதிகளைப் பெற்ற மாணவர்கள் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் நிறைந்த ஊதியத்துடன் தொழில் புரிகின்றனர்.

0774836084



## Architectural CAD Centre

Personal-Group Classes

Jaffna Vavuniya

**Auto CAD**

2D-Drawing & 3D-Modeling

Lecturer By : Mr. K. N. Muguntham(D/A)

Cert.in Auto CAD Software(2D & 3D)
Faculty of Engineering.
University of Peratheniya(Sri-Lanka)
Cert. in 2D-Drawing &
3D-Modeling in Auto CAD.
Open University of Sri Lanka
Cert. in Auto CAD-2010 (1st Class).
University of Colombo-Sri Lanka
Cert.in Auto CAD (1st Class-B.Top)
Information Technology Park
Ministry of Rehabilitation-Sri Lanka
Dip.in Engineering Drawing&
Auto CAD(1st Class)
IIS-Intermational University - Dublin.

Apply before : 23.01.2013

Contact No:0718617972



USAID FROM THE AMERICAN PEOPLE

SRI LANKA BIZ+ VEGA Volunteers for Economic Growth Alliance

## யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை நிகழ்வில் இலவச வியாபாரத் திட்டமிடல் பயிற்சி

உங்கள் திட்டத்திற்கான வியாபாரத்திட்டத்தினை தயாரிப்பதற்கான செய்முறைப் பயிற்சியை பெற்றுக்கொள்வதற்கு இது ஒரு தனித்துவமான வாய்ப்பு. உங்களுக்கான சந்தையை ஆராய்ச்சி செய்வது மற்றும் சந்தைப்படுத்தும் திட்டத்தினைத் தயாரிப்பது எப்படி என்பதைக் கற்றுக்கொள்ளுங்கள்.

இந்த வியாபாரத்திட்ட பயிற்சியானது, வியாபாரத்திற்கான உச்சப்பயன்பாட்டை வழங்கும் பயிற்சிக்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச நிறுவனத்தினால் (International Institute for Training Development utilizing the Business Edge™) வழங்கப்படவுள்ளது. வியாபாரத் திட்டப் பயிற்சியின் கூறுகள் மற்றும் பயிற்சி முறைகள், முகாமையாளர்கள் மற்றும் முயற்சியாளர்களுக்கான சர்வதேச அங்கீகாரம் பெற்ற பயிற்சிகளின் ஒரு பகுதியாகும்.

**இடம் :-** கேட்போர் கூடம், பொது நூலகம், யாழ்ப்பாணம்

**காலம்:- நான்கு தடவைகள் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், ஒரு நிகழ்வுக்கு 25 பேர் என மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.**

- சனிக்கிழமை, 19 ஜனவரி, 10:00-12:00 மு.ப மற்றும் 15:00-17:00 பி.ப
- ஞாயிற்றுக்கிழமை, 20 ஜனவரி, 10:00-12:00 மு.ப மற்றும் 15:00-17:00 பி.ப

பதிவு நிபந்தனைகள்: மேலதிக தகவல்களுக்கு தொடர்புகொள்ளவும்

**தொலைபேசி :- 024 222 6715, 0777 444355, 0777 444378**

**மின்னஞ்சல்:-**

elango.mariathasan@idd.landolakes.com,

k.gangatharan@idd.landolakes.com

இந்த வாய்ப்புக்கு நிதிவழங்குபவர்கள் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க நிறுவனத்தின் (USAID) VEGA/BIZ+ திட்டமாகும். அமெரிக்க மக்களின் தாராளமான ஆதரவுடன் VEGA/BIZ+, பொருளாதார வளர்ச்சி மற்றும் விருத்திசெய்யப்பட்ட வாழ்வாதார வாய்ப்புகளை இலங்கையில் உருவாக்க சிறிய மற்றும் நடுத்தர வியாபாரங்களில் முதலீடுசெய்கிறது.


# ஆறாம் மாத நினைவலைகள்

அன்னை மடியில்
**16.02.1932**

இறைவன் அடியில்:
**25.07.2012**



## அமரர் பேரம்பலம் மாணிக்கம்

(E.S.P)

தந்தையாய்த் தாயாய் விளங்கினீர்கள்
தளர்வறியா நெறிகாத்தே வாழ்ந்தீர்கள்
சிந்தை மகிழும் பிள்ளைகளைப் பெற்றீர்கள்
சிறந்த நல் மருமக்களைக் கண்டீர்கள்
எந்த வேளையிலும் எவருக்கும் ஏற்ற
உதவிகளைப் புரிந்து வந்தீர்கள்
விந்தை புரி பேரப்பிள்ளைகளை
கண்டு உள்ளம் மகிழ்ந்தீர்கள்
சொந்த பந்தம் ஊர் உறவு
போற்ற வாழ்ந்தீர்கள் - இன்று
எம்மை விட்டுச் சென்று
ஆறு மாதங்கள் ஆனபோதும்
மறக்குமா உம் நினைவு உங்கள்
ஆத்ம சாந்திக்காக வாரிவளவு
கற்பக விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
No.11, Bethesada Place,
Off Dickman's Road,
Colombo -05
Tel: 0112503112, 0771106323

(சி-2147)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org